Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 | கதிர் : 334 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி 14 ஆம் நாள் 31 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+16
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## ஸ்கொட்லாந்து புறப்பட்டார் ஜனாதிபதி கோத்தாபய

*எதிர்ப்புப் போராட்டங்களும் தீவிரம்*

கொழும்பு, ஒக். 31
ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லாந்து க்லாஸ்கோவில் நடைபெறவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டார். 15

## புதன்வரை கனமழை வடக்கில் தொடரும்

### 9ஆம் திகதி மற்றொரு தாழமுக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 31
இலங்கையின் கிழக்கே வங்காள விரிகுடா கடற்பகுதியில் தாழமுக்கம் தொடர்ந்து நிலைகொண்டுள்ளது. இது தொடர்ந்து ஈரப்பதன் மிகுந்த காற்றை தன்னுள் ஈர்ப்பதனால் இலங்கையின் பல 16

## கூரிய ஆயுதங்களுடன் 13 பேர் நேற்றுக் கைது

**கஞ்சாவும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஒக். 31
வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதிக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் தங்கி யிருந்த 13 பேர் பொலிஸா ரால் நேற்று மாலை 5 மணி 15

# அனைத்துத் தேர்தல்களும் விகிதாசார முறைப்படியே!!!

## சிறுபான்மைக் கட்சிகள் கூட்டாக இணக்கம்

கொழும்பு, ஒக்ரோபர் 31
நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை 20ஆம் திருத்தத்தின் ஊடாக மேலும் வலுப் படுத்தியுள்ள நிலையில் நாடாளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சித் தேர்தல்கள், அனைத்து மாற்று அரசியல் கொள்கைகளை முன்னெடுக்கும் கட்சிகளினதும் மற்றும் அனைத்து சமூக குழு வினர்களினதும் பிரதிநிதித்துவங்களுக்கு வழிவ குக்கும் வண்ணம், முழுமையான விகிதார்சார முறைமையின்படியே நடத்தப்பட வேண்டும். இவ் வாறு சிறுபான்மைக் கட்சிகள் தமக்குள் பொது இணக்கப்பாட்டை எட்டியுள்ளன. 15

## தவறான முடிவெடுத்த மாணவி உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 31
முல்லைத்தீவு, முள்ளிய வளை பிரதேசத்தில் பாட சாலை மாணவி 15

## மாணவி சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, ஒக். 31
கிளிநொச்சி அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதி யில் 17 வயதான 15

## மோட்டார் போக்குவரத்து மாவட்ட அலுவலகங்களிலும் இணையவழி முற்பதிவு

15

## சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற வழக்குத் தொடுப்பு பொருத்தமானது

### வரவேற்கிறார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஒக். 31
இலங்கையில் இறுதிப் போர் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உள் ளிட்ட முன்னாள், இந்நாள் முக்கிய பிரமுகர்கள் மீதான குற் றச்சாட்டுக்கள் மீது நடவ 15

தமிழ்த் தேசியம் தொடர்பான


## மக்களின் விருப்பத்தையே தமிழ் எம்.பிக்கள் ஒலிக்கவேண்டும்

மக்களாட்சி செயற்குழு வலியுறுத்தல்

திருகோணமலை, ஒக். 31
ஈழத்தமிழ் மக்கள் கூட்டுரிமையின் அடிப்படையில் அமைந்த கோரிக்கைகளை முன் வைத்து அதனை ஆவணப் படுத்துவதே தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் பிர 15

**முச்சந்தி முரளி**

"இளஞ் சந்ததி இப்படி பிழையான முடிவெடுத்து அநியாயமா அழிஞ்சு போறதைத் தடுக்க ஏதும் வழியைக் கண்டு பிடியுங்கோவன்"



## தரம் 10 இலிருந்து வகுப்புக்கள் ஆரம்பம்

பிரத்தியேக வகுப்புக்களுக்கும் அனுமதி வழங்கியது அமைச்சு

கொழும்பு, ஒக். 31
நாட்டின் அனைத்து அரச பாடசாலைகளி லும் தரம் 10 முதல் 13 வரை யான வகுப்புக்கள் எதிர்வரும் 15

பனை அபிவிருத்திச் சபை

## தலைமையகம் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்படாது

கணக்காய்வுப் பிரிவு மாத்திரமே மாற்றப்பட்டது என்கிறார் தலைவர்

கொழும்பு, ஒக். 31
பனை அபிவிருத்திச் சபையின் தலைமைய கத்தை கொழும்புக்கு மாற்றுவதற்கு எவ்வித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் 15

யாழ். பல்கலைக்கழகத்தில்

## 6 விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாகினர்

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 6 மூத்த விரிவுரை யாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவியுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது. யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை 15

## மனைவியை வெட்டிய கணவர் தவறான முடிவெடுத்து உயிரிழப்பு

புங்குடுதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 31
புங்குடுதீவு மடத்தடிப் பகுதியில் மனைவியை கத்தியால் வெட்டி விட்டு கணவர் தவறான முடிவெடுத்து உயி ரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த வியா 16

## நிர்வாணமாக நடமாடிய சவேந்திர சில்வாவின் சகா



கொழும்பு, ஒக். 31

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் பெயரைக் கூறியவாறு மதுபோதையில் வீதியில் நிர்வாணமாக நடமாடிய ஓய்வுபெற்ற இராணுவ வீரர் ஒருவரை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்பு எண்ணான 119 எண் மற்றும் புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

'நாங்கள் சவேந்திர சில்வாவின் சகாக்கள்' எனக் கூறி சத்தமிட்டு, தகாத வார்த்தைகளைக் கூறி சந்தேகநபர் மோசமாக நடந்து கொண்டார் என்று வீதிக்கு அருகில் வசிப்போர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பல தினங்களாக இந்த நபர் இப்படி நடந்து கொண்டார் என்றும், ஆடைகள் எதுவுமின்றி வீதியில் நடந்து சென்றார் என்றும் அருகில் உள்ள முன்பள்ளியின் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட நபர் புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



## 'எமது உறவுகள் எங்கே? சர்வதேசமே பதில்சொல்'

### காணாமலாக்கப்பட்டோருக்காக யாழில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 31

இறுதிப்போரில் பாதுகாப்புத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? சர்வதேசமே பதில் சொல் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுச் சனிக்கிழமை யாழில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள், தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என இலங்கை அரசு பதில் சொல்ல வேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர், கொட்டும் மழையிலும் எமது பிள்ளைகளுக்காக போராடுகிறோம். எமது பிள்ளைகள் இருக்கிறார்களா? இல்லையா? எமக்குத் தெரிய வேண்டும். எமது பிள்ளைகள் விலங்குகள் கிடையாது. இவ்வளவு காலமும் பிள்ளைகளைத் தொலைத்துவிட்டு வீதி வீதியாகப் போராடிக் கொண்டிருக்கிறோம். ஆகவே எமது பிள்ளைகளுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தர வழிவகை செய்ய வேண்டும் - என்றார். (ம-20)

(A/L) சித்தியடைந்த SMARTGEN கணக்குரிமையாளர்களுக்கு

நெனஜய புலமைப்பரிசில்

உ/த பரீட்சையில் சாதனைபடைத்த 18+ கணக்குரிமையாளராக நாளையை வெல்ல இன்றே விண்ணப்பியுங்கள்.



BOC நனஜய 2020

**நென ஜய சிறப்புப் புலமைப் பரிசில்**

- மாதமொன்றுக்கு ரூ.1000 வீதம் 4 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.48,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2020ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score 200 பெற்றுக் கொண்ட, BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 81 புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

**நென ஜய திறமைக்கான புலமைப் பரிசில்**

- மாதமொன்றுக்கு ரூ.1000 வீதம் 3 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.36,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2020ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score ஐ பெற்றுக் கொண்ட BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 300 புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

**நென ஜய புலமைப் பரிசில்களுக்கான தகைமைகள்**

- உயிரியல் விஞ்ஞானம்/பௌதீக விஞ்ஞானம்/வர்த்தகம்/கலை/உயிரியற் கட்டமைப்புத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பிரதான பாடப்பிரிவுகளின் கீழ் 2020ம் ஆண்டில் நாடளாவிய ரீதியிலும், அவ்வாறே மாவட்ட மட்டத்திலும் உயர் பெறுபேறுகளைப் பெற்ற BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியர் இப் புலமைப் பரிசில்களுக்காக விண்ணப்பிக்கலாம்.
- 2020.08.01ம் திகதியிலிருந்து 2021.01.31 வரை தமது கணக்கில் ரூ. 10,000 குறைந்தபட்ச மீதியைப் பேண வேண்டும்.
- அல்லது 2020.11.01ம் திகதி முதல் (2021.05.04) பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதிக்கு முந்திய திகதி வரை ரூ.10,000க்கான குறைந்தபட்ச மீதி பேணப்பட்டிருக்க வேண்டும். (COVID 19 தொற்று காரணமாக வழங்கப்படும் விசேட சலுகை)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை வங்கியின் BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருப்பவர்கள் பாடசாலை சீருடையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான வர்ணப் புகைப்படத்துடன், www.boc.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொண்ட (Download) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), சந்தைப்படுத்தல் பிரிவு, 16ம் மாடி, இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம், கொழும்பு 01. என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிகத் தகவல்களை BOC இணையத் தளத்திலிருந்தும், FACE BOOK பக்கத்திலிருந்தும் மற்றும் நாடுமுழுவதிலுமுள்ள BOC கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

"விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2021 நவம்பர் 30"

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் கவனவீர்ப்பு






யாழ்ப்பாணம், ஒக். 31

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகம் முன்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதிப் போரின்போது காணாமற் போன, கடத்தப்பட்ட, இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி ஆயிரத்து 700 நாள்களுக்கும் மேலாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாதம் தோறும் 30ஆம் திகதி அவர்கள் போராட்டங்களை நடத்தி வரும் நிலையில் நேற்றும் அவர்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-6)







# கசிப்பு காய்ச்சியவர் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 31

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐந்தாம் வட்டாரப் பகுதியில் கசிப்பு காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேகநபரொருவர் நெடுந்தீவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுகுட்பட்ட ஐந்தாம் வட்டாரப் பகுதியில் கசிப்பு காய்ச்சப்பட்டு வருவதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் குறித்த இடத்தைச் சுற்றிவளைத்தபோதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார்.

கசிப்பு காய்ச்சுவதற்காக பயன்படுத்திய உபகரணங்களும், 5 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. அவற்றையும் சந்தேகநபரையும் நீதிமன்றில் பாரப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ம-125)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

## பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 31

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்துக் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

(ம-125)

# கிளிநொச்சிக் குளங்களுக்குள் விடப்பட்டன இறால் குஞ்சுகள்

**கிளிநொச்சி, ஒக். 31**

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புதுமுறிப்புக்குளம் மற்றும் அக்கராயன்குளம் ஆகியவற்றில் இறால் குஞ்சுகள் நேற்றுமுன்தினம் விடப்பட்டன.**



வடக்கு மாகாண சபை மற்றும் மெசிடோ நிறுவனம் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் குளங்களில் இறால் குஞ்சுகள் விடப்பட்டன. புதுமுறிப்புக் குளத்தில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் இறால் குஞ்சுகளும், அக்கராயன் குளத்தில் 2 லட்சம் இறால் குஞ்சுகளும் இவ்வாறு விடப்பட்டன.

இதேவேளை -மன்னார் பெரியமடு ஈச்சளவக்கைக் குளத்திலும் இறால் குஞ்சுகள் விடப்பட்டன.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் சிறிமோகன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் கு.சங்கீதன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இயக்குநர் யாட்சன் விகிராடோ மற்றும் நன்னீர் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். இவ்வாறு குளங்களில் விடப்பட்ட இறால் குஞ்சுகள் 6 தொடக்கம் 8 மாதங்களில் அறுவடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-6)

# மர்மமான முறையில் கால்நடைகள் இறப்பு

**வவுனியா, ஒக். 31**

**வவுனியாவில் நல்லின மாடுகள் சில மர்மமான முறையில் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. புதியசின்னக்குளம் பிரதேசத்திலேயே மாடுகள் உயிரிழந்துள்ளன.**



நொச்சிமோட்டையைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளரின் 3 பசு மாடுகளும், ஒரு நாம்பன் மாடும் இரு நாள்களுக்கு முன்னர் காணாமற் போயிருந்தன. நேற்றுமுன்தினம் வயலுக்குச் சென்ற சிலர், மாடுகள் சில உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்துள்ளனர். இதுதொடர்பாக கால்நடை வளர்ப்பாளருக்கு அறிவித்துள்ளனர். அதையடுத்து கால்நடை உரிமையாளர் இதுதொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். வேட்டைக்காகப் பயன்படுத்தப்படும் சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி கால்நடைகள் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

(எ-110)

# விளையாட்டு உபகரணங்கள் சிறுவர்களுக்கு வழங்கல்

மன்னார்,ஒக்.31

சர்வதேச போலியோ தினத்தை முன்னிட்டு மன்னார் றோட்டரிக் கழகத்தால் சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. போலியோ தினத்தை சிறப்பிக்கும் முகமாக மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட வட்டுப்பித்தான்மடு கிராமத்தில் சுகாதாரத் திணைக்களத்தால் போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது சிறுவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டதுடன், பெற்றோருக்கு போலியோ தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

(ஐ-213)



# குடியிருப்புக்குள் புகுந்த முதலை உயிரிழப்பு

முல்லைத்தீவு,ஒக்.31

மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து அட்டகாசம் செய்த முதலை, கிராமவாசிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு, உடையார்கட்டு, மூங்கிலாறுதெற்கு கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

மரணச் சடங்கு ஒன்றில் கூடியிருந்த மக்களை குறித்த முதலை தாக்குவதற்கு முயற்சித்த நிலையில் கிராமவாசிகளால் தாக்கப்பட்டு அது உயிரிழந் தது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-13)

# குப்பைகள் கொட்டப்படுவதால் நீர் வடிந்தோட முடியாத நிலை

## பொதுமக்கள் விசனம்

கிளிநொச்சி,ஒக்.31

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்திக்கு அண்மித்த பகுதியில் நீர்ப்பாசனக் கால்வாய் மற்றும் வீதியோரத்தில் காணப்படுகின்ற வடிகால் என்பவற்றில் குப்பைகள் போடப்பட்டு, நீர் வடிந்தோட முடியாத நிலையில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபைக்கு உட்பட்ட கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் செல்லும் வீதியில உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் வாய்க்கால்களில் கொட்டப்பட்டுவருகின்றன.

இதனால் மழை காலங்களில் வெள்ள நீர் வடிந்தோடுவதில் பெரும்சிரமங்கள் காணப் படுகின்றன.

இதனால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-113)





## நீர்நிலை உயிர்காப்பு பயிற்சி

# முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட முல்லைத்தீவு வீரர் கௌரவிப்பு!

முல்லைத்தீவு,ஒக்.31

நீர்நிலைகள் பிறர் உயிர்காப்பு தொடர் பயிற்சியில் கலந்துகொண்டு முதலிடம் பெற்ற கனகரட்னம் நிறோஜன், முல்லைத்தீவு மாவட்டச் செயலரால் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விளையாட்டு பிரிவினரின் அனுசரணையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது மாவட்டச் செயலர் குறித்த சாதனையாளரின் வெற்றி அனுபவங்கள் மற்றும் துறைசார் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

சர்வதேச தரத்துக்கு ஏற்ப 21 நாள்கள் கொண்டதான நீர்நிலைகள் பிறர் உயிர்காப்பு தொடர் பயிற்சிகள் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காரைநகரில் இடம்பெற்றன.

இந்தப் பயிற்சியில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச திம்பிலி கிராம லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கனகரட்னம் நிறோஜன் கலந்துகொண்டு முதல் நிலையைப் பெற்று மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.

(ஐ-19)

# குடும்பஸ்தரைக் கடத்தி கப்பம்; மூவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஒக். 31

பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவித்து கொழும்பு, கிராண்ட்பாஸ் மோலவத்த பிரதேசத்தில், குடும்பஸ்தர் ஒருவரைக் கடத்திச் சென்று சுமார் 10 இலட்சம் ரூபாவைக் கப்பமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள், கடத்தப்பட்டவரது வீட்டின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி கப்பம் கோரினர் என்றும்- இந்த விடயத்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கவேண்டாம் என்று அச்சுறுத்தினர் என்றும் கூறப்படுகின்றது.

அதையடுத்து கடத்தப்பட்டவரின் மனைவியால் தனியார் வங்கியொன்றில் 10 இலட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் கடத்தப்பட்டவர் மாபொல பிரதேசத்தில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவரின் குடும்பத்தாருக்கு மரணஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் முதலில் அவர்கள் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. எனினும், நேற்றுமுன்தினம் இது தொடர்பாக அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பற்றுச்சீட்டு, தொலைபேசி இலக்கம் என்பவற்றை வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் சந்தேகத்தின்பேரில் மூவரைக் கைதுசெய்துள்ளனர்.

(எ-22)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை!

முல்லைத்தீவு,ஒக்.31



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் நிற்பதால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள நிலையில், கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் குறித்த கால்நடைகள் வீதிகளில் நிற்பதால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் பயணம் செய்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

தற்போது மழைக்காலம் என்பதால் விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், கால்நடைகளும் வீதிகளில் திரிவதால் மேலும் விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் கீழ் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகளவான கால்நடைகள் வீதிகளிலேயே படுத்து உறங்குகின்றன. இவற்றைக்கட்டுப்படுத்த பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-9)


SAMSUNG
Galaxy Z Fold3 | Flip3 5G
Samsung
Hey there!
Unfold your world
Level up with stylish covers* and exciting offers
Buds Live at 50% off
Z Fold3 cover with S Pen
Z Flip3 silicon cover with ring or strap
up to 200 GB free data Valid for 60 days
Dialog
0% interest installment plans
Up to 20 Months
Nations TrustBank
standard chartered
Offer starting from 6th October, 2021
Available at:
JKOA | softlogic | softlogic MAX | SINGER | SINGHAGIRI | DAMRO | Dialog The Future.Today. | SLTMOBITEL | mysoftlogic.lk | Kapruka.com Sri Lanka's Largest Online Shop | Keells | And all authorized dealers island wide
Image simulated. The S Pen Fold Edition sold separately and is only compatible with Galaxy Z Fold3 5G. Galaxy Z Fold3 and Galaxy Z Flip3 are 5G ready. Compatibility dependent upon 5G network availability.
*Terms and conditions apply. Covers sold separately. Color and variant availability may vary by country. *Easy monthly installment schemes and card offers are available at different partners respectively subject to the terms and conditions agreed by the bank and the each respective partner. For more details and eligibility of scheme and offers the customer must contact the respective partner or bank. Dialog Data bundle offer is valid only to Dialog customers. The EMI schemes and offers are at the sole discretion of the banks and respective Authorized partners and Samsung disclaims any and all claims/ liabilities associated with the EMI offers.
Galaxy Z Fold3 5G: Rs. 399,999
Galaxy Z Flip3 5G: Rs. 249,999
Exclusive flagship customer hotline
011 7540540

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இப்போதில்லாவிட்டால் எப்போதுமில்லை!

இலங்கைத்தீவில் தமிழ் மக்களின் மீதான நெருக்குதல்கள் மீண்டும் வீரியமடைய ஆரம்பித்திருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் சற்றுத் தணிந்திருந்த இந்த நெருக்கடிகள், ராஜபக்சக்களின் கைகளில் அதிகாரம் சென்ற பின்னர், மீண்டும் வலுப்பெற்றிருக்கின்றன. ஆனால், தமிழர் தரப்போ அவற்றின் ஆபத்துக்களைப் புரிந்துகொள்ளாது எந்தப் பிரக்ஞையும் இன்றி வாளாவிருக்கின்றது .


இந்தத் தீவு சிங்கள– பௌத்தர்களுக்குச் சொந்தமானது என்ற எண்ணப்பாட்டைக் கொண்டிருக்கும் பேரினவாதிகள், இந்தத் தீவின் பூர்வீக மக்களின் அடையாளங்களை அழிக்கும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலைக் காலம் காலமாகச் செய்து கொண்டிருக்கின்றனர். பூர்வீக மக்களான தமிழ் மக்கள் வாழும் வடக்கு– கிழக்கு மாகாணங்களில் இனப்பரம்பலைச் சிதைப்பதன் ஊடாகத் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள பேரினவாதிகள் முயற்சிக்கின்றனர். வடக்கையும்– கிழக்கையும் புவியியல் ரீதியாக பிரிக்கும் நோக்கத்துடன் சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள், போர் வெற்றி நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் நில ஒதுக்கீடுகள், வனவிலங்கு சரணாலயங்கள், வனப்பகுதி ஒதுக்கங்கள் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் கலாசாரத்தையும் வரலாற்றையும் திட்டமிட்டு அழிக்கும் உத்திகளையும் முன்னெடுத்தனர்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், தமிழர்களை தோல்வியுற்றவர்களாகச் சித்திரித்து தமிழர்களின் கூட்டு உளவியலையும், கூட்டு மனவலுவையும் சிதைக்க ஆரம்பித்த பேரினவாதிகள், தமிழர்களின் அடையாளச் சின்னங்களை இல்லாதொழித்தனர். தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழர்களது மண்ணைப் பறிப்பது என்பது இலங்கை சுதந்திரம் பெற முன்னரும், பெற்ற பின்னரும் திட்டம் தீட்டப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆயுதப் போராட்டத்தின் மூலம் இந்த நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதும், ஆயுதப் போராட்டம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் மீண்டும் வீரியம் பெற்றிருக்கின்றன. ஆனால், தமிழர் தரப்பு பிரதிநிதிகள் போதிய எதிர்வினையாற்றாத நிலையில், கிழக்கை விழுங்கிய சிங்களக் குடியேற்றம் இப்போது வடக்கையும் விழுங்கத் தொடங்கியுள்ளது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் ஒரு குறுகிய காலத்தில் சிறுபான்மை இனமாக மாற்றப்பட்டு விட்டனர். இப்போது வடக்கில், வவுனியாவின் எல்லைப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன. அதைவிட அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள் வாழும் கிராமங்களை வவுனியாவுடன் இணைக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எங்களின் பூர்வீக நிலங்கள் மீதான பலவந்தமான பறிப்பைத்தடுக்க வேண்டுமானால் தமிழர் தரப்பில் இருந்து கடுமையான எதிர்வினை வெளிப்படுத்தப்பட வேண்டும். சிறு எண்ணிக்கையானோர் கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்துவதாலோ, கோஷங்கள் எழுப்புவதாலோ எதுவும் நடந்து விடப்போவதில்லை. கிழக்கின் நிலைமையைப் பார்த்த பின்னரும் கூட – வடக்கில் வெள்ளம் கழுத்தளவுக்கு ஏறிவிட்ட நிலையிலும் கூட – தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளில் மாற்றம் தெரியாதது வேதனையே.

ஒவ்வொரு கட்சியும் தனித்தனியே வேறு வேறு நாள்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எம் முன்பாகவுள்ள பேரபாயத்தைப் புரிந்துகொண்டு தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து எதிர்வினையாற்ற வேண்டும். இப்போதும் கட்சி அரசியல் சுயலாப அரசியல் என தமிழ் அரசியல் தலைவர்கள் சிந்திக்காது, அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும். அரசியல் தரப்புக்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே மக்கள் மயப்படுத்தப்பட்ட எதிர்ப்பலைகளை உருவாக்க முடியும். அதன்மூலமே தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்த முடியும். அதை இப்போது செய்யாதுவிட்டால் பின்னர் எப்போதும் செய்யமுடியாமற் போய்விடுவதோடு, தமிழினம் இலங்கையில் இருந்த சுவடே தெரியாமற் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...!




# சேதனமுறை விவசாயத்துக்கு அனைவரும் ஒத்துழையுங்கள்

## மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவிப்பு



**கிளிநொச்சி, ஒக். 31**

**சேதன உரத்தைப் பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் விவசாயச் செய்கைக்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்று மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அதாவது கடந்த போகங்களைவிட வித்தியாசமான முறையில் அதாவது சேதனப் பசளைப் பயன்பாட்டின் மூலம் இந்தப் போகத்தில் விவசாயம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பும் விவசாயமும் பிரதான தொழில்களாகக் காணப்படுகின்றன. கால் நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகளை அடையாளம் கண்டு மேய்ச்சல் தரவைகள் தொடர்பான பிரச்சினை களை எதிர்வரும் காலங்களில் இல்லாமற் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது - என்றார்.

மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் மற்றும் இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், விவசாயம்சார் திணைக்கள அதிகாரிகள், மேலதிக மாவட்டச் செயலர், கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-113)

# மருதங்குளத்தில் மணல் அகழ விவசாய அமைப்பினர் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஒக். 31

முல்லைத்தீவு, மருதங்குளத்தின் நீரேந்துப் பரப்பில் மணல் அகழ்வுக்கு அனுமதியளிக்க வந்த அதிகாரிகளுக்கு புத்துவெட்டுவான் கிராம விவசாயிகளும் மக்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.


மருதங்குளப் பகுதிக்கு புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம், வனவளத் திணைக்களம், காணி அதிகாரி, புத்துவெட்டுவான் கிராம அலுவலர் ஆகியோர் நேற்றுமுன்தினம் வருகை தந்து குளத்தின் பின் பகுதியில் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதற்கு விவசாய அமைப்பினரும் பொதுமக்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மருதங்குளம் கடந்த பத்தாண்டுகளில் இரு தடவைகள் உடைப்பெடுத்துவிட்டது. குளம் முழுமையாக சீரமைக்கப்படவில்லை. இந்தநிலையில் குளத்தின் பின் பகுதியில் மணல் அகழ்வு நடைபெற்றால் குளம் உடைப்பெடுப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன் பெறுமதியான மரங்களும் அழிவடையும் வாய்ப்புக்கள் உள்ளன என்று மக்கள் சுட்டிக்காட்டினார்கள். எனினும் பொது மக்களின் கோரிக்கைக்கு அதிகாரிகள் செவிசாய்க்கவில்லை. இதையடுத்து மாவட்டச் செயலரிடம் முறையிடுவதற்கு பொது மக்களும் விவசாய அமைப்புக்களும் முடிவெடுத்துள்ளன.

(ம-13)

வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி

# துணுக்காய் பிரதேச மக்கள் மணல் பெறமுடியாத நிலை!



முல்லைத்தீவு, ஒக். 31

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதால் துணுக்காய் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் தமது தேவைகளுக்கு மணலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் அ.அனோஜன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

துணுக்காயில் 3ஆயிரம் ரூபாவுக்கு விற்ற மணல் தற்போது 5ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. மல்லாவியில் 5ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்ட மணல் தற்போது 10 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. உள்ளூர் மக்கள் தமது தேவைகளுக்காக, குறிப்பாக வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு மணலைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம் மற்றும் பழையமுறிகண்டி ஆகிய பகுதிகளில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுகின்றது - என்றார். (ஜ-13)



வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், வடக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பில் இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.


# புதிய கணக்கு இலக்கம் தொடர்பில் DFCC வங்கி வாடிக்கையாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்!

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களே,

நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளவாறு, நாம் எமது பிரதான வங்கிச்சேவை கட்டமைப்பின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தியுள்ளதுடன், பின்வரும் தகவல் விபரங்களை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

- உங்களுக்கு புதிய கணக்கு இலக்கமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், எமது தொழில்நுட்ப கட்டமைப்பில் பழைய மற்றும் புதிய கணக்கு இலக்கங்களை நாம் ஒருங்கிணைப்புச் செய்துள்ளமையால் நீங்கள் தொடர்ந்தும் உங்களுடைய பரிவர்த்தனைகள் அனைத்தையும் உங்களுடைய தற்போதைய கணக்கு இலக்கத்தை உபயோகித்து மேற்கொள்ள முடியும்.
- உங்களுடைய பழைய கணக்கு இலக்கத்துடனான தற்போதைய காசோலைப் புத்தகங்களை நீங்கள் தொடர்ந்தும் உபயோகிக்க முடியும்.
- உங்களுடைய பழைய கணக்கு இலக்கத்தைப் பயன்படுத்தி SLIPS/CEFTS ஊடாக எந்த வகையான பரிவர்த்தனைகளையும் நீங்கள் மேற்கொள்ள முடியும்.
- பரிவர்த்தனைகளுக்கு நீங்கள் தொடர்ந்தும் உங்களுடைய டெபிட் அட்டையை உபயோகிக்க முடியும்.
- உங்களுடைய தற்போதைய நிலையான கட்டளைகளில் எவ்விதமான மாற்றங்களும் நிகழாது.

வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட, டிஜிட்டல்ரீதியாக இயக்கப்படுகின்ற ஒரு வங்கி என்ற வகையில், நீங்கள் விரும்பும் பட்சத்தில் உங்களுடைய புதிய கணக்கு இலக்கத்தை உபயோகித்தும் நீங்கள் பரிவர்த்தனைகளை மேற்கொண்டு, தங்குதடையற்ற வங்கிச்சேவை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் தெரிவை மேற்கொள்ள முடியும்.

புதிய கணக்கு இலக்கம் தொடர்பான தகவல் விபரங்கள் தனிப்பட்ட தொடர்பாடல் மூலமாக வெகு விரைவில் உங்களுக்கு அறியத்தரப்படும்.

மேலதிக விபரங்களைப் பெற தயவு செய்து அருகாமையிலுள்ள DFCC வங்கிக் கிளையை அல்லது எமது 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை அழைப்பு மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

இதனால் உங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அசௌகரியங்களுக்காக நாம் மனம் வருந்துவதுடன், இது தொடர்பில் உங்களுடைய பொறுமைக்கும், புரிந்துணர்வுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

0112 350000 www.dfcc.lk

ICRA லங்கா ரேட்டிங் [SL] AA- (ஸ்திரம்), ஃபிச் ரேட்டிங் A+ (lka) ஸ்திரமான தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு


# 'நேசக்கரங்கள்' சஞ்சிகை வெளியீடு



யாழ்ப்பாணம்,ஒக்.31

'நேசக்கரங்கள்' என்னும் இணைய சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கடந்த 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர்மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பிராணத்தைவிட்டு முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 31 வருட நிறைவை முன்னிட்டு அந்த அவலத்தை அடையாளப்படுத்தும்முகமாக இந்த சஞ்சிகை வெளியிடப்பட்டது. குறித்த சஞ்சிகை அகதி என்னும் பெயரில் ஒவ்வொரு வருடமும் வெளிவந்த நிலையில், இந்த முறை புத்தாக்க அடிப்படையில் நேசக்கரங்கள் எனும் பெயர் கொண்டு வெளிவந்துள்ளது.

நிகழ்வில் அல்ஹாஜ் ஏ.சி. எம். கலீஸ் ,அல்ஹாஜ் பரீட் இக்பால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர்கள் திருவரங்கன் மக்கள் பணிமனையின் தலைவர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஜ-125)



பிரிட்டன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளினதும் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களுக்கு மத்தியில் பிரபுக்கள் அவையின் அட்லீ அறையில் மைக்கேல் நேஸ்பி பிரபுவினால் அண்மையில் வழங்கப்பட்ட விருந்துபசாரத்தின்போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றினார். (ம)




# புலிவாலைப் பிடித்த நிலைமையில் அரசு!

## சாடுகின்றது ஐ.தே.க.



**கொழும்பு, ஒக்.31**

**ராஜபக்ச அரசுக்குக் கைகொடுத்த சீனா, தற்போது அவர்களின் கன்னத்தில் அடிக்க ஆரம்பித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

இந்த அரசு ஆட்சியைப் பொறுப்பேற்கும் போது சீனாவின் ஒத்துழைப்பு கிடைத்தது. அந்த ஒத்துழைப்புக்கான நன்றியுணர்வை இப்போது சீனா எதிர்பார்க்கின்றது. அதனால் நாட்டின் வெவ்வேறு முக்கிய இடங்களை சீனாவுக்கு வழங்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

தரத்தில் குறைவான உரத்தைக் கொண்ட கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்க முன்னரே இவர்கள் கடன் அனுமதிப் பத்திரத்தையும் வெளியிட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் மறைமுகக் கொடுக்கல் வாங்கல் காணப்படுகின்றமை தெளிவாகிறது. தரத்தில் குறைந்த உரம் இறக்குமதி செய்யப்படக்கூடாதெனத் தெரிவித்து பெரும் எதிர்ப்புக்கள் வெளிப்பட்டுள்ளமையால் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன.

இதன் காரணமாக சீன அரசாங்கம் இந்தக் கடன் அனுமதிப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ள மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இணைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. கைகொடுத்த சீனாவே ராஜபக்ச அரசுக்குக் கன்னத்தில் அடிக்க ஆரம்பித்துள்ளது- என்றார். (எ-இ)

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுக்கு நீதிமன்றம் தடை!

கொழும்பு, ஒக். 31

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ராஜா கொல்லுரேவை நீக்கியதற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. மாவட்ட நீதிவான் அருண அலுத்கேவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான ராஜா கொல்லுரே கடந்த 24ஆம் திகதி உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவியிலிருந்து நீக்கப்படுவதாக அந்தக் கட்சியின் மத்திய குழு அறிவித்திருந்தது. வடமேல் மாகாண ஆளுநராகச் செயற்பட்டு வரும் இவர், 21ஆம் திகதி பாடசாலைகளுக்கு சமுகமளிக்காத ஆசிரியர்கள், அதிபர்களின் நவம்பர் மாத சம்பளம் இடைநிறுத்தப்படும் என அறிவித்திருந்த நிலையில் இந்தத் தீர்மானம் கட்சியால் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சிக்கலைத் தீர்க்க பாலியல் இலஞ்சம்; கம்பி எண்ணும் பொலிஸ் அதிகாரி!

கொழும்பு, ஒக்.31

பெண்ணொருவரிடம் பாலியல் மற்றும் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க புத்தளம் மாவட்ட நீதிபதி அசேல த சில்வா உத்தரவிட்டார். வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய, பிரதான பொலிஸ் பரிசோதகரொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிலாபம், கரவிடாகார பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பதிவு செய்த முறைப்பாட்டுக்கு அமைய, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த 28ஆம் திகதி மாலை வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார். புத்தளம், கபடா மாவத்தையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டார்.

முறைப்பாடு பதிவு செய்துள்ள பெண் வண்ணாத்தில்லு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்திருந்த நிலையில், தற்போது இருவரும் குடும்பப் பிரச்சினை காரணமாகப் பிரிந்து வாழ்கின்றனர். எனினும் இருவரும் ஒரே கட்டடத்தில் வேறுவேறாக கடைகளை நடத்தி வருகின்றனர்.

அதனால் கணவருக்கும், மனைவிக்கும் இடையே தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் பல முறைப்பாடுகள் வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டதுடன், பொலிஸாரும் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் அந்தப் பெண்ணை கைதுசெய்து விளக்கமறியலில் வைக்க வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். அதேநேரம், பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையிலுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பெண்ணிடம் ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் பாலியல் இலஞ்சம் கோரியுள்ளார் என்று கூறப்படுகின்றது. இதுதொடர்பில் பெண் பதிவு செய்த முறைப்பாட்டுக்கமையவே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# கடந்த அரசுகளைவிடவும் மோசமானது எமது அரசு!

*ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் கம்மன்பில*

கொழும்பு, ஒக். 31

**அமைச்சுப் பதவிகளை வகித்துக்கொண்டு அரசின் தவறான தீர்மானங்களுக்கு தலையாட்டிக் கொண்டிருந்தால் எதிர்காலம் எம்மைச் சபிக்கும். அதனாலேயே மக்களிடம் அனைத்தையும் பகிரங்கப்படுத்த தீர்மானித்துள்ளோம். ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் ரணில் ஆகியோரது ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் முறையற்ற வகையில் எமது அரசு அமெரிக்க நிறுவனத்துக்கு யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை விலை மனுக்கோரல் இல்லாமல் வழங்கியுள்ளது என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**



இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

புறக்கோட்டையில் உள்ள சொலிஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'மக்கள் பேரவை' மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

யுகதனவி மின்நிலைய ஒப்பந்தத்தில் இரண்டு பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திறைசேரிக்கு சொந்தமான 40 சதவீத பங்குகளையும், புதிதாக அமைக்கப்படும் மின்நிலையத்துக்கு எரிவாயு விநியோகத்தையும் அமெரிக்காவின் நியூபோர்ட் நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பிலான ஒப்பந்தம் தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளது.

யுகதனவி மின்நிலையத்தை அபிவிருத்தி செய்தல், இயற்கை எரிவாயு திரவ விநியோகம் தொடர்பிலான பகிரங்க விலைமனுக்கோரல் கடந்த பெப்ரவரி மாதம் விடுக்கப்பட்டது. நிர்வாகக் கப்பல், எரிவாயு விநியோகக்குழாய் ஆகியவை தொடர்பிலான மனுக்கோரல் மாத்திரமே விடுக்கப்பட்டது, எரிவாயு விநியோகத்துக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த அமெரிக்க நிறுவனம் விலை மனுக்கோரலில் பங்குபற்றவில்லை. தற்போது எந்தவிதமான விலை மனுக்கோரலும் இல்லாமல் இந்த நிறுவனத்துக்கு பங்குகள் வழங்கப்பட்டுள்ளமை முறையற்றதாகும். முன்னர் ஆட்சியில் இருந்த அரசுகளில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் எந்த அரசும் விலைமனுக்கோரல் இல்லாமல் எந்தவித அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவில்லை.

கடந்த அரசுகளைக் காட்டிலும் எமது அரசு முறையற்றவகையில் செயற்படுகிறது என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பிறநாடுகளுக்கு தேசிய வளங்களை வழங்குவது ஆபத்தானது.

அதிலும் அமெரிக்கா என்பது மிகவும் அச்சுறுத்தலானது. அமைச்சுப்பதவிகளை வகித்துக்கொண்டு அரசு எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் தலையாட்டிக் கொண்டிருந்தால் எதிர்காலத் தலைமுறையினர் எம்மைச் சபிப்பார்கள். இதன் காரணமாகவே தவறுகளை பகிரங்கமாக வெளிக்காட்டியுள்ளோம்- என்றார். (எ-இ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
05 . 05 . 1979

மறைவு
01 . 10 . 2021

## அமரர் குகனாந்தராஜா ஸ்ரீகுகன்

**(மல்லாகம் தபாலகம்)**

உனக்கென உருகியழ இத்தனை பேர் இருந்தும்
வனப்புறு வாழ்வை நீ மறந்தது ஏனோ?
ஏதில்லை உன்னிடம்? எதற்காய் இப்பாதிவழி வெறும்
செய்தி என மாறாதோ உன் பிரிவு?
கரடு முரடெனக் கலந்த ஓர் கலவை நீ
ஓர் சின்னக் குழந்தையை உன்னில் கண்டவர் சிலரே
அஸ்தமிக்கும் வரை அரசாண்டவன் நீயடா
விழிகள் நனைந்திட விடை கூறுகின்றோம்



அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (29.10.2021) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

குடும்பத்தினர்

(cs.40822) (2.6)




## நியூஸிலாந்தில் வழங்கப்படுவதுபோன்று எமக்கும் சம உரிமைகளை வழங்குக

*சாணக்கியன் எம்.பி. கோரிக்கை*

கொழும்பு, ஒக். 31

நியூஸிலாந்தில் சிறுபான்மை மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படுவதுபோன்று எமக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தினார். இலங்கைக்கான நியூஸிலாந்து தூதுவர் மைக்கல் அப்லட்டனுக்கும் சாணக்கியனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே சாணக்கியன் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நியூஸிலாந்து நாடானது எமது நாட்டைப்போன்றே சிறுபான்மை மற்றும் ஆதி குடியிருப்புக்களைக் கொண்ட நாடாகும். ஆனால் அங்கு அவர்களுக்கு உரிய சமஉரிமை வழங்கப்படுகின்றது. அந்த நாட்டுப் பிரதமர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றார். அவ்வாறுதான் எம் உரிமைகளும் எமக்குக் கிடைக்க வேண்டும்'- என்றார். (ம-213)

# யுகதனவி பங்கு விற்பனை திருட்டுத்தனமாக அனுமதி!

***நிதியமைச்சர் பஸிலை சாடுகிறார் விமல் வீரவன்ஸ***

கொழும்பு, ஒக். 31

எதிர்க்கட்சியாக இருக்கும்போது தேசப்பற்றாளர்களாகவும், ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டுக்கு எதிரிகளாகவும் செயற்பட முடியாது. யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை நிதியமைச்சர் இரகசியமான முறையில் அமைச்சரவைக்கு சமர்ப் பித்து திருட்டுத்தனமாக அனுமதி பெற்றுக்கொண்டார் என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள சொலிஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'மக்கள் பேரவை' மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை அவர் அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தவில்லை. பொய்யுரைப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் வகையில் நியூபோர்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மிகுதியாக இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. அதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது.

அரசுக்குள் இருந்தும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம், வெளியேற்றப்பட்டாலும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். ஏனெனில் எமக்கும், சாதாரண மக்களுக்கும் பிற நாடுகளில் வாழும் உரிமை கிடையாது. கொவிட் தாக்கத்தின் காரணமாக அமைச்சரவைக் கூட்டம் நிகழ்நிலை முறைமை ஊடாக இடம்பெறுகிறது. அதை ஒரு தரப்பினர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அமெரிக்காவின் நியூபோர்ட் நிறுவனத்துக்கு யுகதனவி மின்நிலையத்தின் பங்குகளை நிரந்தரமாக வழங்கும் அமைச்சரவைப் பத்திரம் திருட்டுத்தனமான முறையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற மறுநாளே நாங்கள் அறிந்தோம். அமைச்சரவையில் பேசப்படாத ஒரு விடயத்துக்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்பதை அறிந்து ஆச்சரியமடைந்தேன். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நாட்டு மக்கள் வழங்கிய ஆணையை பிறிதொரு தரப்பினர் கொள்ளையடிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மிகுதியாகவுள்ள ஒப்பந்தத்தை கைச்சாத்திட ஒருபோதும் இடமளிக்க முடியாது. அமைச்சு பதவிகளைக் காட்டிலும் நாடு முக்கியம் என்பதற்காகவே போராடுகிறோம். மக்கள் ஆணையைக் கொள்ளையடிக்க முயற்சிக்கும் தரப்பினரது நோக்கத்தை தோல்வியடையச் செய்வதில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (எ-இ)

Baby Photo
**PRINTING SOLUTIONS**
91, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 6912 076 141 9308

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பழம்பெரும் 30 வருட அனுபவத்தைக் கொண்ட Baby Photo நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- **காசாளர்**
  - பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
  - 21 தொடக்கம் 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
  - Ms Office &Computer Knowledge தெரிந்திருத்தல்
  - தமிழ், ஆங்கிலம் உட்பட சிங்களம் ஓரளவு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
  - முன் அனுபவம் மேலதிகதகைமைகளாகக் கொள்ளப்படும்.
- **Graphic Designer - I**
  - Adobe Photoshop
    ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- **Graphic Designer - II**
  - Coral Draw
  - Adobe Illustrator
    மேற்குறிப்பிட்ட துறையில் அனுபவம் உள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும்விண்ணப்பிக்கலாம்.
- **Studio Work , Printing & Designing**
  பழக விரும்புபவர்கள் ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 15.11.2021 இற்கு முன்னதாகக்கீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரி/தபால் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**மின்னஞ்சல் முகவரி : babyphotoprintingsolutions@yahoo.com**
**தபால் முகவரி : பேபிபோட்டோ**
**இல 91,பலாலிவீதி,**
**திருநெல்வேலி.**

(CS 17876) (3.6)

## விற்பனை பிரதி நிதி தேவை

ராஜகிரியில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு யாழ். பிராந்தியத்தில் ஆர்வமும் துடிப்பும் மிக்க வெளிக்கள விற்பனைப் பிரதி நிதி உடன் தேவை.

- காட்வெயார், இலத்திரனியல் பொருட்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் போன்றவற்றில் 3 அல்லது 4 வருட முன் அனுபவம்.
- சொந்தமான மோட்டார் சைக்கிள் வைத்திருக்க வேண்டும்.
- மாத வேதனம் 55, 000/- தொடக்கம் 65,000/-

**இன்று தொடக்கம் ஏழு நாட்களிற்குள் விண்ணப்பிக்கவும்.**

E-mail : careers@somapalaco.com
**Somapala & Company (PVT) Ltd**
No.45, Walikadawatta Road, Rajagiriya.

**தொடர்பு**
**070 491 6242**
**070 698 8871**

(ACO 17625)(3.6)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

**சுப்பையா திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)



தோற்றம் 09.09.1925
மறைவு 19.10.2014
திதி : ஏகாதசி

பாங்காக எம்மை வளர்த்த பண்புயர் தெய்வமே!
பாரினிலே ஏழு ஆண்டுகள் பறந்தோடிச்
- சென்றதுவோ அப்பா!
நீண்டு செல்லும் உங்கள் நினைவுகள்
எப்போதும் நிலைத்திருக்கும்
எம்மோடு உங்கள் ஆத்ம சாந்திக்கு
வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"மூர்த்திவாசம்"
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்.


(cs 40765) (2.6)

**வாடிக்கையாளர் அனைவருக்கும் தித்திக்கும் தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்**

**யாழ் மண்ணின் முன்னோடி**

ANNAI NAGAA FOOD City

# அன்னை நாகா பூட் சிற்றி



**இன்று முதல் 04.11.2021 ஆம் திகதிவரை வாடிக்கையாளர்களின் நலன்கருதி விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படுகின்றன**



| யாழ் நகர் | கொக்குவில் | நல்லூர் |
|---|---|---|
| 175, K.K.S Road, Jaffna. Tel: 021 222 5515 | No.38, K.K.S.Road Kokuvil. Tel: 021 221 7133 | 341,343, Pointpedro Road, Nallur, Jaffna. Tel: 021 221 7515 |

**175,K.K.S.Road. Jaffna. T.P: 021 222 5515, 021 221 6889**

(CR 35491) 1-6

# தொழிலதிபர் உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு...!



அவுஸ்திரேலியாவிற்கான வியாபார வீசா...

அவுஸ்திரேலியாவில் நிரந்தர வசிப்பிடம் மற்றும் குடியுரிமை பெறுவதற்கான இலங்கை தொழிலதிபர்களுக்கு ஓர் வாய்ப்பு..

- உங்களுக்கு தேவையான ஏனைய வீசா தொடர்பாகவும் எம்மை அழைக்கவும்.

damien@sanjicaldera.com

Sanji Caldera Associates
Migration Consultants
www.sanjicaldera.com

077 88 97 853

# பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு அலுவலர்களை நியமிக்கத் தீர்மானித்துள்ளோம்.

01. நிர்வாக அலுவலர் - Administrative Officer - வயது 40க்கும் 60க்கும் இடைப்பட்டவர்கள்,
க.பொ.த. (உ/த) சித்தி, ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் தேர்ச்சி உள்ளவர்கள், கணினி தொடர்பான திறன் உடையவர்கள்.

02. அலுவலக உதவியாளர் மற்றும் மைதான பராமரிப்பாளர் - Office Assistant cum Ground Assistant - வயது 25க்கும் 50க்கும் இடைப்பட்டவர்கள் க.பொ.த. (சா/த) சித்தி, மைதான பராமரிப்பில் அனுபவம் உள்ளவர்கள்.

விண்ணப்பங்களை **செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்ட சங்கம், 125, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **12.11.2021**க்கு முன்பதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்ட சங்கம்.**

(CR 35496) (3.6)

# தீபத் திருநாளை முன்னிட்டு

யாழ் நகரில் எங்கும் இல்லாத

## மாபெரும் ஆடை விலைத் தள்ளுபடி



சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்து விதமான சாறி, சல்வார், டொப்ஆண்களுக்கான அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் முந்துங்கள்

லலிதாரெக்ஸ் Lalitha Tex

5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம். New Market Jaffna. 021 222 5260

**ஸ்ரீ லலிதா பெஷன் Sri Lalitha Fashion**

இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். **T.P:021 222 4003**

(CR 35447) 1-7

# Vacancy for Clinical Supervisor

Shanthiham- Association for Health and Counselling (AHC) is a Non-Governmental, Non-profit organization, based in Jaffna, committed to support the wellbeing of individuals, families and communities through providing psychological and community-based psychosocial services.

Shanthiham is currently looking for a qualified Clinical Supervisor to best support our counselors with clinical supervision including clinical skill training, competency based and constructive feedback on skills, and evaluation of competencies.

**Qualifications & Requirements**

- Minimum a Master's Degree in Clinical Psychology with the formal qualifications in Supervision with the minimum five years of relevant experience in the human services area
- Fluent in Tamil, both written and verbal is highly preferred.

**Please send your updated CV within 07 days of this advertisement by E-mail:**

hr.shanthiham@gmail.com
Human Resources Officer, Shanthiham
8, Katpahavinayagar Lane,
Jaffna,
Office Tel: +94 021 222 3338

(CR 35489) 1/6

# விற்பனைக்கு

**சாந்திகம் நிறுவனத்தில்**

பாவிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் (அலுவலக மேசைகள், கதிரைகள்) பிளாஸ்ரிக் கதிரைகள், இரும்பு மேசைகள் அலுமாரிகள், சைக்கிள்கள், இலத்திரனியல் உபகரணங்கள் போன்றவை விற்பனைக்கு உண்டு. கார்த்திகை, திங்கள் முதல் வெள்ளி வரை (1-5ம் திகதி வரை) காலை 8.00 மணி முதல் 5மணி வரை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

சாந்திகம். 8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 021 222 3338

(CR 35490)(3.6)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சாரதியாக கடமையாற்றும் **அன்னலிங்கம் இளஞ்செழியன்** அவர்களின் தந்தை

## சிவகுரு அன்னலிங்கம்

அவர்கள் நேற்றுமுன்தினம் (29.10.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,
**பிரதேச செயலகம் வேலணை.**

(cs 40842) (2.6)

# வேலை வாய்ப்புக்கள் ஹோட்டல் ஓவியா

HOTEL OVIYA

**01. உணவகப்பணியாளர்கள் (Restaurant Stewards)**
அனுபவம் வாய்ந்த உணவகப்பணியாளர்கள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் (Motor bike License) உள்ள Home Delivery Boy தேவை.

**02.களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)**
உணவகத்தில் களஞ்சியக்காப்பாளராக வேலைசெய்த அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**03. தொழில் நுட்பவியலாளர் (Technician)**
Electrical, Plumbing, A/C Repairing, Generator Repairing தொடர்பான தகமையுடையவர்கள் தேவை.

**04. சமையலாளர் (Cook)**
இந்தியா, இலங்கை மற்றும் சைனீஸ் உணவு வகைகள் சமைப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை

**தொடர் புகளுக்கு: முகாமையாளர் (Manager)**
**0773660828**

(CS 00915) (3.6)

# Vacancy for Web Application Developer

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the post of Web Application Developer.

**Qualifications:**

- Degree in the field of Computing/IT
- Sound technical & analytical skills
- Good programming knowledge specifically in PHP, HTML/CSS and Javascript
- Knowledge in Database Management Systems & SQL
- Knowledge in Mobile programming is a plus
- Fluency in English is beneficial

**Send your CV to:**
**siva@monthlywarranty.com**

(CR 35804) (3.6)

# அலுவலக உதவியாளர் - பெண் மற்றும் விற்பனை பிரதிநிதி ஆண் தேவை

எமது நிறுவனத்திற்கு அலுவலக வேலைகளுக்கு உதவியாளர் (பெண்) பணிக்கு உடன் தேவை. அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கணினி / ஆங்கில அறிவு உடையோராக இருத்தல் அவசியம்.

எமது நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதிகள் (ஆண்) **மன்னார், வவுனியா, திருகோணமலை** ஆகிய இடங்களில் உடன் தேவை. ஆவர்முள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு :**
**071 864 9221, 021 567 0570**

(CS 17890) (3.6)

## இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன், வண்ணார்பண்ணை முருகமூர்த்தி கோயிலடியில் அமைந்துள்ள ஐங்கரன் சனசமூக நிலையத்தில், இன்று காலை 9.30 மணிக்கு கண்பரிசோதனையும், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும் நடைபெறவுள்ளது.

(ஒ-5)

## விபத்தில் முதியவர் காயம்

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி ஏ -9 வீதியில் தனியார் வங்கி முன்பாக பாதசாரிக் கடவையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த 75 வயதான முதியவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

பாதசாரிக் கடவையை முதியவர் கடக்க முயன்றபோது டிப்பர் மோதியதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

முதியவரின் கால் விபத்தில் துண்டாடப்பட்டுள்ளதுடன், தலைப்பகுதியிலும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஒ.214)

## மக்களுக்கான அறிவூட்டல் மாதத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

தெல்லிப்பழை,ஒக். 31

மக்களுக்கான அறிவூட்டல் மாதத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இலங்கைப் பொலிஸாரால் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வரை மக்களுக்கான அறிவூட்டல் மாதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று தெல்லிப்பழைச் சந்தியில் மக்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது போக்குவரத்து நடைமுறைகள், குற்றச்செயல்களைத் தடுக்கும் முறைகள் மற்றும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் போன்ற விடயங்கள் விழிப்புணர்வாக நிகழ்த்தப்பட்டன.

நிகழ்வில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாம் இந்துக சில்வா, காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் கொட்டகட்சி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ-125)

## உர விநியோகம்

சாவகச்சேரி, ஒக். 31

நாவற்குழி மேற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான உரம் வழங்கும் செயற்பாடு நாளை திங்கட்கிழமை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெறவுள்ளது. விவசாய நிலத்துக்கு ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது வயற்காணிப் பதிவுச் சீட்டு அல்லது காணிக்குரிய உறுதி போன்றவற்றைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும் என்று அமைப்பின் செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-9)

# முல்லைத்தீவு மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறப்பு

முல்லைத்தீவ,ஒக்.31

**முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.**



இலங்கையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இல்லாது இயங்கிய ஒரே ஒரு மருத்துவமனையாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை காணப்பட்டது. இந்த நிலையில் நீண்ட காலத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக பல்வேறு கொடையாளர்களின் 40 மில்லியன் நிதி உதவியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் க.வாசுதேவா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை உணர் அழியியல் சங்கத் தலைவர் பேரா சிரியர் மாகொமுகம கலந்துகொண்டு நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

மேலும் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மு.உமாசங்கர், அரச மருத்துவச் சங்கப் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை மருத்துவர்கள், மருத்துவமனை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் தாதி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ-19)

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 04 . 1945



இறப்பு 28 . 10 . 2021

**சரவணமுத்து பாலசுப்பிரமணியம் (சித்தப்பா)**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் கடந்த (28.10.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அன்னம்மாவின் அன்பு மகனும், கோசலாதேவியின் பாசமிகு கணவரும், சுபாஜினி, ஜங்கரன் (ஜேர்மனி) மயூரதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூமா, திருஸி ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜினா, ஆரபி, வியா ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவமலர், பாலச்சந்திரன் (U.K) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11.00 மணியவில் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொலைபேசி இலக்கம்**
**077 476 4428**
**077 885 1772**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**அளவெட்டி வடக்கு**

## மரண அறிவித்தல்



தோற்றம் 09.04.1967

மறைவு 22.10.2021

# கந்தையா அருணகுலசிங்கம்

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா Vancouver ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அருணகுலசிங்கம் அவர்கள் கடந்த (22.10.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா, பத்மாவதி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், அமுதினி அவர்களின் பாசமிகு தந்தையும், தர்மகுலசிங்கம் (இலங்கை), வர்ணகுலசிங்கம் (இலங்கை), நகுலகுலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற கோகுலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.11.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு Hamilton Harron Funeral Home 5390 Fraser St, Vancouver, BC V5W 2Z1, Canada எனும் இடத்தில் நடைபெற்று அதே இடத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நேரடி ஒளிபரப்பு இணைப்பு**
https://urldefense.com/v3/
http://url8454funera web.com

**தகவல் : அமுதினி (மகள்)**

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| அமுதினி | (மகள் ) | : + 17788632263 |
| தர்மகுலசிங்கம் | (சகோதரன்) | : + 94778070492 |
| வர்ணகுலசிங்கம் | (சகோதரன்) | : + 94772024021 |
| நகுலகுலசிங்கம் | (சகோதரன்) | : + 41764342045 |
| ராஜ் | (மச்சான் ) | : + 16048366593 |

(CS 40841) (3.6)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் 5 ½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு 077 668 1670 (CR 35493) (3.6)

## தரம் - 06 முதல் 11 வரை ZOOM வழி தமிழ்

வகுப்புகள் மாதாந்தம் 200/- கட்டணத்தில்
076 454 5709 (CS 17874) (3.6)

## வீடு வாடகைக்கு / விற்பனைக்கு

உங்கள் வீடு / காணி விற்க அல்லது வாடகைக்கு கொடுக்க இருந்தால் அழைக்கவும் சிறந்த முறையில் தீர்த்து தரப்படும். RR Estate Agent
077 473 7737 / 070 374 4444 (CR 35802) (3.6)

## வேலையாள்கள் தேவை

விற்பனையாளர் (ஆண் / பெண்)
வாகன சாரதி தேவை.
077 7077193, 077 873 0114 (CS 40840)(2.6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281 (m 17806) (2.6)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எண்ணை ஆலைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண் / பெண்
077 171 2336 (CS 40838)(3.6)

## அறை வாடகைக்கு உண்டு

601/2 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் (வேம்படிச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி 100 மீ.தூரம்) அமைந்துள்ள வீட்டின் மேல் மாடியில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. (CS 40809)(3.6)
077 431 9981 / 077 897 4883

## கடை வாடகைக்கு

A-9 வீதி, நொச்சிமோட்டையில் (வவுனியா நகரில் இருந்து 4 1/2 Km தூரத்தில்) 3000 சதுர அடி அளவுடைய கடை வாடகைக்குண்டு. (cs.00914) (2.6)
077 386 4642

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 இல் பிறந்த தனியார் நிறுவனத்தில் (நிரந்தரம்) பணியாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. (cs.00913) (2.6)
077 828 1110

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் 2015 சிவப்பு ALTO CAM - xxxx விற்பனைக்கு உண்டு. 34000km, Power Shutter, Power Steering Manual
071 444 4204 (ACO 17629)(3.6)

## Show Room Administrator தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் ஏற்றுமதி நிறுவனத்திற்கு கணினி அனுபவமுள்ள Administrator தேவை. A/L or Diploma Level தகைமையுடன் விண்ணப்பிக்கலாம். (ACO 17631)(3.6)
தொடர்பு : 078 843 5093

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள 7 அடி 8 இஞ்சி உயரமுடைய 13 அடி அகலமான இரும்பு சுருக்குக் கேற் விற்பனைக்கு உண்டு. சலவை இயந்திரமும் விற்பனைக்குண்டு. (CS00916)(3.6)
077 339 3590 / 024 222 2681

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்
வயது 38, நட்சத்திரம் - பூராடம், கல்வி அறிவு குறைந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகனுக்கு லண்டன் மற்றும் இலங்கை வாழ் இரட்டை பிரஜா உரிமையுண்டு. மணமகனுக்கு தேவையான பொருளாதார வசதியுண்டு.
விளம்பர இல.: J/F 1031
மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (cs 40816) (2.6)

## வேலையாள்கள் தேவை

வர்த்தக நிலையத்துக்கு வேலையள்கள் தேவை. (CS 17886)(2.6)
077 776 3533

## தேவை

குளிர்பான விநியோக நிறுவனத்துக்கு "Sales Rep" தேவை. மோட்டார் சைக்கிள் அவசியம். மாத வருமானம் 60, 000. க்கு மேல்
அழைக்கவும் +94774737737 (CR 35488) (3.6)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குண்டு
077 456 6069 (CS 40791)(2.6)

## விற்பனைக்கு

சிறிய காலம் பாவித்த கடைக்களுக்குரிய கண்ணாடி பிற்றிங் (Fiting ) விற்பனைக்கு.
077 306 8855 (CS 40837) (3.6)

## வேலையாள் தேவை

வத்தளையில் உள்ள வீடொன்றில் தங்கி யிருந்து வீட்டு வேலை செய்ய அனுபவமுள்ள பெண் தேவை.
வயது 25 - 45 வரை (aco 17026) (2.6)
077 722 5869

## சிறுநீரகம் தேவை

0 + குறூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (cs 40813) (2.6)
074 095 1954

## வீடு விற்பனைக்கு

நுணாவிலில் A-9 வீதியிலிருந்து இரண்டாவது காணியில் (2.5 பரப்பு) அமைந்துள்ள இடைக்கால வீடு விற்பனைக்குண்டு. (cs 40795) (2.6)
076 065 0166, 077 078 3832

## பணிப்பெண் தேவை

வவுனியால் வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்வதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. (co 00913) (2.6)
077 386 4642

## கட்டடம் வாடகைக்குண்டு

கிளிநொச்சி A9 வீதியில் Softlogic Showroom இற்கும் DFCC வங்கிக் கிளைக்கும் இடையில் பண்சாலைக்கு முன்னால் கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (CS 00911)(3.6)
077 502 1539 / 070 602 1539

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.
AAA Gold Center
076 568 4346

## வாகனம் விற்பனைக்கு

Toyota Hiace Super GL -LH - 172 Dolphin Van விற்பனைக்குண்டு.
கொழும்பு - 12 இல்
YOM - 2001
PB- 4 XXX (aco 17614) (2.6)
077 741 7525

## வேலையாட்கள் தேவை

நன்றாக தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை.
(20 - 40 வயதிற்குட்பட்டவர்கள்)
சில்வர் பலேஸ்
இல.11, ஜும்மா மொஸ்லேன், செம்மா தெரு, யாழ்ப்பாணம்.
(CS 40766) (3.6) 071 511 3801

## வேலையாட்கள் தேவை

ஐஸ் கிறீம் கடைக்கு பின்வரும் ஆண் / பெண்

- ரோல்ஸ் சுத்துபவர்
- சப்பிளேயர்
- ஐஸ் கிறீம் றூமில் வேலை செய்பவர்
- காசாளர்
- முகாமையாளர்

தொடர்பு : 077 267 2888 (CS 40833) (3.6)

## பணிப்பெண் தேவை

நாவலர் வீதியில் உள்ள வீடொன்றிற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.
074 147 2445 (CS 17896 B) (1/6)

## வேலையாள் தேவை

ஸ்ரான்லி வீதியில் வாகன உதிரிப்பாக கடை ஒன்றிற்கு வேலையாள் தேவை. (வயது 18-25)
077 4018 545 (CS 17896 A) (1/6)

## பணிப்பெண் தேவை

யாழ் நல்லூரில் அமைந்துள்ள அரச உத்தியோகத்தில் பணிபுரியும் 2 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 0031 133 (CS 17895) 1/6

## காணி விற்பனைக்கு

வீமன் காமம், தெல்லிப்பளையில் பரப்பு 12 1/2,
விலை 650,000 /- பரப்பு
தொடர்புக்கு : 077 423 5458 (CS 17894) 1-6

## ஆண் வேலையாட்கள் தேவை

பிரபல நிறுவனத்திற்கு
1. கணக்கு உதவியாளர்
2. வாகன சாரதி (AD)
3. களஞ்சிய உதவியாளர்
உங்களுடைய சுயவிவரக்கோவையினை msr95690@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு (03.11.2021) முன்பு அனுப்பவும். (CS 17900) 1-6
தொடர்புகளுக்கு :077 949 6855

## வேலையாட்கள் தேவை

A9 வீதி முறுகண்டியில் இயங்கும் Ice Cream உற்பத்தி நிறுவனத்திற்கு
1. Ice cream உற்பத்தியாளர்
2. உதவியாளர் 3. பொதிசெய்வோர்
4. காசாளர் 5. சிட்டை எழுதுனர்
போன்ற பதவிகளுக்கு ஆட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொ.இல. 076 935 4332 (CS 17893) 1-6

## பணிப்பெண் தேவை

இரு குழந்தைகளை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
076 695 8498 (CR 35806)(3.6)

## சகடை விற்பனைக்கு

சாவகச்சேரி பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு அமைக்கப்பட்ட 5 அடி X 5 அடி அளவுடைய புதிய சகடை விற்பனைக்குண்டு. (கட்டுத் தேர் பாவனைக்கு உகந்தது)
077 738 5999 (CR 35807)(3.6)

## பணிப்பெண் தேவை

சண்டிலிப்பாய் பகுதியில் தங்கியிருந்து குழந்தையை பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
தொ. இல. 077 399 1244 (CS 17899) 1/6

## சமையல்காரர் தேவை

கொழும்பில் உள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. தங்குமிடம், தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
077 3575 043 (CS 17907) 1/6

## 1 நாள் ஊர்கோழிகுஞ்சுகள்

நல்ல இன ஒருநாள் கோழி குஞ்சுகளை தினமும் பெற்றுக்கொள்ளலாம். காடை, வெள்ளடியன், வான்கோழி குஞ்சுகளும் கிடைக்கும்.
Rani Farm Pannagam
077 332 2433 (CS 17897) 1/6

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடொன்றில் 35-50 வயதிற்குட்பட்ட தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண் வேலையாள் தேவை.
075 988 0000
077 937 0000 (CS 17906) 1-6

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29.05.1929



உதிர்வு 01.10.2021

மலேசியாவை பிறப்பிடமாகவும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் திருமதி மகேஸ்வரி (மச்சு) செல்வநாயகம்

பண்பின் உறைவிடமாய், அன்பின் திருவுருவாய்
எம்மோடு உடன் இருந்தீர்
கனிவான பேச்சும் கனிதரும் செயலும்
எம் நினைவுகளில் நீள்கின்றன
வாழ்வின் பொருளுணர்ந்து
வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தீர்
உம்மை உளமாரப் பணிகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (27.10.2021) புதன்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தற்போதைய நாட்டின் இக்கட்டான சூழ்நிலை காரணமாக உங்கள் அனைவரையும் அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும், நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்த மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

இராமச்சந்திரன் (வட்டு)
அமுதவல்லி (செல்வி)
மதுசூதனன், கிருஷ்ணகுமார்,
கமல்ராஜ், துர்க்கா, மதுஷா.
சாய்ராம், லக்ஷி.
கதிர்வேல்நாதன், மயூரி, நிரோஜினி.
சாரங்கன், கிருஷ்ரிகா, தீனரீசன்.

குடும்பத்தினர்.
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.



# நானாட்டான் அச்சங்குளம் கிராமத்தில் குடிதண்ணீர் திட்டத்துக்கு அடிக்கல்

மன்னார், ஒக். 31

"சௌபாக்கியத்துக்கான இலக்கு" எனும் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய 'அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர்' எனும் கருப்பொருளின் கீழ் மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 'பிரஜா ஜல அபிமானி' திட்டத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அடிக்கல் நட்டார். மேலும் இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரென்லி டிமெல், நானாட்டான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்தராஜா, இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நானாட்டான் பிரதேச சபை உபதவிசாளர், அச்சங்குளம் ஆலயத்தின் பங்குத்தந்தை எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-213)


## பணிப்பெண்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பான்சி, கிப்ட் (Gift) விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் பெண் விற்பனையாளர்கள் தேவை.

தொ.இல.: 077 2105 286

(CS 17901) 1-6

## FREE ON-LINE COURSES BATCH VII

➤ DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
➤ DIPLOMA IN SINGALAM
➤ DIPLOMA IN ICT

ஆரம்பம் 06.11.2021 10.00 AM

● DURATION : 3 MONTHS ● CERTIFICATE

IPS ON-LINE EDUCATION CENTER Jaffna.
021 434 0229 / 076 685 2529

(CS 17902) 1-6

## வேலையாட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆட்கள் தேவை.

1. காசாளர் (பெண்-வயதெல்லை 20-35)
2. விற்பனையாளர் (பெண்/ஆண், வயதெல்லை 20-35)
3. களஞ்சிய காப்பாளர் (ஆண், வயதெல்லை 25-35)
4. பொதி செய்பவர் (பெண், வயதெல்லை 20-50)

நேரில் சமூகம் தரவும்.

Northway Family Mart
No:184, Palaly Road, Thirunelvely.
T.P: 021 222 6002

(CR 5499 B) 1-6

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப் பெண் ஒருவர் தேவை.

077 991 5075

(CR 5499 A) 1-6

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உயர் பதவியிலுள்ளோர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர், O/L, A/L படித்தவர்கள், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(CS 17891) 3.6

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



பிறப்பு 30 . 03 . 1936

இறப்பு 15 . 09 . 2021

அமரர் வைரமுத்து தவம்

திதி வெண்பா
ஆண்டு பிலவ
அதிலுதித்தாவணியில் - பூண்ட
பூர்வபக்க நவமித்திதியில்
திருவாட்டி தவம் வைரமுத்து என்பாள்
தாளையடியான் கழல்புகுந்தாள் கனிந்து

அந்தியேட்டிக் கிரியைகள் 12.10.2021 அன்று கீரிமலை புனித கரையிலும் 14.10.2021 அன்று வீட்டிலும் இடம்பெற்றன.

8/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

பேரமக்கள்

(CR 35808) 1-6

## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

R.I.B Group PVT (LTD)

1. கணக்காளர்
   Full qualified in AAT
2. Cash Recovery Officer
3. Sales Representative and Direct marketer

தகைமைகள் :- குறித்த துறையில் குறைந்தது 3 வருட அனுபவம்
கல்வித் தகைமை க.பொ.த உயர்தரம்
வயதெல்லை : 20-35

நேர்முகப் பரீட்சை:- திகதி :- 2021-11-02
நேரம் :- முற்பகல் 10.30 தொடக்கம் 11.30 வரை
இடம் :- இல.83, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும்.

T.P: 077 388 3879
075 813 2501

(CS 17905) 1-6

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வாழ்வுக்கும் பணிக்கும் நன்றிசெலுத்துதல்
கடந்த (30.07.2021) அன்று
இறைபதமடைந்த
எமது அன்பு மூத்த சகோதரன்

அமரர்
போல்சுகிர்தன் சூரியகுமார்

மண்ணுலகில் 29.01.1990 ✝ விண்ணுலகில் 30.07.2021



நான் கர்த்தருக்கு முன்பாக
ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்

மண்ணோடு உங்கள்
பூவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களிலிருந்து அழியாதவை
என்றும் நினைவில்...

பெற்றோர், சுஜீவன், தர்சன், டயானா

(CS 17908) 1-6

## மரண அறிவித்தல்



திருமதி ஜெயதேவி திலகராஜா

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் 3ம் கட்டை, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயதேவி திலகராஜா அவர்கள் நேற்று (30.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திலகராஜா (ஓய்வுபெற்ற மதுவரி உதவி ஆணையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராமலிங்கம் இராசம்மா தம்பதியரின் புதல்வியும், மற்றும் ஸ்ரீதேவி, குருநாதன், சபேசன், காலஞ்சென்ற புவனசுந்தரன் மற்றும் சிவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்ஷினியின் பாசமிகு தாயாரும், மகேந்திரனின் (முன்னாள் மாவட்ட திட்ட முகாமையாளர் - Save the Children in Sri Lanka) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ம் கட்டை, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல் :
தர்ஷினி மகேந்திரன் (மகள்)
077 344 2566

(CS 17904) 1/6

## அனைத்து...

கண்டி சமூக அபிவிருத்தி மன்றம் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழ் அரசு கட்சி, ரெலோ, புளொட்), தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் (ஜ.ம.மு., தொ.தே.மு., ம.ம.மு.), சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., த.தே.ம.மு. ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

அனைத்துத் தேர்தல்களும் விகிதாசார முறைப்படி நடத்தப்படுவதன் ஊடாக நாடாளுமன்றமும், மாகாணசபைகளும், உள்ளூராட்சி மன்றங்களும் தமது பன்மைத்தன்மை வாய்ந்த பிரதிநிதித்துவம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கண்காணித்து சமநிலைப்படுத்தும் நிறுவனங்களாக ஜனநாயகத்தின் பேரில் செயற்பட முடியும்.

நாடாளுமன்றத்தினதும், மாகாணசபைகளினதும், உள்ளூராட்சி மன்றங்களதும் கட்சி அங்கத்துவ எண்ணிக்கை தொகுப்பு, வாக்காளர்கள் கட்சிகளுக்கு அளித்த வாக்கு ஆணையை அதிகபட்சமாக பிரதிபலிக்க வேண்டும். வெற்றிபெரும் கட்சி, அளிக்கப்பட்ட வாக்குகளில் தாம் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்தை விட, அதிக விகிதாசார எண்ணிக்கையில் ஆசனங்களை எடுத்து கொள்வது தவிர்க்கப்பட வேண்டும்.

வாக்கு விகிதாசாரமும், சபை அங்கத்தவர் எண்ணிக்கை விகிதாசாரமும், சாத்தியமானளவில் ஒன்றை ஒன்று ஒத்து போக வேண்டும். இந்நிலைமையை விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் மட்டுமே உறுதிப்படுத்த முடியும்.

உள்ளூராட்சி, மாகாணசபைகள், நாடாளுமன்றம் ஆகிய மூன்று மட்ட தேர்தல்களுக்குமான சீர்திருத்தங்கள், தெரிவுக் குழுவால் ஒரே வேளையில் தயார் செய்யப்பட்டு, ஒரே சட்டவரைவின் மூலம் அரசமைப்பு திருத்தமாக கொண்டு வரப்பட வேண்டும். ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல்களை, முன்னுரிமை கொடுத்து, விகிதாசார முறையின் கீழ் நடத்த அரசு உடனடியாக முன்வர வேண்டும் என்று சிறுபான்மைக் கட்சிகள் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் கோரியுள்ளன. (ஒ-5)

## ஸ்கொட்லாந்து...

மாநாடு இன்று தொடக்கம் நவம்பர் 12ஆம் திகதி வரை, க்லாஸ்கோ நகரில் நடைபெறும். இதேவேளை ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு போராட்டங்கள் புலம்பெயர் தமிழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ஒ-5)

## கூரிய...

யளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 5 வாள்கள், 2 மோட்டார் சைக்கிள் செயின், 6 சரை கஞ்சா மற்றும் ஒரு கிராம் 650 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய வீடொன்றில் கும்பல் ஒன்று வன்முறைக்கு தயாராகி வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்ட போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர். சந்தேக நபர்கள் 13 பேரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-26)

## தவறான...

ஒருவர் தவறான முடிவெடுத்து உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வர்சிகா (வயது - 16) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி வீட்டில் தவறான முடிவெடுத்த நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு பின்னர் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ஒ-19)

## மாணவி...

பாடசாலை மாணவி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கழுத்து இறுகியதில் உயிரிழப்பு நிகழ்ந்ததாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் விளையாட்டு செயற்பாடுகளில் மிகத் திறமையான மாணவியாக செயற்பட்டு வந்ததாகவும் மாணவியின் உயிரிழப்பு அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10)

## சர்வதேச...

டிக்கை எடுக்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட 200 தமிழர்கள் சார்பில் சட்ட நிறுவனம் ஒன்று சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத் தின் வழக்கு நடத்துநருக்கு சமர்ப்பித்துள்ள ஆவணம் காலப்பொருத்தமான நடவடிக்கை என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரோம் சாசனத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை என்ற போதிலும், ஏன், எவ்வாறு, எதற்காக இலங்கை தொடர்பில் பாதிக்கப்பட்ட 200 பேர் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதை 200 பேரின் சாட்சியங்களின் அடிப்படையிலும் மற்றைய சாட்சியங்களின் அடிப்படையிலும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உரிய சட்டக் கொள்கைகள், கோட்பாடுகள், வாதங்களுடன் இந்த முதலாவது தொடர்பாடலுக்கான ஆவணத்தை முறையாக சட்ட நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. இது காலப் பொருத்தமான நடவடிக்கை- என்றார். (ஒ-5)

## மக்களின்...

தான நோக்கம் என்று ஆயர் நோயல் இமனுவேல் ஆண்டகை தெரிவித்தார்.

தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் கூட்டத்தின் முடிவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதேவேளை தமிழ்த் தேசிய பரப்பு எல்லை மற்றும் தமிழ்த் தேசியக் கோட்பாட்டின் அடிப்படைகளை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் கருத்துக்களை ஏற்கும் நிலை அமைய வேண்டும். மக்களின் கருத்துக்கள் அவ்வாறு ஒருமித்த குரலில் அமையுமாக இருந்தால் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கான தங்கள் செயற்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று தவத்திரு அகத்திய அடிகளார் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார். (ஒ-இ)

## 6 விரிவுரையாளர்கள்...

மருத்துவப் பீடம்



கலைப் பீடம்



காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பேராசிரியர் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்து மதிப்பீடுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் தகுதி பெற்ற 6 மூத்த விரிவுரையாளர்களின் விவரங்கள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடைமுறைகளுக்கமைய அந்தந்த விண்ணப்பத் தினங்களில் இருந்து பேராசிரியர்களின் பதவி உயர்வைப் பேரவை அங்கீகரித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து சத்திர சிகிச்சைத் துறையின் மூத்த விரிவுரையாளரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிபுணருமான மருத்துவக் கலாநிதி சி. ராஜேந்திரா, சத்திர சிகிச்சையில் பேராசிரியராகவும், மருத்துவத் துறைத் தலைவரும், மூத்த விரிவுரையாளரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணருமான மருத்துவக் கலாநிதி என்.சுகந்தன், மருத்துவப் பேராசிரியராகவும், மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் துறைத் தலைவரும், மூத்த விரிவுரையாளரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் நிபுணருமான மருத்துவக் கலாநிதி கே.முகுந்தன், மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் பேரவை ஒப்புதலளித்துள்ளது.

இவர்களுடன், கலைப் பீடத்தில் இருந்து, பீடாதிபதியும், புவியியல் துறையின் மூத்த விரிவுரையாளருமான கலாநிதி கே.சுதாகர், தமிழ்த்துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி (செல்வி) எஸ். சிவசுப்ரமணியம், பொருளியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி எஸ்.விஜயகுமார் ஆகியோரை முறையே புவியியல், தமிழ், பொருளியியற் துறைகளில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கும் பேரவை ஒப்புதலளித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையான பேராசிரியர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படுவது இதுவே முதன் முறையாகும். (ஒ-இ)

## தரம்-10

நவம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பிரத்தியேக வகுப்புக்களை 50 வீத மாணவர்களுடன், எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி முதல் நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## தலைமையகம்...

தான் இயங்கும். கணக்காய்வுப் பிரிவு சுயாதீனமாக இயங்கவேண்டும் என்றுதான் அதனை கொழும்புக்கு இடமாற்றினோம். இவ்வாறு பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபை சிங்கள மயப்படுத்தப்பட்டு வருவதாகவும், அதன் தலைமையகத்தைக்கூட கொழும்புக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் உதயனில் வெளியான செய்தி தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பனை அபிவிருத்தி அதிகார சபை சிங்கள மயப்படுத்தப்படுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் போலியானவை. அதேபோல தலைமையகத்தில் கொழும்புக்கு மாற்றுவதற்கு அமைச்சோ அல்லது அதிகார சபையோ எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. அப்படியானால் எதற்காக கைதடியில் புதிய கட்டடம் அமைக்கப்பட வேண்டும்?

கணக்காய்வு பிரிவு மட்டுமே, சுயாதீனமாக இயங்க வேண்டும் என்பதற்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்படுகின்றது. கணக்காய்வில் கடந்தகாலங்களில் சில குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதே இதன் நோக்கம். கணக்காய்வு பிரிவுக்கு கூட மூவினத்தவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இப்பிரிவுக்கு தமிழர்களை மட்டும்தான் இணைக்க வேண்டும் என சட்டம் இல்லை.

முகாமையாளர்களில் 55 வீதமானோர் தமிழர்கள். சில அதிகாரிகளுக்கு எதிராக அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. சிலர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அத்தகையவர்களே போலித் தகவல்களை பரப்பிவருகின்றனர். பனை அபிவிருத்தி சபையில் நாம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். ஐரோப்பிய நாடுகளில்கூட விநியோகப் பிரிவுகளை ஆரம்பித்துள்ளோம். புதிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களும் உள்ளன- என்றார். (ஒ-44)

## மாவட்ட அலுவலகங்களிலும் ....

கொழும்பு, ஒக். 31

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சேவைகளைப் பெறுவதற்கு இணையவழி மற்றும் தொலைபேசி மூலம் திகதி மற்றும் நேரத்தை முற்பதிவு செய்யும் நடைமுறை அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (ஒ-இ)

*மனைவியை...*

ழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மடத்துவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சண்முகராசா என்பவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது,

உயிரிழந்தவர் விவாகரத்தாகி இரண்டாவது திருமணம் செய்தவர். ஒரு மாதத்துக்கு முன்னர் இரண்டாவது மனைவியின் தாயாரைத் தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளார். இதனால் மனைவியின் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு அவரது தாயாரின் வீட்டில் வசித்துள்ளார். இந்த நிலையில் திடீரென மனைவியின் வீட்டுக்கு கத்தியுடன் சென்று சரமாரியாக அவரை வெட்டியுள்ளார்.

மனைவியை வெட்டிவிட்டு வீட்டின் பின்பகுதியில் உள்ள வயலுக்குச் சென்று அங்கு வைத்திருந்த பெற்றோலை தனக்குத் தானே ஊற்றி தீ மூட்டியுள்ளார். தீப்பிடித்ததும் வீதிக்கு ஓடி வந்தவரை கடற்றொழிலுக்குச் சென்றவர்கள் தீயை அணைத்து மீட்டனர். இதன் பின்னர் கணவன் மற்றும் மனைவி ஆகியோர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தீக்காயங்களுக்குள்ளான கணவர் நேற்று உயிரிழந்துள்ளார். மனைவி தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்- என்றனர். (ஒ-10)

*புதன்வரை...*

பகுதிகளும் எதிர்வரும் புதன் கிழமை வரை தொடர்ச்சியாக மழையைப் பெறும். அதே வேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை முதல் மிகக் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

'கரையோரப் பகுதிகளில் மிகக் கன மழை கிடைக்கும். தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும். அதே வேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும். மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்ப்பது நல்லது. மேலும் எதிர்வரும் 0[illegible] ஆம் திகதி அன்று வங்காள விரிகுடா கடற்பகுதியில் மற்றொரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-5)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

T.P : 077 658 1506 (CS 40835) (3.6)

## காணவில்லை



கடந்த மாதம் யாழ். நகர எல்லைக்குள் இவ்வடிவிலான கார் திறப்பு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.



077 220 0148

## காணி விற்பனைக்கு

வேலணை நகரை அண்மித்த பகுதியில் கிணறு, குழாய்க்கிணறு, மின்சார வசதியுடன் 40 தென்னங்கன்றுகள் பயிரிடப்பட்ட வீடு கட்டுவதற்கும் உகந்த 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (CS 40812)(3.6)

தொடர்பு: 077 358 0935

## Classes

SLPS Limited

3rd Batch ஆரம்பம் 06.11.2021

Zoom Classes (CS 40714) (3.6)

பதிவுகளுக்கு : 077 606 2716

## Personal English Classes

தனி வகுப்புக்கள் யாழ் நகரில்
O/L, A/L, Graduates, தொழில் புரிவோர்களுக்கான Grammar and Spoken English வகுப்புக்கள் (CS 35803)(3.6)

K.Ganesh (BA) 077 766 8725

## விற்பனைக்கு

BHF 0936, Wego, 2018
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்குண்டு.

076 973 1820 (CS 40836)(3.6)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு, Room Boy, Restaurant waiter, restaurant மேற்பார்வையாளர் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. (CR 35487)(3.6)

தொடர்பு: 077 668 1840

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர்
- சமையல் உதவியாளர்
- Room Boy
- கணக்காளர்

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (CS 40847)(3.6)

077 630 9947 / 077 373 4109

## யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி கிளைகளில்

Direct/Online (Zoom) ஊடாக IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

**IELTS** Academic / General Training

மாணவர்கள் 6.5 band score பெறுவதற்கு 100% உத்தரவாதம்

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்களுக்கு..

**IELTS Life Skills A1**

மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம் வழங்கப்படும்

English, பிரான்ஸ், ஜேர்மன், நெதர்லாந்து மொழி வகுப்புக்களும் Zoom மூலமாகவும், நேரடியாகவும் ஆரம்பமாகின்றன.

BRITISH COLLEGE Of Education

More information 0777-695605

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024 - 4930041
A9, Road, Kilinochchi Tel.: 021- 4927114

IDP IELTS Exam Centre Colombo, Kandy, Vavuniya & Kilinochchi

## மணமகள் தேவை

1983 இல் திருவோணம் நட்சத்திரம் மகர ராசியில் பிறந்த அரச சிற்றூழியராக தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

077 803 6779 (cs 35805) (2.6)

## மணமகள் தேவை

U.K ஐ நிரந்தர பிரஜா உரிமை பெற்றவரும், யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், திருவாதிரை நட்சத்திரம் 1989ஆம் ஆண்டு பிறந்த 5' - 8" உயரமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. IT டிப்புளோமா அல்லது பட்டதாரி (B.Com).

சாதகம், போட்டோ உட்பட 077 017 7480 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (CS 40751) (3.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஆயிலியம் 1ஆம்பாதம் 1992 ஆம் ஆண்டு பிறந்த 5' - 4" உயரமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

மணமகன் – B.Com (Lon), IT (Master), பட்டயக் கணக்காளர் (Level III) தற்போது மாலைதீவில் பயிற்சி பெறுகின்றார். இவருக்கு B.Com பட்டதாரி, IT பட்டம், பட்டயக்கணக்காளர் (Leval I - II) எதிர்பார்க்கப்படுகின்றது.

விபரங்களுக்கு : 076 679 8158 இலக்கத்துடன் கடிதம் போட்டோ உட்பட தொடர்பு கொள்ளவும். (CS 40750) (3.6)

## Techno World தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி லிங்கம் கூல்பார் அருகாமை

A/L 2023, 2021, 2022, Day class ஆகிய பிரிவுகளுக்கு Zoom Class மற்றும் நேரடி வகுப்பு ஆரம்பம்.

திகதி - 01.11.2021
காலம் - திங்கள் பிற்பகல் 3.30 pm

அனுமதிகளை நேரடியாக வந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வேறு எங்கும் கிளைகள் கிடையாது.**

தொடர்புகளுக்கு

077 017 5346 (CS 17903)1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 9 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு, 1 3/4, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் 14 அடி பாதையுடன் மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700M தூரம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

- தரகர் தேவையில்லை.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 814 7389
077 614 7333 (CS 40825) 1/6

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 03 . 1932



மறைவு 24 . 10 . 2008

மீசாலை

**அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்**

B.A, Dip in Edu., M.A

(இளைப்பாறிய கொத்தணி அதிபர் )

திதி: அபரபக்க ஏகாதசி

ஆண்டுகள் பதின்மூன்றாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாட்கள் நடந்தபடி கடந்துமிங்கு – உம்நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

**குடும்பத்தினர்**

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

"சிவகிரி" மீசாலை வடக்கு, மீசாலை.

72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

(cs 40786) (2.6)



...பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

நூறுநூறாயிரம் தோள்களின் மீது
ஏறி நின்று,
எனது நிலம் என உரத்துச் சொல்கிறேன்
ஏழு சமுத்திர வெளிகளைத் தாண்டி
அதன் மேல் எழுகிற அலைகளை மீறி
அதனைக் கொண்டு போய்
எங்கும் ஒலிக்கிறது காற்று
எனது நிலம்!
எனது நிலம்!! - சேரன்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை (31.10.2021) சிகரம் : 71



# தீராத முன்பகை

# தின்றது உயிரை!



தடயத்தைத் தேடி...

## வீதியோரமாகக் கிடந்தவனின் சாவுக்கு யார் காரணம்?

உளவாளி

16.09.2021 வியாழக்கிழமை. மாலை 3 மணியை அண்மித்த பொழுது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் , பலாலி வீதியோரமாக அநாதரவாக ஒரு மோட்டார் சைக்கிள். சற்றுத் தள்ளி ஒரு ஹெல்மெட், கூடவே அங்கொன்றும் இங்கொன்றுமாக இருசோடி செருப்புகள். பக்கத்தில் ஒரு மனிதன். ஆடாமல் அசையாமல் படுத்திருந்தான்.

" குடிச்சிட்டு படுத்திருக்கிறான் போல" என்று வீதியால் பயணிப்போர் அவனைப் பெரிதாகக் கணக்கிலெடுக்கவில்லை. அவர்களின் கணிப்பிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்தது. பொலிஸ் நிலையத்துக்கு அருகில், இப்படி வீதியோரமாகக் கிடப்பதென்றால் அது வெறியால் ஏற்பட்ட மயக்கமாகவே இருக்க வேண்டுமென அவர்கள் நினைத்திருப்பார்கள். ஆனாலும் ஒருசிலர் படுத்திருந்தவனையும், அருகே சிதறிக்கிடந்த செருப்புகளையும் கணக்கிட்டு பார்த்துவிட்டு, 'யாரும் அடித்துப் போட்டிருக்கிறார்களா?" என்ற சந்தேகத்தோடு கிட்டப் போய் பார்த்தார்கள். அவன் பேச்சு மூச்சில்லாமல் கிடந்தான். உடனேயே பதறியடித்துக் கொண்டு பொலிஸுக்கு தகவல் கொடுத்தார்கள். அதற்கிடையில் கூட்டம் கூடிவிட்டது.

அப்படிக் கூடியோரில் வீழ்ந்து கிடந்தவனுக்கு பரிச்சயமானவர்களும் இருந்தனர். அவர்கள் உடனடியாகவே அவனது வீட்டுக்கு தகவல் கொடுக்க, மனைவியும், உறவினர்களும் அழுது குளறியபடி ஓடிவந்தனர். அவனைத்தூக்கி அம்புலன்ஸில் தெல்லிப்பழை மருத்துவமனைக்கு உடனடியாக அனுப்பி வைத்தார்கள். ஆனால், எப்போதோ அவன் உயிரை விட்டிருந்தான்.

சில மணித்தியாலங்களுக்கு முன்னர்வரை தன் பிள்ளையோடு விளையாடிவிட்டு, மரணச்சடங்கொன்றுக்கு சென்றுவந்தவன் திடீரென வீதியோரமாகப் பிணமாக வீழ்ந்து கிடப்பதை எப்படி அவன் குடும்பத்தால் தாங்கிக் கொள்ளமுடியும்?

அப்படி அவனின் திடீர்ச்சாவுக்கு காரணமென்ன? விபத்தா? கொரோனாவா? மாரடைப்பா?

இல்லையேல் கொலையா?

அவன் குடும்பத்தார் கொலை என்றே உறுதியாக நம்பினர். தடயங்களும், சில மணித்தியாலங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களும், உடற்கூற்றியல் பரிசோதனை அறிக்கையும் அவன் கொலை செய்யப்பட்டிருக்கிறான் என்பதையே உறுதி செய்தன.

அப்படியானால் அவனை யார் கொலை செய்திருப்பார்கள்? கொல்லுமளவுக்கு அவன் மீது கொலையாளிக்கு என்ன பகை?

12






## தமிழ்க்கட்சிகள்

# இந்தியாவை நோக்கி முன்வைக்கும் ஒரு கோரிக்கை?

○ நிலாந்தன்

வரும் செவ்வாய்க்கிழமை இரண்டாம் திகதி தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட ஐந்து கட்சிகள் கூடிக் கதைக்கவிருக்கின்றன. விக்னேஸ்வரனின் தமிழ்மக்கள் தேசியக் கூட்டணி; ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் இவற்றோடு ஸ்ரீகாந்தா தலைமையிலான கட்சி ஆகிய ஐந்து கட்சிகளுமே அவ்வாறு கூடிக்கதைக்க இருக்கின்றன. இந்தக் கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே அறியமுடிகிறது. பெரியதும் மூத்ததுமாகிய தமிழரசுக் கட்சி ரெலோ இயக்கத்தின் முன்முயற்சி ஒன்றின் பின் இழுபட்டுச் செல்ல விரும்பவில்லை என்று அந்தக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச்சந்திப்புக்கு கூட்டமைப்பின் தலைவராகிய சம்பந்தரின் ஆதரவு உண்டா என்பதையும் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள்வரையிலும் உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிகிறது. இதுதொடர்பாக முன்பு நடந்த சந்திப்புகளில் அந்தக்கட்சி பங்குபற்றவில்லை. அதனால் அந்தக்கட்சிக்கு, நடக்கவிருக்கும் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை என்றும் தெரிகிறது.

இந்தச்சந்திப்பு ஏற்கெனவே ரெலோ இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒருங்கிணைப்பு முயற்சிகளின் அடுத்தகட்டம் ஆகும். இந்தச் சந்திப்பில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து கட்சிகள் முடிவெடுக்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கொழும்பின் மீது இந்தியா அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மேற்படி கட்சிகள் இந்தியாவை நோக்கி முன்வைக்கவிருப்பதாக அறியமுடிகிறது.

கடந்த சுமார் 12 ஆண்டுகளாக இந்தியா தமிழ்த் தரப்பிடமிருந்து அவ்வாறான ஒரு கோரிக்கை ஒற்றுமையாக முன்வைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக அறியமுடிகிறது. அண்மையில் நாட்டுக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் அது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார். பல மாதங்களுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். அதாவது 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த்தரப்பு ஒரே குரலில் முன்வைக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. கடந்த சுமார் 34 ஆண்டுகளாக இனப்பிரச்சினைக்கு அதுதான் தீர்வு என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது. குறிப்பாக அண்மை ஆண்டுகளில் ஐ.நா. தீர்மானத்துக்குள் இந்தியா அதனை உட்செலுத்தியிருக்கிறது.

13 ஆவது திருத்தம் எனப்படுவது இந்திய- இலங்கை உடன்படிக்கையின் விளைவு. இந்திய-இலங்கை உடன்படிக்கை எனப்படுவது இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எழுதப்பட்டது என்று கூறப்பட்டாலும் அதில் தமிழ்மக்கள் ஒரு தரப்பாக கையெழுத்திடவில்லை. எனவே இந்தியாதான் தமிழ் மக்கள் சார்பாக அதில் கையெழுத்திட்டது என்று எடுத்துக்கொள்ளலாம். அப்படி பார்த்தால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இந்தியாவுக்கு ஒரு கூட்டுப்பொறுப்பு உண்டு. ஆனால் கடந்த 34 ஆண்டுகளாக இந்தியா அந்தக்கூட்டு பொறுப்பை ஏன் நிறைவேற்றவில்லை? புலிகள் இயக்கத்தை ஒரு காரணமாகக் கூறினால் 2009க்கு பின்னரான கடந்த சுமார் 12 ஆண்டுகளாக அதைச் செய்வதில் இந்தியாவுக்கு யார் தடையாக இருக்கிறார்கள்? ஆயின், இதுவரையிலும் தான் நிறைவேற்றாத ஒரு பொறுப்பை இந்தியா புதுப்பிப்பதற்கு விரும்புகிறதா? அதனால் தான் அப்படி ஒரு கோரிக்கை தமிழ்த் தரப்பிலிருந்து ஒரே குரலில் முன்வைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றதா? இலங்கைத்தீவின் யாப்பில் எழுத்தில் உள்ள ஒரு விடயத்தை இந்தியா நிறைவேற்றித் தரவேண்டும் என்று மேற்படி காட்சிகள் கேட்கப் போகின்றனவா?


எனினும் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை. கடந்த சுமார் 12 ஆண்டுகளாக குறிப்பாக கிட்டத்தட்ட 10 ஆண்டு காலத்துக்கு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் போலக் காட்சியளித்த கூட்டமைப்பு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அழுத்தமாக முன்வைத்திருக்கவில்லை. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தர் ஒருமுறை ரெலோ இயக்கம் அது தொடர்பாக பேசிய பொழுது 13 ஆவது திருத்தத்தை நான் தும்புத்தடியாலும் தொட்டுப்பார்க்க மாட்டேன் என்று கூறியதாக ஒரு தகவல் உண்டு. 13 ஐக் கடந்து போக வேண்டும் என்பதே தனது உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்று அந்தக்கட்சி கூறிவருகிறது. சம்பந்தர் கடந்த 12ஆண்டுகளில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இரண்டு முயற்சிகளில் ஈடுபட்டார். முதலாவது முயற்சி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில். அதில் 13 பிளஸ் என்று மஹிந்த கூறியதை நம்பி அவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். ஆனால் முடிவில் அவை காலத்தைக் கடத்தும் உத்திகளே என்று தெரியவந்தது. அதன்பின் 2015தொடக்கம் 2018 இன் இறுதிவரையிலும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியில் சம்பந்தர் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டார். இதற்கு முன் உருவாக்கப்பட்ட எந்த ஒரு யாப்பும் தமிழ் மக்களின் பங்களிப்போடு உருவாக்கப்படவில்லை என்றும் தமிழ் மக்களின் பங்களிப்போடு முன்னெடுக்கப்படும் முதலாவது யாப்புருவாக்க முயற்சி இதுவென்றும் சம்பந்தர் கூறி வந்தார். ஆனால் மைத்திரிபால சிறிசேன அந்த உருவாக்க முயற்சிகளைக் குழப்பி விட்டார்.

இது விடயத்தில் கூட்டமைப்பு அந்த யாப்புருவாக்க முயற்சி குறித்து இந்தியாவோடு உரையாடவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இந்தியத் தரப்பில் உண்டு. தனது தனிப்பட்ட மருத்துவத் தேவைகளுக்காக இந்தியாவுக்கு சென்று வரும் சம்பந்தர் தீர்வு முயற்சிகள் தொடர்பில் இந்தியாவோடு கலந்தாலோசிக்கவில்லை என்று தெரிகிறது.

இதுவிடயத்தில் சம்பந்தர் தம்மைப் புறக்கணித்தி ருப்பதாக இந்தியா கருதுவதாகத் தெரிகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தோற்கடிக்கப்பட்ட பின்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரை கூட்டமைப்பினர் சந்தித்தபோது தூதுவர் தனது அதிருப்தியை கூட்டமைப்பிடம் தெரிவித்ததாகவும் ஒரு தகவல் கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 13 ஆவது திருத்தத்தை ஒரு தொடக்கமாகவேனும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. விக்னேஸ்வரனின் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியும் அதன் தோழமைக் கட்சிகளும் அதை ஒரு தொடக்கமாக ஏற்றுக்கொள்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் ஐ.நா.வுக்கு கடிதம் எழுதியபோது இரண்டாவது கடிதத்தை அனுப்ப கூட்டமைப்பு பின்னடித்தது. எனினும் ஏனைய இரண்டு கட்சிகளையும் இணைத்து ஒரு கடிதத்தை எழுத சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் முயற்சித்தார்கள். ஆனால் 13 ஆவது திருத்தம் தொடர்பில் இரண்டு கட்சிகளும் முரண்பட்டன. அதனால்தான் அந்தக்கடிதத்தை அனுப்ப முடிய வில்லை. இவ்வாறு 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் தரப்பில் உள்ள கட்சிகள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை. வரும் செவ்வாய்க்கிழமை பெரும்பாலும் ஐந்து கட்சிகள் சந்திக்கக்கூடிய வாய்ப்புகள்தான் தெரிகின்றன. இந்தமுயற்சியில் மனோ கணேசனையும் ரவூப் ஹக்கீமையும் இணைத்துக் கொள்ளலாம் என்று மேற்படி கட்சிகள் சிந்திப்பதாகத் தெரிகிறது. இம்முயற்சிக்கு சம்பந்தரும் தமிழரசுக் கட்சியும் சம்மதித்தால் அது ஒரு பலமான கோரிக்கையாக அமையக்கூடும். இல்லையென்றால் அந்தக்கோரிக்கைக்கு அதிகம் பலம் இருக்காது. அடுத்த வாரம் ஜனாதிபதி ஸ்கொட்லாந்து போகிறார். காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் அவர் பங்குபற்றவிருக்கிறார். அதே மாநாட்டுக்கு இந்தியப் பிரதமரும் வர இருக்கிறார். இப்படியொரு தருணத்தில் மேற்படி கட்சிகள் இணைந்து இந்தக் கோரிக்கையை இந்தியாவை நோக்கி முன்வைக்க முயல்கின்றன. அது 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் இந்தியாவுக்குள்ள கூட்டுப் பொறுப்பின் பிரகாரம் இந்தியாவை இனப்பிரச்சினையில் மீண்டும் தலையிட வைக்கும் ஒரு முயற்சியாக அமையுமா? ஆனால் இந்தியா 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற நிலைப்பாட்டை இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவே வலியுறுத்துகிறது. ஆனால், மேற்படி கட்சிகள் அதை ஓர் இறுதித் தீர்வாக ஏற்றுக்கொள்கின்றனவா? அப்படியென்றால் ஒற்றையாட்சிக்குட்பட்ட மாகாண சபையை மேற்படி கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா? அரசாங்கம் ஒரு மாகாண சபைத் தேர்தலை வைக்கலாம் என்ற ஊகங்கள் அதிகரித்து வருகின்றன. அதேசமயம் ஒரு புதிய யாப்புக்கான வரைபை விவாதத்துக்கு விடலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது. தென்னிலங்கையில் தற்போது நிலவும் சமூகப் பொருளாதார நெருக்கடிகளைக் கருதிக்கூறின், மாகாணசபைத் தேர்தலை நடத்துவது என்பது அரசாங்கத்தை பொறுத்தவரை ஒரு விஷப்பரீட்சை. அதனை அரசாங்கம் விரும்பாது. சில சமயம் வடக்கு-கிழக்குக்கு ஒரு தேர்தலை நடத்தலாம் என்ற ஊகங்கள் உண்டு. ஆனால் அது வடக்கு-கிழக்குக்கு என்று தனித்துவமான பிரச்சினைகள் இருப்பதையும் அங்கே ஒரு அதிகாரக் கட்டமைப்பு தேவை என்பதையும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டதாக அமைந்து விடும். இதுவும் அரசாங்கத்துக்கு பிரச்சினைதான். எனவே மாகாணசபைத் தேர்தலை நடத்தப்போவதாகவும் ஒரு புதிய யாப்பை கொண்டு வரப் போவதாகவும் அரசாங்கம் கூறி வருவதெல்லாம் காலத்தை கடத்தும் உத்திகளே என்று ஊகிக்க இடமுண்டு. எதுவாயினும், அரசாங்கத்தின் இந்த உத்திகளை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தரப்பு எதிர் உத்திகளை வகுக்க வேண்டிய ஒரு தேவை உண்டு. அவ்வாறான உத்திகள் அரசாங்கத்தை அம்பலப்படுத்தும் நோக்கிலானவைகளாக அல்லது அரசாங்கத்தை அனைத்துலக சமூகத்தோடு அல்லது இந்தியாவோடு முரண்பட வைக்கும் நோக்கிலானவைகளாக இருக்கவேண்டும். கொழும்பின் மீது புதுடில்லி அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஒரு நிலையை உருவாக்குவதே இந்தக் கோரிக்கையின் உள்நோக்கம் என்று மேற்படி கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைக் கேட்ட இந்தியாவுக்கு கிட்டத்தட்ட 20 மாத கால இழுபறிக்குப் பின் மேற்கு முனையத்தைத்தான் இலங்கை வழங்கியிருக்கிறது. தனக்கு விருப்பமான ஒரு துறைமுக முனையத்தை கேட்டுப்பெறும் விடயத்தில்கூட இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்க விரும்பவில்லையா? அல்லது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியவில்லையா? என்ற கேள்விக்கும் விடைதேட வேண்டும். அதுபோலவே 13 ஆவது திருத்தம் விடயத்திலும் இலங்கை அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்று நம்புதற்கு கடந்த 34 ஆண்டு கால அனுபவம் உதவுவதாக இல்லை.




கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையே முரண்பாடுகளை உருவாக்குவது அல்லது கொழும்பின் மீது புதுடில்லியின் அழுத்தத்தைப் பிரயோகிக்க வைப்பது போன்ற ராஜதந்திர உத்திகளைப்பற்றிச் சிந்திப்பது அவசியமானது. ஆனால் அந்த உத்திகளை ஓர் அரசற்ற தரப்பாகிய தமிழர்கள், கட்சி நோக்கு நிலைகளிலிருந்து முடிவெடுப்பதை விடவும் ஆகக்கூடியபட்சம் ஒரு தேசமாகத் திரண்டு நின்று முடிவெடுப்பதே பலமானது. ■

# 13 பற்றி சிங்களக் கட்சிகளின் மனச்சாட்சி பேசுமா?

அ.நிக்ஸன்

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் தமிழ்பேசும் மக்களின் மரபுவழித் தாயகம் (Traditional homeland) என்று வடக்கு- கிழக்கு கூறப்படவில்லை. மாறாக வரலாற்று வாழ்விடங்கள் (Historical habitations) என்றே கூறப்பட்டிருக்கிறது.

இந்திய -இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அப்போது கொழும்பில் இருந்த முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்சிற் 1998 ஆம் ஆண்டு எழுதிய 'அசைண்ட்மன்ற் கொழும்பு' (Assignment Colombo) என்ற நூலில் கூறும் போது, சிங்கள மக்களைக் கோபப்படுத்தக்கூடாது என்ற நோக்கிலேயே வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் எனக் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

வரலாற்று வாழ்விடங்கள் என்று கூறினால், சிங்கள மக்களை அங்கு குடியேற்றம் செய்வதற்கும் ஏற்கனவே குடியேற்றம் செய்யப்பட்ட சிங்கள மக்களின் இருப்பைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கும் வசதியாக இருக்கும் என்ற நோக்கிலேயே இலங்கை அந்தச் சொற் பிரயோகத்துக்கு இணங்கியிருக்க வேண்டும்.

டிக்சிற் அன்று கொழும்பில் தூதுவராக இருந்தபோது நடத்திய பல சுற்றுப் பேச்சுக்களில் வடக்கு- கிழக்கு தமிழ்பேசும் மக்களின் மரபுவழித் தாயகம் என்பதை ஜே. ஆர். ஜயவர்த்தனா ஏற்க மறுத்திருந்தார்.

இதனாலேயே தமிழ் மக்களை ஏதோவொரு வழியில் சமாளிப்பதற்கும், சிங்கள மக்களைக் கோபப்படுத்தாமல் இருப்பதற்கும் வடக்கு - கிழக்கு தமிழர்களின் வரலாற்று வாழ்விடங்கள் என்ற சொல்லாடலைப் பயன்படுத்தியதாக டிக்சிற் அந்த நூலில் விபரிக்கிறார். ஆகவே தமிழ் நாட்டில் வாழும் தமிழர்கள் இந்தியாவின் நாகரிகமுள்ள மரபுவழிச் சமூகம் போன்று இலங்கையின் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்களுக்கும் அவ்வாறான மரபுவழிப் பண்பாடும் நாகரிகமும் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டவொரு நிலையில், இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடவில்லை.

தமிழர்கள் இலங்கைத்தீவின் பூர்வீகக் குடிகள் அதன் பின்னரே சிங்களவர்கள் குடியேறினார்கள் என்ற வரலாறு உண்டு.

கனியன் பூங்குன்றனார் சொன்னதைச் சொல்லியே பிரதமர் மோடி ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த ஆண்டு உரையாற்றியிருக்கிறார். ஆகவே தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் பூர்வீகக்குடிகள் என்பதுபோல், இலங்கைத் தீவின் வடக்கு- கிழக்கில் வாழும் தமிழர்களும் பூர்வீகக் குடிகள், அவர்களுக்கென்று தனித்துவமான நாகரிகம் உண்டு, மரபுகள் உண்டு. எனவே அவர்கள் வாழும் நிலத்தை அவர்களின் தாயகம் என்று அங்கீகரிக்க வேண்டும் எனத் தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுக்க வேண்டும்.

'13'ஐ தீர்வாக ஏற்றுக்கொள்ளுங்கள் என அழுத்தம் கொடுக்கும் இந்தியாவிடம், தமிழ்த்தேசியக் கட்சிகள் ஏன் இதனை வலியுறுத்தக்கூடாது? தாயகக் கோட்பாடு மறுக்கப்பட்டதாலேயே, மாகாண சபைகள் அரசியல் தீர்வல்ல என்று அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி அன்றே நிராகரித்தது. அது மாத்திரமல்ல, 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாகாணசபையை ஏற்றுக்கொள்ளவில்லை. 2004 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கைவிட்டு மீண்டும் தமிழரசுக் கட்சியாக மாறியபோது அதன் தலைவராகச் சம்பந்தன் பதவியேற்றார். அதன் போதும் '13 ஐ 'அவர் நிராகரித்திருந்தார்.

குறிப்பாக 2006 ஆம் ஆண்டு அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இடைக்காலத் தீர்வு யோசனையை முன்வைத்திருந்தார். அந்தத் தீர்வு யோசனை குறித்த விவாதத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையிலும் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சம்பந்தன், அந்தத் தீர்வு யோசனையை நிராகரித்திருந்தார். அது தமிழர்களின் சுயமரியாதைக்கு விழுந்த அடி என்றும் வர்ணித்திருந்தார்.

அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை தும்புத்தடியாலும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாதெனவும் சம்பந்தன் கூறியிருந்தார். வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சி அதிகாரத்தை வலியுறுத்தியிருந்த சம்பந்தன், அது தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகமும் கூட என்றும் எடுத்துக் கூறியிருந்தார்.

'13' இல் உள்ள காணி, பொலிஸ் உட்பட அனைத்து அதிகாரங்களையும் இலங்கை அரசாங்கம் உரிய முறையில் தாமாகவே நடைமுறைப்படுத்திச் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தை முதலில் வெளிப்படுத்தினால், குறைந்தபட்சம் அதில் இருந்து அரசியல் தீர்வுக்கான அடுத்த கட்ட முயற்சிகள் குறித்துப் பரிசீலிக்க முடியுமெனவும் சம்பந்தன் அந்த உரையில் பரிந்துரைத்திருந்தார்.

அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த இடைக் காலத் தீர்வு யோசனைகள் '13' ஆவது திருத்தச் சட்டத்தையும் விடக் குறைவானது என்ற தொனி சம்பந்தனின் அந்த உரையில் தென்பட்டது.



## தாயகக் கோட்பாட்டை நிராகரித்த ஒப்பந்தம்

'13' தீர்வல்ல எனவும் 1987 ஆம் ஆண்டே தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்தமை நியாயமானதெனவும் சந்திரிகா பண்டாரநாயக்கா 1993 ஆம் ஆண்டு மேல் மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்றபோது எடுத்துக் கூறியிருந்தார். 1993 ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்த சந்திரிகா, 18 மாதங்களில் பிரதமராகிப் பின்னர் ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். 1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்றபோதும், மாகாண சபைகளின் அதிகாரங்களை மீளமைத்துப் புதுப்பிக்க வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

இதே காலப்பகுதியில் பேராசிரியர் உயன்கொட தேவா, ஜெஹான் பெரேரா உள்ளிட்ட சிங்களப் புத்திஜீவிகள் பலரும் 13 முழுமையான தீர்வு அல்ல என வாதிட்டிருந்தனர். தற்போது கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகிக்கின்ற வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் திஸ்ஸவிதாரன போன்றோரும் 13 ஆம் திருத்தம் ஒரு தீர்வல்ல எனக் கூறி தமிழர்களின் போராட்டத்தை அன்று நியாயப்படுத்தியிருந்தனர்.



ஜே.என். டிக்சிற்


1996 ஆம் ஆண்டு சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்த தீர்வு யோசனையில், மாகாணசபைகள் பிராந்தியங்களின் ஒன்றியமாக மாற்றப்பட்டிருந்தன. இலங்கை ஒற்றையாட்சியின் (Unitary State) கீழ் இயங்கும் பிராந்தியங்கள், அதிகாரப் பரவலாக்கத்தை மாத்திரமே கொண்டிருக்குமெனவும் நிதி, நீதி, நிர்வாகம் ஆகிய மூன்று பிரதான அரச துறைகளும் கொழும்பில் இயங்குமெனவும் அப்போது அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்திருந்தார்.

சந்திரிகாவின் தீர்வு யோசனையில் பங்காற்றியதாகக் கூறப்படும் சட்டத்தரணி நீலன் திருச்செல்வத்தை இக் கட்டுரையாளர் 1999 ஆம் ஆண்டு அவர் கொல்லப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் வீரகேசரிப் பத்திரிகைக்காக நேர்காணல் செய்திருந்தார். அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்டுள்ள பிராந்தியங்களை மத்திய அரசு (கொழும்பு) கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும், மாகாண சபை முறையை விடக் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டிருப்பதாக அந்த நேர்காணலில் அவர் கூறியிருந்தார்.

நாடாளுமன்ற விவாதத்தின்போது தமிழ்க் கட்சிகள் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தின் அதிகாரங்களை உறுதிப்படுத்துவது தொடர்பாக மேலும் இறுக்கமான யோசனைகளை முன்வைக்க வேண்டுமெனவும் நீலன் திருச்செல்வம் அன்று பரிந்துரைத்திருந்தார்.

ஆனால் அந்தத் தீர்வு யோசனையை அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தீயிட்டு எரித்தார். அப்போது உரையாற்றிய வாசுதேவ நாணயக்கார, ஒற்றையாட்சியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லையெனவும் மாகாண சபைகள் என்ற பெயரை மாற்றி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த ஒத்த அதிகாரங்களையே புதிய தீர்வு யோசனையில் பரிந்துரைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்வைத்திருந்த 'டிசெம்பர் 19' யோசனைகளில் பரிந்துரைக்கப்பட்டிருந்த அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் 'டிசெம்பர் 19' யோசனைகளை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்திருந்ததாக ரணில் விக்கிரமசிங்க பதிலுக்குக் கூறியிருந்தார்.




19.07.1987 ஆண்டு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற கலந்துரையாடலில் 'டிசெம்பர் 19' யோசனைகள் தமிழ் மக்கள் சார்பிலும் நிராகரிக்கப்பட்டன. பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தற்போது ஓய்வு நிலைப் பேராசிரியரான அப்போதைய கலாநிதி சிற்றம்பலம் உள்ளிட்ட பலர் பங்குபற்றியிருந்தனர். தமிழரசுக் கட்சியைத் தூக்கி எறிந்து விட்டுத் தந்தை செல்வா உருவாக்கிய தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழர்களின் அரசியல் விடுதலையை இன்று விலை பேசிவிட்டதாகச் சிற்றம்பலம் தனது உரையில் குற்றம் சுமத்தினார். இந்தச் செய்தி அன்றைய உதயன் பத்திரிகையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஈரோஸ் இயக்கமும் 'டிசெம்பர் 19' யோசனைகளை முற்றாக நிராகரித்திருந்தது.

ஆகவே ஒவ்வொரு காலப்பகுதியிலும் முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் எவையுமே இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பில் இருந்து மாறுபடாத, கொழும்பை மையமாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கத்தை மாத்திரமே உள்ளடக்கியிருந்தன என்பதற்கு இவை சில உதாரணங்கள் மாத்திரமே.

எனவே 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் மீண்டும் '13 'பற்றி இந்தியாவும் மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் தொடர்ச்சியாக வற்புறுத்துவதற்கான காரணம் என்பது, இலங்கை அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தித் தமக்குரிய புவிசார் அரசியல் நலன்களை அடைவதற்காகவே என்பது பட்டவர்த்தனமாகப் புரிகின்றது.

அது அரசுக்கு அரசு (State to State approach) என்ற அணுகுமுறை என்று கூறினாலும், தேசிய இனம் ஒன்று, தேசமாக நின்று தனது சுயநிர்ணய உரிமையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தினால், புவிசார் நலன்களுக்காகவேனும் வெளியுலகம் அதனைப் பரிசீலிக்கும் சாத்தியம் உண்டு.

(11ஆம் பக்கம் பார்க்க)

# பால் 3

## இன்று நேற்று நாளை



## பால் சேகரிப்பு மற்றும் பதனிடுதல்

எஸ். கிருபானந்தகுமாரன்[ MVSc]
கால்நடை மருத்துவர்

இலங்கையில் உற்பத்தியாகும் பாலில் 45% ஒழுங்கமைக்கப்படாத முறைசாரா பாலாகவே[ informal/ un organized ] உள்ளது. அதாவது பண்ணையாளர்கள் தாமே நுகர்வதும் தமது அயலவர் மற்றும் உள்ளூர்க் கடைகள், உணவகங்கள் மற்றும் சிறிய ரக பால் சேகரிப்பாளருக்கு வழங்குவதாகவும். மிகுதி 55 % முறைசார்ந்த [ formal/organized] பால்சேகரிப்பாகவும் உள்ளது. அதாவது நடுத்தர மற்றும் பெரியளவிலான பால் சேகரிப்பாளருக்கு வழங்குவதாக அமைகிறது. நெஸ்ட்லே, மில்கோ, கார்கில்ஸ், பெலவத்த போன்ற பெரியளவிலான சேகரிப்பாளர்கள் நாட்டில் பால் சேகரிப்பில் ஈடுபடுகின்றனர். ஆங்காங்கே உள்ள தமது தொழிற்சாலைகள் மூலம் பால் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். [இலங்கையின் பால் மா உற்பத்தியில் 20% உள்ளூர் பால் நிறுவனங்கள் வழங்குகின்றன. உதாரணம் MILCO நிறுவனத்தின் Highland பால்] சில சிறிய ரக உள்ளூர் பால் கூட்டுறவுச் சங்கங்களும் பால் சேகரிப்பு, மற்றும் பால் உற்பத்திகளைச் செய்கின்றன. [ உதாரணம் - யாழ்கோ, லிப்கோ, முல்லை]

இலங்கையில் 236 பால் குளிர்பதனிடும் [ chilling centers] நிலையங்கள் 888,642 லீற்றர் கொள்ளளவு வசதியுடன் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவற்றை நெஸ்ட்லே ,மில்கோ நிறுவனங்கள் கொண்டிருப்பதோடு மேலும் சில தனியார் நிறுவனங்களும் குறிப்பிட்டளவு குளிர்பதனிடும் நிலையங்களைக் கொண்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு கணிப்பின் படி 269,260,920 லீற்றர் பால் மேற்படி நிறுவனங்களின் ஊடாகச் சேகரிக்கப்படுகிறது. அண்மைய நாட்களில் மேலும் பல இடங்களில் அதிகளவில் குளிர் பதனிடும் நிலையங்கள் அமைக்கப்பட்டு அதிகளவு பால் சேகரிக்கப்படுகிறது. இலங்கையில் இந்த நிறுவனங்கள் சிறப்பான பால்சேகரிப்பு வலையமைப்பை கொண்டுள்ளதோடு கொழுப்பு[ FAT] ,மற்றும் ஏனைய கொழுப்பல்லாத திடப்பொருட்களின்[ SNF ]அளவு பரீட்சிக்கப்பட்டு பண்ணையாளருக்கு பணம் வழங்கப்படுகிறது. இந்த பால் அவற்றின் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பலவித பால் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. பெரிய பால் நிறுவனங்களுக்கு மேலதிகமாக புதிய பல முயற்சிகளும் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கது. [ முல்லை முல்லைத்தீவு, யாழ்கோ கூட்டுறவு- யாழ்ப்பாணம், ஆனந்தி வவுனியா]

மில்கோ நிறுவனம் MILCO [The National Milk Board / Milk industries of lanka.co limited]

1956 இல் The National Milk Board எனும் தேசியபால் சபை அரச நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு இலங்கையின் பால் வள அபிவிருத்தி, பால் சேகரிப்பு, பால் பதனிடல், சந்தைப்படுத்தலில் ஈடுபட்டது. 1986 இல் இருந்து Milk industries of lanka.co limited [ MILCO] எனும் பெயரில் தொழிற்படுகிறது. கொழும்பு, அம்பேவலை, திகன, பொலநறுவைஆகிய இடங்களில் பால் தொழிற்சாலைகளையும் நாடு முழுவதும் 72 பால் குளிர் பதன நிலையங்கள் மற்றும் 1700 பண்ணையாளர் சங்கங்களையும் 70000 க்கும் அதிகமான பண்ணையாளர்களையும் கொண்டுள்ள இந்த அமைப்பு 200000 லீற்றருக்கும் அதிகமான பாலை வருடாந்தம் சேகரிக்கின்றது. இதன் உற்பத்திகள் ஹைலண்ட் (Highland ) எனும் பெயரில் நாடு முழுதும் கிடைக்கின்றன.

### கால்நடைத் தீவனம்

இலங்கையின்பெரும்பாலான கால்நடைகள் மேய்ச்சலை நம்பியே உள்ளன. வீதிகளிலும், குளங்களிலும், காடுகளிலும், வயல்களிலும் உள்ள புல்வெளிகளிலே அவை மேய்கின்றன. குறிப்பிட்ட தொகையான பண்ணைகளில் தீவனப் புல் செய்கை பண்ணப்படுகிறது. CO3, CO4 போன்ற புல் வகைகளுக்கு மேலதிகமாக அண்மைக் காலத்தில் CO5 [super Napier], தீவனச் சோளம் [sugar graze] போன்றனவும் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. நிலமில்லாத புல் வளர்ப்பு [ Hydroponics] , ஊறுகாய் புல் [ silage] போன்ற மேம்படுத்தப்பட்ட புல் செய்கையும் பல இடங்களில் செய்யப்படுகின்றது. பலர் கால்நடைகளுக்குரிய தீவனங்களைச் சாகுபடி செய்து பண்ணையாளருக்கு விற்பதை தொழிலாக கொண்டுள்ளனர். மேற்படி புல் வளர்ப்புக்கு அரச மற்றும் தனியார் அமைப்புகள் பல மானிய உதவிகளை வழங்கி வருகின்றன.

இலங்கையில் மாடுகள் உட்பட கால்நடைகளுக்கு உலர்தீவனம் தயாரிக்கும் சில தொழிற்சாலைகள் உள்ளன. [Prema , Super feed, Gold coin ,CIC ,New Bernard] சோளம், சோயா அவரை, புண்ணாக்குகள், மீன்உணவுகள், நெல் கோதுமை உணவு மிகுதிகள், விற்றமின்கள், கனியுப்புகள் என பல பொருட்களை கொண்டு இந்த உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு கால்நடைத் தீவனமாக வழங்கப்படுகின்றன. இந்த மூலப் பொருட்கள் குறிப்பிட்ட அளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதோடு கணிசமான அளவு வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. 2018 ஆண்டளவில் மாடுகளுக்குரிய உலர் தீவனம் 6,320,000 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது .

இலங்கையில் அதிக உற்பத்தி செய்யும் ஐரோப்பிய கலப்பு மாடுகளுக்கு அதிகளவில் உலர் தீவனம் வழங்கப்படுவதோடு ஏனைய மாடுகள் பெரும்பாலும் புல் ,விவசாய உற்பத்தி மிகுதிகள் ,உள்ளூர் தவிடு புண்ணாக்கு, வீட்டு மிகுதிகள் மூலம் உணவூட்டப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் கால்நடைத் தீவனத்தின் மிக முக்கிய மூலப்பொருளான சோளம் பெரும் போகத்தில் 242,935 மெற்றிக் தொன் அளவிலும் சிறு போகத்தில் 6969 மெற்றிக் தொன் அளவிலும் பயிரிடப்பட்ட அதேவேளை வெளிநாடுகளில் இருந்து 98,342 மெற்றிக் தொன் இறக்குமதியும் செய்யப்பட்டிருந்தது. சோயா அவரை பெரும் போகத்தில் 1186 மெற்றிக் தொன் அளவிலும் சிறுபோகத்தில் 1304 மெற்றிக் தொன் அளவிலும் பயிரிடப்பட்ட அதேவேளை 154,585 மெற்றிக் தொன் அளவு இறக்குமதியும் செய்யப்பட்டது.

2020/07/23 அன்று வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் படி அரிசி மற்றும் நெல் போன்ற மனித உணவுகளை விலங்கு உணவில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாவிக்க முடியாது .அத்துடன் சோளத்தின் இறக்குமதியும் 2020 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தடைசெய்யப்பட்டிருக்கிறது. மேற்படி இரண்டு காரணிகளும் கால்நடைத் தீவன உற்பத்தியில் கடும் தாக்கத்தை செலுத்துகின்றன. கொவிட் பெருந்தொற்றுக்கு பின் இலங்கையில் கால்நடைத் தீவனங்களுக்குரிய உற்பத்திகள் சரியாக இல்லாததாலும் சோளச் செய்கையைப் பாதிக்கும் படைப்புழு தாக்கத்தாலும் இறக்குமதித்தடையாலும் சோளச் செய்கையை மேற்கொள்ளும்போது ஏற்படும் காடழிப்பு போன்ற சூழலியல் பிரச்சினைகள் காரணமாகவும் விலங்குணவுகளின் விலை அதிகரித்ததால், பாலின் விலையும் அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் வருடாந்த தனிமனித பால் நுகர்வு சர்வதேச நியமனமான 40 லீற்றரை விடக் குறைவாக இருந்து படிப்படியாக அதிகரித்து 2014 ஆம் ஆண்டில் 45 லீற்றராகவும், 2017ஆம் ஆண்டில் 56 லீற்றராகவும், 2018 ஆம் ஆண்டு 58.03 லீற்றராகவும் அதிகரித்துள்ளது.



### பால் பொருள் இறக்குமதி

பால் பொருள் இறக்குமதியைப் பொறுத்தவரை அதிகளவில் நியுசிலாந்திலிருந்தும் [ Fontera நிறுவனம் ஊடாக]கணிசமான அளவு அவுஸ்திரேலியாவிலிருந்தும் பெறப்படுகிறது. சீஸ் போன்ற உணவுகள் பல ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் இறக்குமதியாகின்றன. பால்[ Milk and milk cream] ,முழு ஆடைப் பால் மா [ milk cream powder ] ,கொழுப்பு நீக்கிய பால் மா[ skimmed /nonfat milk powder] ,செறிவூட்டிய பால்மா[ condensed milk], சீஸ் மற்றும் தயிர்[ cheese and curd], யோகட்[yoghurt] , வெண்ணெய் [butter] ,நெய் [Ghee] ,வே புரத பால் மா[ whey protein powder]என பல வகை பால் பொருட்கள் இறக்குமதியாகின்றன. அதிகளவில் முழு ஆடை பால் மாவை 628,044.41 [000] L அளவில் இறக்குமதி செய்கின்ற அதேவேளை கொழுப்பு நீக்கிய பால் மா 84,955.10[000]L அளவிலும் இறக்குமதி செய்வதை காண முடியும். 2018 இல் இலங்கையின் மொத்த பால் பொருள் இறக்குமதி 54.002.35 பில்லியன் ஆகும். இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த இறக்குமதி செய்வதால் ஏற்படும் செலவுகளை குறைக்க அதாவது பாலில் தன்னிறைவு காண பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதைக் காணமுடிகிறது.

### கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மற்றும் அமைச்சு

இலங்கையில் கால்நடைகளின் சுகாதாரம் மற்றும் ஏனைய கால்நடைகள் தொடர்பான விடயங்களை கையாளும் நிறுவனம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் ஆகும். மத்திய, மாகாண அரசாங்கங்களின் கீழ் வரும் இந்தத் திணைக்களத்தின் அடிப்படை அலகாக கால்நடை வைத்தியர் அலுவலகங்கள் அமைகின்றன.

அங்கு கால்நடை வைத்தியர்கள், கால்நடைப் போதனாசிரியர்கள் போன்றவர்களால் கால்நடைகளுக்குரிய சேவைகள் வழங்கப்படுகின்றன. கால்நடைகளுக்குரிய சிகிச்சைகள், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், மக்களுக்குரிய தெளிவூட்டல்கள், மக்களுக்குரிய உதவித் திட்டங்கள் வழங்குதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்தல் , நல்லின விலங்குகளை வழங்குதல் ,சினைப்படுத்தல் நடவடிக்கைகள் ,கால்நடைதரவு சேகரித்தல் போன்ற பல விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கால்நடை வைத்திய நிலையங்கள் மாவட்ட பணிப்பாளர் அலுவலகம் மாகாண பணிப்பாளர் அலுவலகம் போன்றவற்றால் மேற்பார்வை செய்யப்பட்டு இறுதியாக கண்டி கெட்டம்பேயில் உள்ள மத்திய தலைமை திணைக்களத்தால் பரிபாலிக்கப்படுகின்றன. கால்நடைகளுக்குரிய நோய்களைக் கண்டறியும் ஆய்வு செய்யும் கால்நடை புலனாய்வு நிலையங்களும் மாவட்டம் தோறும் அமைந்துள்ளன. கால்நடைகளை வளர்த்து மக்களுக்கு வழங்கக்கூடிய கால்நடை இனப்பெருக்க பண்ணைகளும் நாடு முழுதும் காணப்படுகின்றன. இலங்கையில் கால்நடை தொடர்பான விடயங்கள் விவசாய அமைச்சின் கீழ் கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சால் கையாளப்படுகின்றன.

இனிவரும் வாரங்களில் இலங்கையில் கால்நடை வளர்ப்பு துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றுக்குரிய தீர்வுகளை காண்பது மூலம் அடையக் கூடிய தன்னிறைவு வழிக்குரிய சாத்தியங்களை ஆராய இருக்கிறேன். ( இங்குள்ள தரவுகள் அண்மைய மத்திய வங்கியின் ஆண்டறிக்கை, மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் வெளியீடுகளில் இருந்து பெறப்பட்டவை. அவற்றை அந்த அமைப்புகளின் இணையத்தளங்களில் பார்த்து அறிய முடியும்)

## சொற்சிலம்பம் போட்டி 55

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | ■ |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: .............................

.......................................................

கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள் வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. நித்தியம் அழியாதது 5. உலகம் 7. வெட்டு 8. யானையை வழிநடத்துபவன் 9. மனைவி 10. நாவிதன் செய்வது 12. கொளுவு 13. இடம் 15. உள்ளம் 16. சில வீடுகளில் அரைப்பது இதில்தான் 17. கூரையின் உச்சி 18. புதிய 19. (ஒன்று) சேர் 20. ஓர் அணிகலன் 22. வெற்றிலையுடன் வாயில் தரிப்பது. 23. சிறையில் இருப்பவன்

### மேலிருந்து கீழ்

1. அதிசய செயல்களை செய்யும் சாதனை 2. ஓர் உபகரணம் 3. வாழ். 4. நோக்கல் 5. புவிநடுக்கம் 6. இன்றைய உலகின் இயக்க நாயகன் 8. கன 11. பிரி 12. மெல்லிய உலோகப் படலம் 14. எருதின் (பின்கழுத்து) ஏரிக்கு இப்படிப் பெயர் 15. நீளத்தையும் உயரத்தையும் விட மற்றையது. 16. வீண் 17. முன்னிலையில் 18. சுகம் 20. பலவல்ல 21. நெருப்பில்லாமல் வராது.

**சொற்சிலம்பம் போட்டி 54 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. குத்துமதிப்பு 6. வதம் 7. ரவி 9. குமர் 11. புகட்டு 13. மறுப்பு 15. தடு 16. புத்தர் 20. திரு 21. ஆம் 22. பாரதி 24. மதிப்பு 25. பாண்டவர் 26. புலி

**மேலிருந்து கீழ்**

1. குங்குமம் 2. துவர்ப்பு 3. மத 4. திம்பு 5. புரட்டு 8. விடு 10. மறு 12. கதர் 14. புத்தி 17. தருமர் 18. அம்புலி 19. முரண் 21. ஆப்பு 22. பாபா 23. திட

**சொற்சிலம்பம் போட்டி இல.55**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**05.11.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட் டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடி வானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிக ளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

### போட்டி இலக்கம் 54 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**சி.செல்வராசா,**
இல.4/1 பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

**2 ஆம் பரிசு**
**செ.வலஜி,**
வேலணை மத்திய கல்லூரி, வேலணை.

**3 ஆம் பரிசு**
**ந.சி.ராஜீவ்,**
பிரதேச செயலகம், முசலி, மன்னார்.

**4 ஆம் பரிசு**
**உ.புஸ்பலதா,**
3ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

**5 ஆம் பரிசு**
**சி.அன்னலிங்கம்,**
நெல்லியான் வீதி, கல்விளான், சுழிபுரம்.

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

## 1505–1948 வரை

கோண்டாவிலில் இருந்து 2 மணித்தியாலத்தில் வட்டுக்கோட்டையை அடைந்துவிடலாம். இங்கு நற்செய்தி சொல்பவர்கள் 2000 பேர் இருக்கின்றனர். குருமடத்தில் 800 தொடக்கம் 900 வரையான மாணவர்கள் உள்ளனர். இங்கு ஒரு உப்பாறு காணப்படுகிறது. பல வகையான பழமரங்களையும் இங்கு நாட்டியுள்ளோம்.

வட்டுக்கோட்டையில் இருந்து அரைமணித்தியாலத்தில் பண்டத்தரிப்பை அடைந்துவிடலாம். பண்டத்தரிப்பில் இரண்டு அறைகளையும் ஒரு மண்டபத்தையும் உள்ளடக்கியதாக அழகிய தேவாலயம் ஒன்றைக் கட்டியுள்ளோம். இங்குள்ள குருமடத்தில் 600 மாணவர்கள் உள்ளனர். 1200 தொடக்கம் 1300 வரையான தீவிர பக்தர்களும் உள்ளனர். இந்தத் தேவாலயத்துக்கு பொறுப்பான பாதிரியார் அண்ட்ரூ சிறப்பான முறையில் சேவையாற்றி வருகிறார்.

சங்கானைத் தேவாலயம் பண்டத்தரிப்பிலிருந்து ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வட்டுக்கோட்டை பண்டத்தரிப்பு இரண்டுக்குமிடையே சமதூரத்தில் முக்கோண வடிவில் சங்கானைத் தேவாலயம் அமைந்துள்ளது.

தேவாலயத்தைச் சுற்றி செங்கற்களால் மதில் கட்டியுள்ளோம். தேவாலயத்தின் பின்புறத்தில் அகத்தி, வாழை, உருளைக்கிழங்கு போன்றவற்றை பயிரிட்டுள்ளோம். இங்குள்ள குருமடத் தில் 700 மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி பயின்று வருகின்றனர்.

மானிப்பாயிலிருந்து 2 மணித்தியாலத்தில் யாழ்ப்பாண நகரத்தையும் சங்கானையையும் அடைந்துவிடலாம்.


மானிப்பாயிலுள்ள குருமடத்தில் 560 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 2000 பேர் இந்தத் தேவாலயத்துடன் இணைந்துள்ளனர். இவர்களில் 700 பேர் எமது மதத்தில் பற்றுறுதியுடன் காணப்படுகின்றனர். இங்குள்ள தேவாலயம் பனை மரங்களின் நடுவே களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. தேவாலய வாசலில் குளம் ஒன்றும் காணப்படுகிறது. இந்தக் குளத்தில் எப்போதும் நீர் நிரம்பிக் காணப்படும். இங்குள்ளவர்கள் மடைப்பள்ளி என்ற சாதியைச் சேர்ந்தவர்கள்.

எமக்கு எதிராகச் சதி செய்த பூதத்தம்பியின் சாதியைச் சேர்ந்தவர்கள். (போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் உயர்பதவிகளை வகித்த மடப்பள்ளிச் சாதியினருக்கு என்ன நடந்தது? இவர்களது தொழில் என்ன என்பது தெரியவில்லை.) யாழ்ப்பாணத்திலுள்ள ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் மானிப்பாய் வாசிகள் திமிர்பிடித்தவர்களாகக் காணப்படு கின்றனர்.

வண்ணார்பண்ணை தேவாலயம் யாழ். நகருக்கு அருகிலுள்ளது. இங்கு சலவைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். சலவைத் தொழிலார்களை தமிழில் வண்ணார் என்று அழைப்பர். இதன் காரணமாக இந்த இடம் வண்ணார்பண்ணை என அழைக்கப்படுகிறது. இங்குள்ள தேவாலயம் சிறிதுமன்று பெரிதுமன்று. இந்த தேவாலயம் களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 200 மாணவர்களும் 600 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

நல்லூர்த் தேவாலயம் களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 590 மாணவர்கள் உள்ளனர். இவர்களுக்கு கிறிஸ்தவம் பற்றிய போதிய அறிவு இல்லை. இவர்கள் இப்போதும் சைவசமய நம்பிக்கைகளில் ஊறியுள்ளனர் .இப்போதும் நெற்றியில் விபூதி பூசிக் கொண்டு திரிகின்றனர். நல்லூரிலுள்ள எமது பாடசாலைக்கு ஒரு சில முஸ்லிம் மாணவர்களும் வரத் தொடங்கினர். யாழ்ப்பாணத்திலேயே நல்ல தண்ணீர் இங்குதான் கிடைக்கிறது.

சுண்டுக்குழி தேவாலயம் யாழ். நகருக்கு அருகில் உள்ளது. இங்கு சிவியர் வாழ்ந்து வருகின்றனர். சிவியர் என்போர் தண்ணீர் காவுபவர்கள் ( பல்லக்கு அல்லது சிவிகையை தூக்கிச் செல்பவர்கள்) . இங்குள்ள தேவாலயம் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு 450 மாணவர்கள் உள்ளனர். இவர்கள் பெற்றோருடன் வேறு இடங்களுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுபவர்கள். இவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த தேவாலயத்துடன் 1500 பேர்இணைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பட்டினத்தின் இரண்டாவது பெரிய மாகாணம் தென்மராட்சி.




மானிப்பாய்

தென்மராட்சியின் முதலாவது தேவாலயம் நாவற்குழியில் உள்ளது. இந்தத் தேவாலயம் களிமண்ணால் கட்டப்பட்டு பனை ஓலையால் வேயப்பட்டுள்ளது.

இங்கு குரங்குகள், வெளவால், ஆந்தைகள் போன்றன காணப்படுகின்றன. இங்கு 400 மாணவர்களும் 700800 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

நாவற்குழியிலிருந்து ஒரு மணித்தியாலத்தில் சாவகச்சேரியை அடைந்துவிடலாம். சாவகச்சேரியில் இந்தப் பிரதேசத்திலேயே பெரிய தேவாலயம் கடலை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு1000 மாணவர்களும் 2000 3000 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

சாவகச்சேரியில் இருந்து ஒரு மணித்தியாலத்தில் கைதடியை அடைந்துவிடலாம். கைதடி ,சாவகச்சேரி பாதை முழுவதும் குளங்கள் காணப்படுகின்றன. குளங்களில் வாத்துகள் உள்ளன. கைதடி தேவாலயம் நாவற்குழித் தேவாலயத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது. இங்கு550 மாணவர்களும் 1200 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

தென்மராட்சியின் கடைசித் தேவாலயம் நாகர்கோயிலுக்கு அருகில் எழுதுமட்டுவாள் என்ற கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேவாலயம் களிமண்ணாலான மூன்று விசாலமான மண்டபங்களைக் கொண்டதாக கோபுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு யானைகளும் மயில்களும் காணப்படுகின்றன. இங்கு 650 மாணவர்களும் 1100 1200 நற்செய்தியாளர்களும் உள்ளனர்

*(வரலாறு நீளும்)*

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்





## கூட்டத்துக்கு வந்த 'மெனிக்கே'!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றமை உங்களுக்குத் தெரிந்த விடயம் தான் .

இதன்போது, இசை விருந்துடன், இராபோசனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உட்பட அரச உயர்மட்ட பிரமுகர்களும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். மைத்திரிபால சிறிசேன உட்பட 30 க்கு மேற்பட்ட எம்.பிக்கள் பங்கேற்கவில்லை. இதற்கான காரணத்தை முன்கூட்டியே அவர்கள் ஜனாதிபதியின் செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் யுகதனவி, உரப்பிரச்சினை உட்பட முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன. அதேபோல அரசுக்குள் பிரச்சினைகள் இருப்பின், அவற்றை உள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்வோம், வெளியில் விமர்சனங்கள் வேண்டாம் என ஜனாதிபதி இதன்போது ஆளுங்கட்சியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்திப்பு முடிந்ததும் விருந்து ஆரம்பமானது. ஜனாதிபதி, தயாசிறியை அழைத்தார். பாடலொன்றைப் பாடுமாறும் கேட்டுக்கொண்டார்.

கடற்படையினர் இசை வழங்கினர். மேடையேறிய தயாசிறி, என்ன பாடல் வேண்டும் என கேட்டார். இப்போது உலகப் புகழ் பெற்றுள்ள 'மெனிக்கே மகே ஹித்தே' பாடலைப் பாடுமாறு ஜனாதிபதி கூறியுள்ளார். அதே பாடலை தயாசிறி பாடி அங்கிருந்தவர்களை மகிழ்வித்தார்.



## புதிய கூட்டணி?

தெற்கு அரசியல் களம் என்றுமில்லாதவகையில் தற்போது சூடு பிடித்துள்ளது. இதனால் வெகுவிரைவிலேயே பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாத வகையில் தரமான, சிறப்பான அரசியல் சம்பவங்கள் அரங்கேறக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

உரப்பிரச்சினை உட்பட மேலும் சில சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு அரசிலிருந்து வெளியேறுவதற்கு சுமார் 40 பேர் தற்போது தயாராகிவருகின்றனர். இதற்கான பேச்சுகளும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன என்று அறியமுடிகின்றது.

இவ்வாறு வெளியேறும் உறுப்பினர்கள் புதியதொரு அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பவே எதிர்பார்த்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சம்பிக்க ரணவிக்கவின் '43' எனும் இயக்கம் ஆகியவற்றுடன் இணைவதற்கு அவர்கள் விரும்பவில்லை. எனவே, புதிதாக உருவாக்கப்படும் கூட்டணிக்கு கரு ஜயசூரிய தலைமை தாங்குவார் எனவும், மைத்திரிபால சிறிசேன உட்பட மேலும் சிலர் முக்கிய பதவிகளை வகிக்கக்கூடும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. வாசுதேவ நாணயக்காரவை தவிர 'அதிருப்தி நிலையில் உள்ள' ஏனைய தலைவர்கள் வெளியேறுவார்கள் எனவும், இதனால் அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை இழக்கும் எனவும் அரசியல் களத்தில் கதை அடிபடுகின்றது. மறுபுறத்தில் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான நகர்வுகளும் இடம்பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

## மதில் மேல் பூனைகள்!

ஐக்கிய மக்கள் சக்திக்குள் தற்போது மோதல் நிலைமை ஏற்பட்டுள்ளது. கட்சியின் நகர்வுகள் தொடர்பில் உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சூழவுள்ள சிலர் கட்சியை அழிவு பாதைக்கு அழைத்துச்செல்வதாகவும், அரசுடன் 'டீல்' இருப்பதாகவும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில் தொகுதி அமைப்பாளர் பதவியை இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர். பதுளை மாவட்ட எம்.பி. சமிந்த விஜேசிறி, இரத்தினபுரி மாவட்ட எம்.பி. ஹேஷா விதானகே ஆகிய இருவருமே இவ்வாறு பதவி துறந்துள்ளனர்.

மாவட்டத்தில் இடம்பெறும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படுவதில்லை எனவும், தமது ஆலோசனைகள் உள்வாங்கப்படுவதில்லை எனவும் மேற்படி இருவரும் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு பதவி துறந்தவர்கள் அரசுடன் இணையக்கூடும் எனவும், மாகாண தேர்தலில் முதல்வர் வேட்பாளர்களாகப் போட்டியிடக்கூடும் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆயினும் ஒருபோதும் அரசுடன் இணையமாட்டோம் என அவர்கள் இருவரும் பகிரங்கமாக அறிவித்திருந்தாலும், இறுதி நேரத்தில் எதுவும் நடக்கலாம் எனவும், அவர்கள் இப்போது மதில் மேல் பூனைகளாக எங்கே தாவுவது என்பது பற்றி முடிவெடுக்கவில்லை என்றும் உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

## போருக்கு ரணில் தயார்!

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சம்பந்தப்பட்ட தொழிற்சங்க வலையமைப்பு உட்பட இதர கட்டமைப்புகளைப் பலப்படுத்துமாறு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின்கீழ் அரசுக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பிக்குமாறும் அவர் கட்டளையிட்டுள்ளார்.

இதன்படி ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளாத, அரசாங்கத்துக்கு எதிராகவுள்ள சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து கட்சி வலையமைப்பை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது. ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன, உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்டவர்களில் கண்காணிப்பின் கீழ், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



## அமைச்சரவை மாற்றம்....?



வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் முடிவடைந்த கையோடு அமைச்சரவையில் மறுசீரமைப்பு மேற்கொள்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச திட்டமிட்டுள்ளார். அத்துடன், அரச நிறுவனங்களின் உயர் பதவி களிலும் அதிரடியான மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

இதன்படி சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், மேலும் சில அமைச்சுகளுடன் புதிய விடயதானங்கள் இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருவதாக அறியமுடிகின்றது.

## இதுதான் முதன்முறை!

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகளின் திருமண நிகழ்வு அண்மையில் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. கொரோனாக் கட்டுப்பாடுகளால் முக்கியமான சிலருக்கு மாத்திரமே இந்த நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகிய இருவருமே பதிவுத் திருமணத்துக்கு சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளனர்.

காலை 9.30 மணி முதல் பி.ப. 1 மணி வரை இருவரும் ஹோட்டலிலேயே இருந்துள்ளனர். ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் தனிப்பட்ட நிகழ்வொன்றில் இவ்வளவு நேரம் ஆற அமர்ந்திருந்தது இதுவே முதன்முறை என அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டுள்ளனர்.





54
இற்கான

# கவிதைகள்

## மௌன மொழி

பூ ஒன்று பூவை ஏந்தி
பொழிகின்ற நேசம்
பூமியை விலை பேசும்
புன்னகை வாசம்
தாய் அன்பைப் போல் எங்கும்
தவம் ஒன்றும் இல்லை
வாழ்ந்திடும் அன்புக்கு
வானம் தான் எல்லை..

வி.சாத்வீகன், முல்லைத்தீவு

இருண்ட தேசமதில்
வரண்ட கேசமுடன்
அடம் பிடித்து குழந்தை
ஆகாரத்திற்காய் அழுகிறது
ஆகாரமில்லை அவளிடம்
அருமருந்து அவள் சிரிப்பு மட்டும் தான்
வறுமையின் வாட்டமாயினும்
வாய் நிறைந்த புன்னகைப் பூவை
புத்தூர் சொரிந்திடும் அன்புத் தாயவள்

**வி.பி.சிவேஸ்**
தண்ணீரூற்று

பொற்கொடி இல்லாப் பொற்றொடி இவள்
சிற்றிடை சேய்க்குச் சிம்மாசனம்..!!
பொக்கை வாயுதிர்க்கும் பூ
இவளுக்குத்தான் அமிழ்தம்...!!
சேய்முகங் கண்டு தன் சோகம்
மறக்குமிந்தத் தாய்க்கு புன்னகையோ நகை...!!!

**அளவை.த.சரஸ்வதிசுதன்**

மழலையின் சிரிப்பிலே
மகிழ்கிறாள் ஏழைத்தாயவள்
துன்பம் எத்தனை துரத்திடினும்
துயர் துடைப்பதுந்தன் ....
கபடமற்ற சிரிப்பன்றோ....
வறுமை எத்தனை வாட்டினும்
இறை எனக்களித்த வரம்
நீ தானே........

**சி.வினோதினி**
நல்லூர்

உலகில் கடவுள் வரமாய்த் தந்த
குழந்தையை இப்படி அன்போடு
மகிழ்வுடன் சுமக்கும் தாயே!
உன் தியாகத்தால் உலகில்
அந்தக் கடவுளுக்கே
கிடைக்காத வரமாய்
என்றும் திகழ்கிறாய்!

**சுப்பிரமணியன் ஜெயரூபன்**
2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

வறுமையிலும் செம்மையாக
வனப்புடன் இருவரும் சிரிக்கின்றனர்
தாகமும் பசியும் மறந்து
தாய்முகம் காண்கிறதே இம் மழலை
தாய்மையின் பெருமை இது தானோ!

*விமலதர்சினி மத்தியாஸ்*
*நவாலி*

**பரிசு பெறும் கவிதை**

அம்மா(ப்) பால் இல்லை
அப்பா(ல்) மாவுமில்லை யென்று
அண்ணாந்து நானழுதால்
அக்காதில் கேட்கவில்லை
எக்காமல் நான் சிரித்தால்
என்னம்மாவும் சிரிக்குதல்லோ

எஸ். நந்தா
மீசாலை

சித்திரமே செல்லப்
பொக்கிசமே செந்தமிழ்
உணர்வால் உனக்கு
அறிவூட்டுவேன்
ஏழைத்தாய் நான் செல்லமே
ஏழ்மைத் தீ எம்மை வாட்டினாலும்
விலைவாசி நடுவிலும்
உந்தன் சுந்தரப்புன்னகை
என் உயிர் கொடுத்து
உன்னை வாழவைப்பேன்

**முல்லை பரனிதா**

**ஆயிரம் முறை திட்டினாலும்**
**ஆசை ஆசையாய் கொஞ்சிடுவார் அம்மா**
**பத்து மாதம் பட்ட வலிகளை எல்லாம்**
**பத்தே நொடிகளில் தூக்கி வீசிடுவார் அம்மா**
**தன் பிள்ளைகளின் பசி போக்க**
**தன் வயிற்றை காயப்போட்டிடுவார் அம்மா**
**கலி காலத்தில் கண்கண்ட தெய்வம் அம்மா**
**கலி முத்தினாலும் நிலை மாறாதவர் அம்மா**

**சி.விநோஜிதன்,** பருத்தித்துறை

வெளிச்சம் வீசும் அழகு முகத்தில்
வெடித்த வெள்ளரி பழத்தின் சிரிப்பு
சிறிய மகனை இடையில் சுமக்கும்
வறிய தாயின் எளிமைக்கோலம்
உதிரப் பாலை ஊட்டும் தாய்மை
ஊட்டம் இன்றி உடல் தளர்ந்தால்
உலர்ந்த பாலின் விலையின் ஏற்றம்
ஏழைத் தாய்க்கு எட்டாக் கனி

**ச.ரண்குமார்**
வற்றாப்பளை

விடியும் மண்ணில் காலை
விடியலில் யாவும் மாற்றம்
செல்லமே விளையாடியது
போதும் மறந்து விட்டேன்
மாவினைப்போட
வா எம் இல்லம் செல்வோம்
ஊர்முழுதும் உலகெங்கும்
கொரோனாப் பேய் ஆட்சி செல்லமே!

**முல்லையூர் கர்மயோகி**

கொள்ளை அழகையே
கொள்ளையடித்தவளாய்
குழந்தையை
அள்ளியெடுத்தவளாய்
வெள்ளை
மனச் சிரிப்பால் எமது
வேதனையைக்
கரைத்து விட்டாள்
விலை கொடுத்தும்
வாங்க முடியாத
வரங்கள் இவர்கள்

**கே.எஸ்.சிவஞானராஜா**
கொக்குவில்

அலை விரிந்த
அடிமைத்தனங்களிடையே சிக்கி
விழி வழி சொரியும்
நீர்த்துளிகளைப் போக்க...
பாரிலுள்ள பாவைகட்கு
தம் மழலையின் மொழியே போதும்.

**ஆரணி சிவசக்திவேல்,**
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

**ஏழையவள் துன்பம் பல கோடி**
**ஏன் என்று கேட்பார் எவருமில்லை**
**எனக்கென்று அவள் கூறும்**
**ஒரே ஒரு சொந்தம் அவளின் அன்பு மகவு**
**எப்போதும் மகவின் புன்னகையைப் பார்த்திட**
**ஏங்குகின்றன அவளின் கயல்விழிகள்**

பா.யதுஷா,
உடுப்பிட்டி

கருவில் சுமந்து பெற்றெடுத்த
கண்கண்ட தெய்வம் நீ அம்மா
உன் புன்னகையில் நான் மகிழ்கின்றேன்
என் சிரிப்பில் உன் துயர் மறக்கின்றாய்
அம்மா மனசு பூங்கொத்து
பூக்களைப் பரிசாய்த் தருகின்றேன்
வறுமை எம்மை வாட்டிடினும்
வளர்ந்து உன்னைக் காத்திடுவேன்

**த.மகாதேவா**, சுன்னாகம்

**உன் இதயம் மகிழ்ந்திட நான்**
**இத்தனை நாள் இருந்தேன்**
**உன் முகமோ தாமரை போல்**
**மலர்ந்ததை இன்று கண்டேன்**
**உன் சிரிப்பில் என் வலிகள்**
**மறைந்ததடி கண்ணே**
**துன்பத்திலும் துவண்டிடாமல்**
**துணிந்து கல்வி கற்பாய்**

சி.சிவானந்தராசா
பண்டத்தரிப்பு

**கவிதைக்கு பரிசு 1000/=**

55



**கள்ளமில்லா வெள்ளை சிந்தையாய்**
**அன்பு மொழி பேசி**
**சிரிப்பு எனும் பூ பூத்தாய்**
**உதிரத்தை பாலாய் ஊட்டி வளர்த்தாய்**
**உன் தோளில் சாய மடி ஒன்று தந்தாய்**
**நிலவினைக் காட்டி சோறு ஊட்டி விட்டாய்**
**உனை போல பாரினில் சொந்தம் ஏது**
**இதயத்தில் வாழும் தெய்வம் நீ தான் அம்மா**

**கும்பவாழியான்**, உடுப்பிட்டி

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**05.11.2021**

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

சின்னஞ்சிறு மழலை தனை
தன் இருகைகளாலும் கட்டியணைத்து
காதல் என்ற பூமழை சொரிகின்றாள் அன்னை
இவரின் வாடியிருக்கும் வதனம் தனை
புன்னகை பூக்க செய்கிறது
பச்சிளம் குழந்தைகளின் மழலை மொழிகள்
இருவருக்கும் இடையில் பிணைந்து இருப்பது
அன்பு என்ற ஒற்றை வார்த்தை

**ஆ.பாலமதுஜா**
*மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை*

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது.

உடுவில் அரவிந்தன்

# சித்தவைத்தியர் தியாகராஜா சுதர்மனின்

# ஆகாரமே ஆதாரம்

எங்களுடைய அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவைப்பற்றிய கவனங்கள் குறைவடைந்து செல்கின்ற காலப்பகுதியில் வாழ்கின்றோம். இந்தக் காலமாற்றம் எமக்குரிய பாரம்பரிய உணவுகளை இளையதலைமுறையிடமிருந்து அந்நியப்படுத்திச் செல்கிறது. தொற்றாநோய்கள் எம்மை எச்சரித்துக்கொண்டிருக்கின்றன. எமது சராசரி ஆயுள் படிப்படியாகக் குறைந்துசெல்கிறது. அதற்கு எங்களுடைய நாளாந்த உணவுப் பழக்கவழக்கங்களே பிரதான காரணமென்றும் அறியவருகின்றது. இத்தகைய கேள்விகள் எழுகின்ற சூழ்நிலையில், சித்த வைத்தியர் தியாகராஜா சுதர்மன் தொகுத்து எழுதிய 'ஆகாரமே ஆதாரம்' என்ற நூல் வெளியாகியுள்ளமை கவனிக்கத்தக்கது. நமது உணவில் பாரம்பரிய சித்தமருத்துவமும் நவீன அறிவியலும் எவ்வாறு தொடர்புபடுத்தப்படலாம் என்பதை இயன்றளவு சிறப்பாக விபரிக்கின்ற ஒப்பியல் ஆய்வுநூலாக இதனைக் கருதலாம்.

தலைவாழையிலையில் கரிசனையோடு வைக்கப்பட்ட உப்பும் நீரும் அழகான அட்டைப்படமாக எங்களை எதிர்கொள்கின்றன. நூலாசிரியருக்குத் தோன்றாத் துணையாக நின்று வழிப்படுத்துகின்ற பெற்றோர் தியாகராஜா - கனகம்மா ஆகியோருக்கு நூலமுது படையலாக்கப்பட்டுள்ளமை உணர்வுபூர்வமான விடயமாகும். மேலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் உபபீடாதிபதி கலாநிதி பா. தனபாலனின் அருமையான வாழ்த்துரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகின் முதுநிலை விரிவுரையாளர் சித்தவைத்தியர் திருமதி விவியன் சத்தியசீலனின் சிறப்பான அணிந்துரையும் நூலுக்கு அணிசெய்கின்றன. அத்துடன், யா/இராமநாதன் கல்லூரி ஆசிரியர் திருமதி கனிமொழி சிவரூபன் நூலாசிரியரைப்பற்றிய அறிமுகக்குறிப்பினை வழங்கியுள்ளார். நூலாசிரியரின் என்னுரை தன்னிலைவிளக்கமாக ஆரம்பித்து நன்றியுரையாக நிறைவுறுகின்றது. இந்நூல் தரமான தாள்களில் அச்சிடப்பட்ட 296 பக்கங்களைக் கொண்டுள்ளது. அவசியமான ஒளிப்படங்கள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பாகும். குறிப்பாக இயற்கையை நேசித்த நம்மாழ்வார், குருந்தூர் மலையின் எட்டுப் பட்டைச்சிவலிங்கம் ஆகிய நிழற்படங்கள் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளன. இவை காலத்தை உணர்த்துகின்ற கனதியான பதிவுகளாகும்.




இந்த நூலானது உணவு அறிமுகம், உணவும் ஐம்பூதங்களும், உணவும் ஆரோக்கியமும், உணவுப்பாதுகாப்பு, உணவு உட்கொள்ளல், பத்தியாபத்தியம், பெண்களின் நலனில் உணவின் பங்கு, தாவர இரசாயனங்கள், தாம்பூலம் தரித்தல், உணவில் சில விசேட பகுதிகள், குழந்தைகள் சிறுவர்கள் - முதியோர்களுக்கான உணவுகள், பாரம்பரிய உணவுகள் ஆகிய பன்னிரண்டு உபதலைப்புகளின்கீழ் ஏராளமான விடயங்களை உள்ளடக்கியதாகத் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. உண்மையில் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் மட்டுமன்றி சாதாரணமக்களும் குறிப்பாகப் பாடசாலை மாணவர்களும் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய வாறு எளிமையான சொற்களாலான நல்லதோர் வெளியீடாகும்.

## நூல் அறிமுகம்



நாங்கள் 'உணவே மருந்தாக' வாழ்ந்த பண்பாட்டுப் பெருமிதங்களுக்குச் சொந்தக்காரர்கள். ஆனால் எங்களிற் பெரும்பாலானோர் தற்காலிகமான செயற்கைத்தனங்களிலிருந்து விடுபடுவதற்கு விரும்புவதில்லை. அதனால் அதிகரித்துச்செல்லும் தேவைகள் நிலையான ஆனந்தத்தை மட்டுமன்றி, எங்களுக்குரிய அருமையான பொழுதுகளையும் சேர்த்தே களவாடிவிட்டன. நாங்கள் பாரம்பரியங்களை விட்டுப் படிப்படியாக விலகிச் சென்றுகொண்டிருக்கிறோம். பழஞ்சோற்றையும் பனாட்டையும் புளுக்கொடியலையும் எள்ளுருண்டையையும் முகநூலில் பார்த்து அச்சாவென்று இரசிக்கிறோம். எல்லா மரக்கறிகளும் கலந்த சமநிலை உணவான குழைசோறு கோவிலுக்கென்றே நேர்ந்துவிடப்பட்டுள்ளது. உழுத்தங்களியைக் கண்டதும் குழந்தைகள் தலைதெறிக்க ஓடுகிறார்கள். இலைக்கஞ்சியை எட்டியும் பார்க்கிறார்களில்லை. குரக்கன் பிட்டைக் கண்டு கனகாலம். கொள்வாரில்லாமையால் விவசாயிகள் சிறுதானிய உற்பத்திகளில் ஈடுபடுவதில்லை.

இப்போதுள்ளவர்களுக்குப் பத்தியாபத்தியங்களென்றால் என்னவென்றே தெரியாது. இவையெல்லாம் கால மாற்றத்தின் மகத்தானபேறுகளென்றே சொல்லப்படுவதால், இயற்கையோடிணைந்த பெருவாழ்வு எங்களுக்குக் கனவாகவேயிருக்கிறது. அந்தக் கனவை வசப்படுத்தும் அதியற்புதமான திறவுகோல் எங்களிடமேயுள்ளது. ஆனால், அதை எமக்குள்ளிருந்து தேடியெடுப்பதில் நாங்கள் அக்கறைகாட்டுவதில்லை என்பதே யதார்த்தமாகும். இந்நூலிலுள்ள 'பாரம்பரிய உணவுகள்' என்ற முத்தாய்ப்புப் பகுதியைப் படிக்கும்போது இழந்தவற்றைப்பற்றிய ஏக்கங்கள் கெம்பியெழுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

எங்களுடைய முன்னோர்கள் உன்னதமான கருத்துகளைக்கூறும் அற்புதமான இலக்கியங்களைத் தந்திருக்கிறார்கள். அறநெறியையும் ஆரோக்கியமான ஆனந்த வாழ்வையும் முன்வைக்கின்ற தமிழ்நூல்களில் முதன்மையானது திருக்குறள் என்றால், சித்தமருத்துவத்தையும் அதன் ஒப்பற்ற தத்துவங்களையும் முழுமையாக உணர்த்துபவை அகத்தியரும் திருமூலரும் தேரையரும் யூகிமுனியும் இன்னும் பல சித்தர்களும் அருளிச்செய்த பாடல்கள் எனலாம். பிற்காலத்தி லெழுந்த பரராசசேகரமும் செகராசசேகரமும் எங்கள் மண்ணுக்கேயுரிய தனித்துவமான சித்தமருத்துவ நூல்களாகும்.

இவற்றையெல்லாம் பல்கலைக்கழக சித்தமருத்துவப் பாடத்திட்டத்தில் முழுமையாக இணைப்பதன்மூலம் தமிழர் மருத்துவத்தின் அற்புதமான வீச்சினையும் பாரம்பரியத்தினையும் நிலைபெறச் செய்ய முடியுமென்பதே ஆர்வலர்களின் விருப்பாகவுள்ளது. இவ்வாறான விடயங்களையும் கவனத்திற்கொண்டே 'ஆகாரமே ஆதாரம்' என்ற நூல் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதமுடியும். ஒப்பியல் ஆய்வுகளின் தொடக்கப்புள்ளிகளே இன்றைய காலகட்டத்தில் அவசியமானவை.

சித்தவைத்தியர் தியாகராஜா சுதர்மன் சித்தமருத்துவத்தில் அதீத ஈடுபாடுகொண்டவர். திருகோணமலையில் கிழக்கு மாகாண சுதேசமருந்துகள் உற்பத்தி மையத்தின் பொறுப்பதிகாரியாகவிருந்த காலத்தில் ஏராளமான சித்தமருந்துகளின் உருவாக்கத்தில் முன்னின்றவர். அரிதான சித்தமருந்துகளை அறிமுகப்படுத்துவதில் ஊக்கத்துடன் செயற்பட்டவர். தற்போது யாழ். மாநகரசபையில் சித்தமருத்துவ அதிகாரியாகப் பணியாற்றுகின்றார். அத்துடன், 'மானிப்பாய் சுதன்' என்றபெயரில் அங்கதமும் எளிமையுங் கலந்து நடப்பியல் சார்ந்த சிறுகதைகளைப் பத்திரிகைகளில் எழுதி வருகின்றார்.

அவருடைய நூலானது விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைந்த கலவையாக உருவாகியிருக்கிறது. அதற்கு அவருடைய சித்தமருத்துவ அறிவும் பேராதனைப் பல்கலைக்கழக உணவும்போசணையும் பட்டமேற்படிப்பும் உளவளஆற்றுப்படுத்தும் தகைமையும் பெரிதும் துணைசெய்திருக்கின்றன எனலாம்.

அர்ப்பணிப்பும் தேடலும் மிகுந்த அவருடைய நூலானது வாசிப்பவர்களிடம் சித்த மருத்துவம் சார்ந்த ஈர்ப்பினை நிச்சயம் ஏற்படுத்துமென்று உறுதியாக நம்பலாம். 'ஆகாரமே ஆதாரம்' எல்லா வீடுகளிலும் கட்டாயம் இருக்கவேண்டிய நூலென்று சொன்னால் மிகையில்லை. இதுவும் நல்லதோர் ஆரம்பமாக அமையட்டும்.

---

# வெண்ணிலவே...

அ. அன்புமாறன்


விண்ணில் மின்னும் மீன்களிடை
விளங்கும் நல்ல வெண்ணிலவே
மண்ணில் மக்கள் மகிழ முழு
மதியாய் என்றும் வாராயோ!

நிலவே நீயும் நீள்வானில்
நிலவுவதால் நிலவென்றாரோ?
உலகோர் உவக்க ஒளிதந்து
உலவும் உனக்கேன் உருமாற்றம்?

வழியில் உனைக் கார் மேகம்
வந்து மறைப்பது அநியாயம்
எழில்மிகு தண்மதி உன்மீது
எரிச்சல் ஏன்தான் கொண்டதுவோ?

நல்லது செய்ய வேண்டுமென
நாடிச் சேவை செய்வார்க்குத்
தொல்லை துன்பம் தடை எல்லாம்
தோன்றும் அதற்கு நீ உவமை

# சிறுவர் கைவண்ணம்





N.கிருத்திகன்,
தரம்: 6,
யா/ இந்துக் கல்லூரி.



சு.அஸ்மிகா, தரம் 2
வ/நெளுக்குளம் கலைமகள்
மகா வித்தியாலயம்



றெ.ஹெமோஸ்,
தரம் 9E
சென்.பற்றிக்ஸ்
கல்லூரி.



உ.வேனுஷன்,
தரம் -1
சென்.ஜோன்ஸ் கல்லூரி.





ஞா.ஆதிரை,
தரம் -4
யா/சுழிபுரம் அ.மி.த.ம.
பாடசாலை.

நிதுஷனா,
தரம் -5F
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை.




வ.மதுஜா,
தரம் -7F
யா/ இந்து மகளிர்
கல்லூரி.

# ஒழுக்கம் உயர்வு தரும்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது ஆன்றோர் வாக்காகும். செல்வம், பதவி, கல்வி என்னும் உயர்ச்சிகள் எல்லாம் ஒழுக்கத்துக்கு ஈடாக முடியாது. பணம் படைத்த செல்வந்தர் பலர் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காததால் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு நிம்மதியிழந்து வாடுகின்றனர். ஒழுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தையல்ல. அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல நற்பண்புகளின் சேர்க்கையாகும். ஒழுக்கத்தை வளர்ப்பதில் பெற்றோர், ஆசிரியர் சமூகத்தின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து ஒழுக்கத்தைப் பேண வேண்டும். அன்றாடம் தமது சொந்தக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து பெற்றோரை, பெரியோரை கனம் பண்ணுதல், பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லுதல், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல், பணிகளை தவறாது செய்வதுவரை ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோர் தம் பிள்ளைகளை சுயநலம் அற்றவர்களாகவும் பிறருக்கு உதவும் சிந்தனை உள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டும். தர்மத்தை, நீதியை, ஒழுக்கத்தைப் போதிக்கும் கதைகளை வாசித்தல், மகிழ்ச்சியான பொழுது போக்கு அம்சங்கள், போதுமானளவு விளையாட்டு ஆகியவை சிறுவர்களிடையே ஒழுக்கமுள்ள மனப்பான்மையை வளர்க்கும்.




# விடுகதைகள்

1)வால் உண்டு உயிர் இல்லை அங்கும் இங்கும் பறப்பான் அவன் யார் ?

**பட்டம்**

2)ஒரு குப்பிக்குள் இரண்டு தைலம் அது என்ன?

**முட்டை**

3) மூன்று கண் இருக்கும் இவனால் பார்க்க முடியாது அவன் யார்?

**தேங்காய்**

4) உணவை அள்ளுவான் ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?

**கரண்டி**

5) கொம்பு நிறைய கம்பு அது என்ன?

**மாதுளம்பழம்**

6)ஆடும் வரை ஆட்டம் ஆடிய பின் ஓட்டம் அது என்ன?

**இதயம்**

7) கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது என்ன?

**உப்பு**



8) தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?


**இளநீர்**

9) முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை அது என்ன?

**நாக்கு**

**உ.ஆராதனா**, தரம்-3,
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

# விக்கல்



நெஞ்சுப் பகுதியையும், வயிற்றையும் பிரிக்கும் தசையின் பெயர் உதரவிதானம். இந்தத் தசையில் ஏற்படும் துடிப்புதான், விக்கல். இந்தத் தசைத் துடிப்பு ஏற்படும்போது, நுரையீரல் சுருங்கி விரிவதில் சிரமம் ஏற்பட்டு, தொண்டையின் குரல் நாளம் வழியாக சத்தத்துடன் விக்கல் வருகிறது.

வாயுக்கள் நிறைந்த பானங்கள் அருந்தும்போது, வேகமாகச் சாப்பிடும்போது, வயிறு நிரம்பச் சாப்பிடும் போது இந்தப் பிரச்சினை ஏற்படும். விக்கல் ஏற்படும்போது பயமுறுத்தினாலோ, அதிர்ச்சியான செய்தியைச் சொன்னாலோ, உடல் உள் உறுப்புகள் சில நொடி அதிரும். உடலில் உள்ள நரம்பு இயக்கம், சுவாசம், நுரையீரலின் இயக்கம் ஓரிரு நொடிகள் நின்று, மீண்டும் செயற்படும். இதனால், விக்கல் நின்றுவிடும். ஆனால், இந்த சுய மருத்துவ முறை மிகவும் தவறு. ஓரிரு நொடிக்குமேல் அதிர்ச்சியில் நரம்பு இயக்கம் நின்றுவிட்டால், பெரிய பிரச்சினை ஏற்படும்.

எனவே, விக்கல் வரும்போது ...வாக நீர் அருந்தவும். 10 ... வரை ...சை இழுத்துப் ... மூச்சுப் பயிற்சி செய்யவும்.

# அறிந்துகொள்வோம்

'பிரமிடு கோவில் நாடு' என்று அழைக்கப்படுவது,
**பர்மா**

இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர்,
**முசோலினி.**

சூரியக்குடும்பத்தைக் கண்டறிந்தவர்,
**கோபர் நிக்கஸ்.**

சிங்கப்பூரின் முந்தைய பெயர் - **டெமாஸெக்**

உலகின் வெண்தங்கம் **பருத்தி.**

குருதிச் சிவப்பணுக்களின் ஆயுட்காலம்,
**120 நாட்கள்.**

பறவைகளிலேயே மிகவும் நீளமான நாக்கு உடையது,
**மரங்கொத்தி.**

உலக வானிலை மையம் அமைந்துள்ள இடம்,
**ஜெனீவா.**

புத்தர் பிறந்த இடம் - **லும்பினி.**

எறும்பின் ஆயுட்காலம் - **10 ஆண்டுகள்**

இளம்வயதில் ஓவியராக இருந்தவர்- **ஹிட்லர்**

புறாப் பந்தயம் தோன்றிய இடம்- **பெல்ஜியம்**

பாம்பு இல்லாத தீவு- **ஹவாய்**

உலகின் மிகப்பெரிய நகரம்- **ஷாங்காய்.**

சஞ்சீவி
31 ஒக்ரோபர் 2021

விளையாட்டு

# யாரிடம் நோவோம்?




ஆர்.லயனல்

தென்னாபிரிக்க கிரிக்கெட் மீண்டும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இனவெறிக்கு எதிராக குறிப்பாக கறுப்பினத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கிரிக்கெட் ஆட்டங்கள் ஆரம்பமாகுவதற்கு முன்னர் முழங்காலில் இருந்து மேற்கொள்ளப்படும் சபதத்தை குயின்டன் டி ஹொக் செய்ய - ஏற்க மறுத்த விவகாரம் தென்னாபிரிக்க கிரிக்கெட்டுக்குள் மீண்டும் இனவெறி உச்சம் தொட்டுள்ளதா என்ற பொதுமையான கருத்து வலுப்பெற்றுள்ளது.


மேற்கிந்தியத் தீவுகள் அணியால் கொண்டுவரப்பட்ட இந்தக் கலாசாரம் தற்போது தென்னாபிரிக்க கிரிக்கெட்சபையாலும் கண்டிப்பாகப் பின்பற்றப்படுகின்றது. அப்படியிருக்கையில், இதைச் செய்வதில், இந்த 'நல்ல' நடைமுறையைப் பின்பற்றுவதற்கு குயின்டனுக்கு என்ன பிரச்சினை என்று உங்களில் பலரும் கேட்கலாம். அதற்கான பதிலை கொஞ்சம் விலாவாரியாக ஆராய்ந்தால் குயின்டனுடன்தான் நாமும் நிற்கவேண்டி வரலாம்.

கறுப்பினத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் உலகமெங்கும் பொதுவாக நடந்துகொண்டிருந்தாலும் தென்னாபிரிக்காவில் தற்போது நடப்பதெல்லாம் வெள்ளையின மக்களுக்கு எதிரான அடக்குமுறைதான். அங்கு கறுப்பினத்தவர்களால் வெள்ளையின மக்கள் அடக்கப்படுகின்றனர். ஒடுக்கப்படுகின்றனர். இவ்வளவு ஏன், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் குறைந்தது 6 பேர் கறுப்பினத்தவர்களாக இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி. இந்த எண்ணிக்கை அடுத்த வருடம் 7ஆக மாறவுள்ளது. 8 ஆக மாற்றுவது குறித்தும் பேச்சு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதாவது திறமை இருக்கின்றதோ இல்லையோ வெள்ளையினத்தவர்களை விட கறுப்பினத்தவர்கள் கூடுதலாக அணியில் விளையாட வேண்டும்.

வில்லியர்ஸ், டுபிளஸி உள்ளிட்ட ஜாம்பவான் வீரர்கள் பலரும் தம் காலத்துக்கு முன்னதாகவே ஓய்வை 'அவசர' கதியில் அறிவித்தமைக்கும் இதுதான் காரணம் என்று கருதப்படுவதும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்.

ஆக, தன் நாட்டில் தன் இனத்தை ஓர் இனம் அடிமைப்படுத்தும்போது அடிமைப்படும் இனத்தை விட அடிமைப்படுத்தும் இனத்துக்குப் பிரச்சினை இருப்பதாகக் காட்டிக்கொள்வதில் குயின்டன் டி ஹொக்குக்கு உடன்பாடில்லை. அவ்வளவுதான் இதில் உள்ள விடயம். குயின்டனின் இடத்தில் இருந்து சிந்தித்தால் அவரின் நிலைப்பாடு சரி எனவும் கொள்ளலாம். அதேநேரம், இது ஒரு சர்வதேச அரங்கு. தென்னாபிரிக்காவுக்கு வெளியில் நடப்பதையும் கருத்திற்கொண்டு குயின்டன் செயற்பட்டிருக்கலாம். தென்னாபிரிக்காவில் கறுப்பினம் அடிமைப்படுத்துகின்றது என்பதற்காக தென்னாபிரிக்காவுக்கு வெளியில் அந்த இனம் அடிமைப்பட வேண்டும் என்று எண்ணுவதும் தகாதுதான்.

யாவற்றையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப்பார்த்தால் ஒன்றுமட்டும் பட்டவர்த்தனமாகத் தெரிகின்றது. தென்னாபிரிக்கா கிரிக்கெட்டுக்கு மீட்சி என்பது அவ்வளவு அருகில் இல்லை. ஏற்கனவே நிறவெறியால் சர்வதேச அரங்கில் கிரிக்கெட் விளையாடுவதற்குத் தடைபெற்ற தென்னாபிரிக்கா, இன்னும் திருந்தவில்லை. அதன் ஆத்மத்தில் எந்த மாற்றமும் நிகழவில்லை. இதனால் தானோ என்னமோ நியூசிலாந்தை நேசிக்கும் அளவுக்கு தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் மீது அவ்வளவு பிரியம் எவருக்கும் வருவதில்லை. ■




கறுப்பினத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் உலகமெங்கும் பொதுவாக நடந்துகொண்டிருந்தாலும் தென்னாபிரிக்காவில் தற்போது நடப்பதெல்லாம் வெள்ளையின மக்களுக்கு எதிரான அடக்குமுறைதான்.

# பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை!

ஆர்.பிரகாஷ்






வடகொரியா என்றால் முதலில் நினைவுக்கு வருவது அந்த நாட்டின் அணுவாயுதச் சோதனைகள்தான். உலகின் முதல்நிலை வல்லரசான அமெரிக்காவை நேரடியாகப் பகைத்துக்கொண்டும், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைத் தாங்கிக்கொண்டும் எவ்வாறு வடகொரியாவால் தாக்குப்பிடிக்க முடிகின்றது? என்ற கேள்வி கடந்த சில வருடங்களாகவே சர்வதேச அரசியல் அவதானிகளின் மனங்களில் இயல்பாகவே இருந்துவரும் ஒன்றுதான்.

இந்தக் கேள்விகள் அதன் பின்னரான மர்மங்கள் இந்த மாதம் மிகவும் வலுப்பெற்றன. காரணம் வடகொரியாவின் புதிய ஏவுகணைச் சோதனைகள். கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்துசெல்லும் ஏவுகணைகள், ஹைப்பர் சொனிக் ஏவுகணைகள் என்று மிகப்பலமான ஆறு ஏவுகணைகளை கடந்த 30 நாள்களுக்குள் வடகொரியா சோதித்தது. இதனால், வடகொரியாவுக்குப் பணம் எங்கிருந்து வருகின்றது?, எவ்வாறு அந்த நாடு வறுமையின் பிடிக்குள் தள்ளப்படாமல் இருக்கின்றது?, அமெரிக்காவை, ஐரோப்பிய ஒன்றியத்தை, ஐக்கிய நாடுகள் சபையைப் பகைக்கும் அளவுக்கு அதுவும் நேரடியாகப் பகைக்கும் அளவுக்கு வடகொரியாவிடம் திராணி இருக்கின்றதா? என்பன பதில் தெரியாக் கேள்விகளாக இருந்தன. ஆனால், 'பேச்சு பல்லக்கு, தம்பி கால் நடை' என்பதாக முடிந்துள்ளது வடகொரியாவின் பகட்டு வாழ்க்கை.

வடகொரியாவில் ஒரு கிலோ வாழைப்பழத்தை நீங்கள் வாங்க வேண்டுமென்றால் அதற்காக இலங்கைப் பெறுமதியில் சுமார் 3 ஆயிரத்து 300 ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கும் என்றால் அதை உங்களால் நம்ப முடிகின்றதா? அதுதான் உண்மை. உச்சக்கட்டப் பொருளாதாரப் பின்னடைவுக்குள்ளும், உணவுத் தட்டுப்பாட்டுக்குள்ளும் வடகொரியா சிக்கிச் சிதிலமடைந்து வருகின்றது.



கொரோனாத் தொற்று தம் நாட்டுக்குள் வந்துவிடக்கூடாது என்பதற்காக நாட்டின் எல்லைகளை மூடியமையே வடகொரியா இந்தப் பொருண்மிய நலிவுக்குள் செல்வதற்குக் காரணம் என்று அந்த நாட்டின் அரசால், சப்பைக்கட்டுக் கட்டப்பட்டாலும் அது முதன்மைக் காரணம் இல்லை என்பதும் அளவுகடந்த ஏவுகணைகள் மற்றும் ஹைப்பர் சொனிக் சோதனைகளால்தான் வடகொரியா அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது என்பதும் கைப்புண்ணுக்குக் கண்ணாடி நிலை. தென்கொரியாவுடன் வரலாற்றுப் பகை வடகொரியாவுக்கு உண்டு. கொரியத் தீபகற்பத்தில் தன் இருப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை வடகொரியாவுக்கு இருக்கவே செய்கின்றது. இதையெல்லாம் மறுதலிப்பதற்கில்லை. ஆனால், ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் வடகொரியா தன்னை மீண்டும் கட்டமைக்கக்கூடிய - கட்டியெழுப்பக்கூடிய அற்புதமான வாய்ப்பு ஏற்பட்டது. அதை வடகொரியா கோட்டை விட்டது. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் தான்தோன்றித்தனமானதும் பிற்போக்குத்தனமானதுமான செயற்பாடுகள்தான் அந்த நாட்டின் அழிவுக்கும் பின்னடைவுக்கும் மூலவேராக உள்ளன. இதன் விளைவாகவே இந்தப் பொருண்மிய நலிவை எதிர்கொண்டுள்ள வடகொரியா 2025ஆம் ஆண்டுவரை குறைந்தளவு உணவை உண்ணுமாறு தன் நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுக்கும் நிலைக்குச் சென்றுள்ளது.

சீனாவை மட்டும் நம்பியிருப்பதாலும் சீனாவை நம்பி சர்வதேசத்தையும் அமெரிக்காவையும் புறக்கணிப்பதாலும் வடகொரியா எத்துணை நெருக்கடிக்குச் செல்லும் என்பது உலகில் வேறுசில நாடுகளை முன்னெடுப்பாகக் கொண்டு ஏற்கனவே கணிக்கப்பட்டதுதான். ஆதலால் அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. அதேநேரம் இதில் ஆச்சரியத்துக்குரிய விடயமொன்றும் உள்ளது. அது இலங்கையின் அண்மைக்காலப் போக்கையும் பொருண்மிய நலிவையும் அறியாது, இதை எழுதும் நானும் நீங்களும் வடகொரியர்களைப் பார்த்து கவலை கொள்வதுதான். எம் அடுப்பங்கரைகளிலும் பூனைகள் படுக்கக் காத்திருக்கின்றன. ■

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# 13 பற்றி...



ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் '13' பற்றி அதுவும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டதொரு சூழலில், பேசமுற்படுவது பட்டறிவற்ற தன்மை என்பதையே வெளிப்படுத்துகின்றது. அப்படிப் பேசுவதாக இருந்தால் முன்வைக்க வேண்டிய கோரிக்கைகள் தான் என்ன?

சம்பந்தன் 2006 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியது போன்று முதலில் சிங்கள ஆட்சியாளர்கள் '13' ஐ அமுல்படுத்த வேண்டும். ராஜபக்சக்கள் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் மாத்திரமல்ல, சஜித், ரணில் மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகளும் இணைந்து '13 'ஐ செம்மைப்படுத்த வேண்டும். அதற்கு இந்தியா பொறுப்பு நிற்க வேண்டுமெனத் தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்த வேண்டும்.

அதாவது '13' பற்றிய தமது மனச்சாட்சியை முதலில் சிங்கள ஆட்சியாளர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட வேண்டும். அந்த நிபந்தனைகள் மிகவும் குறுகியகால எல்லையைக் கொண்டிருப்பதும் அவசியம்.

சென்ற ஜெனீவா தீர்மானத்தில் '13' பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இந்தியா ஏன் பதுங்கியது என்ற கேள்விகளும் உண்டு. நல்லாட்சியெனத் தம்மைத் தாமே மார்தட்டிக் கொண்டு 2015 இல் ஆட்சிக்கு வந்த ரணில்- மைத்திரி அரசாங்கமே '13' பற்றி எதுவும் பேசாத சூழலில், ராஜபக்ச அரசாங்கத்திடம் அது பற்றி ஏன் இந்தியா அதிகம் பேசுகின்றது என்ற சந்தேகங்களும் இல்லாமலில்லை.

'13 இல் இருந்த முக்கிய அதிகாரங்கள் மைத்திரி-ரணில் ஆட்சியில்தான் கொழும்பு நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டன என்ற கசப்பான உண்மைகளையும் முதலில் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் 2015 மார்ச் மாத ஜெனீவாத் தீர்மானத்தில் '13 'அரசியல் தீர்வென வலியுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு ரணில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியதோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பும் வழங்கியிருந்தது. இதன் பின்னணியில் இன அழிப்புக் குறித்த விசாரணையை ஏற்று, வடக்கு- கிழக்குத் தாயகம் என்பதையும் வெளிப்படையாக அங்கீகரிக்கக்கூடிய தற்துணிவு இந்தியாவிடம் உள்ளதா இல்லையா என்பதை விட, இந்தியாவிடம் அவ்வாறு கோரக்கூடிய துணிவும் சுயமரியாதையும் நேர்மையும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருக்க வேண்டிய அவசியமான காலகட்டமிது.





# அபகரிக்கப்படும் அப்பாவிகளின் நிலம்!

○ ந.பரமேஸ்வரன்

**2009** மே 18 அன்று இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. ஆயினும் இன்னும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப முடியவில்லை. 6 ஆயிரத்து 511 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 178 பேர் இன்னமும் தமது காணிகளைப் பார்க்க முடியாத நிலையில் உள்ளனர் (ஆதாரம் : மீள்குடியேற்றப் பிரிவு, யாழ். மாவட்ட செயலகம்- 2020) 1990 ஜூன் 16 இல் வலிகாமம் வடக்கு மக்கள் 85,000 பேர் (35,000 குடும்பங்கள்) தங்கள் சொந்தக் கிராமங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் மூண்டபோது, வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. வலிகாமம் வடக்கு மக்கள் 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி வானொலி, தொலைக்காட்சி மற்றும் இராணுவ ஹெலிகொப்டரில் இருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரம் போன்ற அரசாங்கத்தின் குறுகிய அறிவிப்புடன், கையில் அகப்பட்ட பொருள்களோடு தமது வீடுகளை விட்டு வெளியேறினர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவநடவடிக்கையை அரசாங்கம் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற பெயரில் தொடங்கியது. மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி கோவில்கள் மற்றும் தேவாலயங்களில் குடியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர் முப்படைகளின் உதவியுடன் படையினர் முன்னேறினர். இந்த அறிவிப்பைத்தொடர்ந்து மக்கள் தங்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீடுகளை விட்டுவெளியேறினர். எறிகணைத் தாக்குதலுக்கு மத்தியில் மக்கள் கால்நடையாகவும் மிதிவண்டிகளிலும் தமது வீடுகளை விட்டு வெளியேறினர்.

1987.7.29 அன்று அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி , இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோர் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

1990 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் தேதி, இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையே போர் மூண்டபோது இரண்டாம் கட்ட இடப்பெயர்வு தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில், பலாலி இராணுவ முகாமின் நான்கு பக்கங்களிலும் உள்ள கிராமங்கள் மீது தொடர்ச்சியான ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் மூலம், மீதமுள்ள மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். 1993 இறுதிக்குள் வெளியேற்றம் முடிந்தது. இதைத் தொடர்ந்து வீடுகள், தேவாலயங்கள் மற்றும் மருத்துவமனைகள் இடிக்கப்பட்டன. மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர், வெறிச்சோடிய பிரதேசங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்து, வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்களைச் சூறையாடித் தங்களுக்குத் தேவையானவற்றைக் கைப்பற்றி எஞ்சியதை அழித்தார்கள். 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததைத் தொடர்ந்து இராணுவம் 12 கிராமங்களில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கியது. அதே நேரம், 30 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்து, அதன் மூலம் இந்தப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு அந்தக் கிராமங்களுக்கு திரும்பவோ அல்லது மீள்குடியேறவோ உரிமை மறுக்கப்பட்டது.

1999 ஜூன் 8 ஆம் தேதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம், நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ், உயர் பாதுகாப்பு வலயத்தில் மொத்தம் 261,7365 ஹெக்ரெயர் நிலத்தில் 397 ஒதுக்கீடுகள் "பொது நோக்கத்துக்காக தேவை மற்றும் கையகப்படுத்தப்படும்" என்று அரசாங்கம் அறிவித்தது. அந்தச் சட்ட விதிகளின்கீழ் , இராணுவத்தினர் புல்டோசர்களுடன் நகர்ந்து, தங்களுக்குத் தேவையான வீடுகளைத் தவிர, அனைத்து குடியிருப்புகளையும் இடித்து, பதுங்கு குழிகளையும் பாதுகாப்பு எல்லைகளையும் அமைத்து. மக்கள் அடர்த்தியாகவாழ்ந்த பகுதிகளில் கண்ணிவெடிகளுக்குப் பயந்து ஏற்கனவே இருந்தவீதிகளை பயன்படுத்துவதைத் தவிர்த்து புதிய வீதிகளை அமைத்தனர். முதல், இடப்பெயர்வின்போது 400 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இரண்டாம் இடப்பெயர்வின்போது இடம்பெற்ற உயிர் இழப்புகள் குறித்து நம்பகமான புள்ளிவிவரங் கள் எதுவும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் நடுத்தர மற்றும் உயர் நடுத்தர மக்கள் வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர். 1993 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட 218 நலன்புரி நிலையங்களில் 30 ஆயிரத்து 164 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 367 பேர் வாழ்ந்தனர். (ஆதாரம்: மீள்குடியேற்ற பிரிவு , மாவட்ட செயலகம். யாழ்ப்பாணம்) இடம்பெயர்ந்த மக்கள் போரின் போதும் போருக்குப் பின்னரும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்காக பல போராட்டங்களையும் பேரணிகளையும் மேற்கொண்டனர். 2013 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போராட்டம் ஒன்றை நடத்தியது. இந்தப் போராட்டத்தில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

2011 ஆம் ஆண்டு அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் இப்போதைய நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ச உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட மாவிட்டபுரம் ஆலய முன்றலில் பிரமாண்டமான கூட்டமொன்றில் உரை நிகழ்த்தினார். எதிர்காலத்தில் இலங்கையில் "உயர் பாதுகாப்பு வலயம்" இல்லை எனஅவர்கூறியபோது கூட்டத்தில் திரண்டிருந்த பொதுமக்கள் கூச்சலிட்டு கைதட்டி அவரது உரையை வரவேற்றனர். யுத்தம் முடிவடைந்து ஏறக்குறைய பதினொரு வருடங்கள் கடந்துவிட்டன, தற்போதைய நிதியமைச்சரும் முந்தைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் இனிமேல் இலங்கையில் பாதுகாப்பு வலயங்கள் எதுவும் இல்லை என உரையாற்றி பத்து வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், 6 ஆயிரத்து 511 குடும்பங்கள், 23ஆயிரத்து 178 பொதுமக்கள் இன்றுவரை தங்கள் சொந்த இடங்களைப் பார்க்க முடியாத நிலையில் உள்ளனர். ஜே/248, ஜே/255,ஜே/256 ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகள் இன்னமும் முற்றாக விடுவிக்கப்படவில்லை.

**யுத்தம் முடிவடைந்து ஏறக்குறைய பதினொரு வருடங்கள் கடந்துவிட்டன, தற்போதைய நிதியமைச்சரும் முந்தைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் இனிமேல் இலங்கையில் பாதுகாப்பது வலயங்கள் எதுவும் இல்லை என உரையாற்றி பத்து வருடங்கள் கடந்துவிட்டன.**

கீரிமலை மற்றும் காங்கேசன்துறையின் ஒரு பகுதி இப்போது துறைமுக பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 3300.37 ஏக்கர் நிலம் இன்னும் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளது. இதில் 3027.85 ஏக்கர் தனியார் காணி மற்றும் 272.52 ஏக்கர் அரச காணி.

இந்தநிலையில் நவம்பர் இரண்டாம் திகதி கீரிமலையில் துறைமுக பாதுகாப்பு பிரதேசத்துக்குரிய காணி அளவீடு செய்யப்படவுள்ளதாக காணி உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தால் உங்களது காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என அப்போதைய ஆளுநர் சுரேன் ராகவனால் கடிதம் வழங்கப்பட்ட காணிகளே இரண்டாம் திகதி அளவீடு செய்யப்படவுள்ளன. எப்போதும் அப்பாவிகளின் நிலம் அபகரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது.


# உண்மையை மறைக்க முற்படுகிறார்களா பொலிஸார்?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## சாட்சிகள் , ஆதாரங்கள் இருந்தும் விசாரணையில் மந்தம்

### அவனின் முன்கதை

மதியாபரணம் ஜெனுசன். அவன் தான் வீதியோரத்தில் சடலமாக மீட்கப்பட்டவன். வயது வெறும் 21 தான். ஊரணி, தையிட்டிதான் சொந்த இடம். போரால் அவன் குடும்பம் முல்லைத்தீவுக்கு இடம்பெயர, அங்கேதான் ஜெனுசன் பிறந்தான். பின்னர் சமாதான ஒப்பந்தம் காரணமாக மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்து நலன்புரி நிலையத்தில் அவன் குடும்பம் தங்கியது. அவனது குடும்பச் சூழல் அவனை தரம்- 8 வரை தான் கல்வி கற்க அனுமதித்தது. பின்னர் அவன் வேலைக்குப் போகத் தொடங்கினான். இதனால் அவன் வாழ்வே திசைமாறியது. சிறுவயதிலேயே குடிப்பழக்கத்துக்கு அடிமையானான். மேசன் வேலை, கூலி வேலை என்று எது கிடைத்தாலும் செய்யக்கூடியவனாக இருந்தான். மாவிட்டபுரம், நல்லிணக்கபுரத்தில் குடியேறிய ஜெனுசன், உறவுக்கார பெண்ணைத் திருமணம் முடித்து, ஒரு குழந்தைக்கும் தந்தையாகியிருந்தான். அந்தச் சமயத்தில் தான் அன்றைய நாள் அவன் வாழ்வில் குறுக்கிட்டது.




### கொலையா விபத்தா நோயா?

நடந்த சம்பவங்களையும், அழகுவின் முன்னைய நடத்தைகளையும் கூட்டிக் கழித்துப் பார்த்த ஜெனுசனின் உறவினர்கள் இதுகொலை தான் என்று விடாப்பிடியாக நின்றனர். ஆனால் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் பெரிதாக அக்கறை காட்டவில்லை என்று ஜெனுசனின் உறவினர்கள் இப்போதும் குற்றம் சாட்டுகின்றனர். 'ஏதேனும் நோய் காரணமாகவே இறப்பு நடந்திருக்க வேண்டும். கொலையாக இருக்காது' என்ற கோணத்திலேயே பொலிஸாரின் செயற்பாடு இருந்ததாக அந்தப்பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

சடலம் மீட்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட இரு சோடி செருப்புகளில் ஒன்று அழகுவினுடையது. அதை ஜெனுசனின் சகோதரி பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார். அதனையடுத்து அழகுவின் வீட்டுக்கு பொலிஸார் போனபோது அவன் அங்கிருக்கவில்லை. ஆயினும் மாலையில் அவனாகவே பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தான்.

" நான் கொலை செய்யவில்லை. ஆனால் என்னைத் தேடி பொலிஸ் வந்ததால், வீண்பிரச்சினை வரக்கூடாது என்றே சரணடைந்தேன் " என அப்பாவியாகச் சொன்னான். அதன்பின்னர் கொஞ்சம் பொலிஸார் அக்கறை எடுத்து, கொலையாக இருந்திருக்கக் கூடும் என்ற கோணத்தில் விசாரணையைத் தொடங்கினர். காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள சி.சி.ரி.வி கமெராக்களில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் பரிசீலிக்கப்பட்டன. அவற்றில் அழகு ஒரு மோட்டார் சைக்கிளில் 'ஆமரோடு' வருவதும், பின்னர் சிறிது நேரத்தில் திரும்பிச் செல்வதும் பதிவாகியிருந்தன. அதன் பின்னர் இன்னொருவனை மோட்டார் சைக்கிளில் அழகு அழைத்து வந்து செல்லும் காட்சிகளும் இருந்தன.



### செத்தவீட்டுச் சண்டையும் முன்பகையும்

16.09.2021

ஜெனுசனுக்கு கொஞ்சம் உடல் அலுப்பாயிருந்தது. அதனால் அன்றைக்கு அவன் வேலைக்குப் போகவில்லை. வீட்டில் இருந்ததால் குழந்தையோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கையில், மல்லாகத்தில் அவனது உறவினர் ஒருவரின் சாவு வீட்டுச் செய்தி வந்து சேர்ந்தது. செத்தவீட்டுக்கு அவன் போக வேண்டும். அதற்காக நண்பன் ஒருவனின் மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொண்டு காலையில் சென்றவன் மதியம் போல மீண்டும் வீட்டுக்கு வந்தான்.

" மல்லாகத்தில செத்தவீடு. அங்கதான் போட்டு வாறன். மகன் சின்னவரெல்லோ. செத்தவீட்ட போட்டு அப்பிடியே உள்ளுக்க வரக்கூடாது. அதால வரேக்க ஒரு வாளியில வாசலில தண்ணி எடுத்து வையுங்கோ. " என்று சொல்லிவிட்டு, மதியம் ஒரு மணியளவில் புறப்பட்டுச் சென்றான். போனவன் போனவன் தான். பின்னர் பிணமாகத்தான் அவன் வீடு திரும்பினான்.

மீண்டும் மல்லாகத்துக்குப் போனான் ஜெனுசன். அப்படி அவன் போவதற்கு காரணம் அழகு என்கிற லவன். அவன் தான் ஜெனுசனுக்கு போன் செய்து அழைத்திருந்தான். செத்தவீட்டில் சடலம் சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் , வழக்கம் போல 'பார்ட்டி' போடத்தான் ஜெனுசனை அழகு கூப்பிட்டிருந்தான். செத்தவீடு நடந்த இடத்தில் கசிப்பு தாராளம். அதனால் செத்தவீட்டு பார்ட்டி களைகட்டியது. போதை உச்சத்துக்கு ஏற ஏற, குடித்துக் கொண்டிருந்தவர்களின் வார்த்தைகள் அவர்களையறியாமலே தடிக்கத் தொடங்கியது.

அப்படி வார்த்தைகளால் ஆளையாள் மாறி மாறிச் சீண்டிக் கொண்டிருந்த சமயத்தில் தான் அழகு , ஜெனுசனைப் பார்த்து.

" முந்தி உங்கட குடும்பம் எங்கட குடும்பத்திட்ட அடி வேண்டி ஒளிச்சுத் திரிஞ்ச ஆக்கள் தானே" என்று சொல்ல, ஜெனுசன் சூடாகிவிட்டான். அவனும் திரும்ப கத்தத் தொடங்கினான்.

இத்தனைக்கும் அழகு குத்திக் காட்டிய சம்பவம் 1990 களில் நடந்திருந்தது. கொடுக்கல், வாங்கல் பிரச்சினை ஒன்றால் அழகுவின் அப்பப்பாவுக்கு, ஜெனுசனின் மாமா வெட்டியதால் , அவரின் கைகளில் கடும் காயம் ஏற்பட்டிருந்தது. இதற்குப் பழிவாங்க வெட்டுவாங்கியவரின் உறவினர்கள் முனைய, ஜெனுசனின் மாமா தலைமறைவாகி விட்டார். பின்னர் அப்போதிருந்த இயக்கமொன்றின் தலையீட்டால் அந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்திருந்தது.

இத்தனைக்கும் ஜெனுசனும், அழகுவும் அந்தச் சம்பவம் நடந்தபோது பிறக்கவேயில்லை. தாங்கள் பிறப்பதற்கு முன்னர் நடந்த சம்பவத்தை வைத்து, இப்போது ஜெனுசனும், அழகுவும் தமக்குள் முரண்பாட்டை உண்டாக்கினர். அதுவும் உள்ளே போன கசிப்பு அவர்களின் கோபத்தை இன்னும் கிளற, வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. செத்தவீட்டுக்கு வந்திருந்தவர்களின் முன்னால் இருவரும் கட்டிப்புரண்டு சண்டையிட்டனர். அப்படிச் சண்டை பிடிக்கும் போது, ஜெனுசன் அழகுவின் ஆடைகளைக் கிழிக்க, எல்லோர் முன்னிலையிலும் ஆடையின்றி நின்றதால் அவமானத்தால் அழகுக்கு இன்னும் கோபம் அதிகமாக, முன்பை விடவும் மூர்க்கத்தோடு ஜெனுசனைத் தாக்கத் தொடங்கினான். இப்படியே விட்டால் அது விபரீதமாகிவிடும் என்று அங்கிருந்தவர்கள் இருவரையும் விலக்கி விட்டனர். கடுமையான தூஷண வார்த்தைப் பிரயோகங்களோடு, மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான் ஜெனுசன்.

ஆனால், அவ்வளவு சுலபத்தில் அவனை அழகு விடுவதாயில்லை. அங்கிருந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொண்டு, வந்தவனின் கையில் ஒரு 'ஆமர்'.( ஆமர்-கற்களை உடைக்கப் பயன்படும் பெரியதொரு சுத்தியல்) அந்த ஆமரோடு மோட்டார் சைக்கிளில் ஏறி ஜெனுசனை அழகு விரட்டத் தொடங்கினான். அதன் பின்னர் தான், சற்றைக்கெல்லாம் ஜெனுசன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தருகே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டிருந்தான்.

### இதுதான் நடந்தது!

அழகுக்கும், ஜெனுசனுக்கும் இடையிலான சச்சரவில் நடுவீதியில் வைத்து சண்டை நடந்திருக்க வேண்டும். அதன் போது அழகு தான் கொண்டு வந்த ஆமரால் ஜெனுசனைத் தாக்கியதால் அவன் அப்படியே சரிந்து விழுந்துவிட்டான். அதனால் பயந்து போன அழகு உடனேயே புறப்பட்டுச் சென்றிருக்கிறான். போனவன் தன் சகோதரியின் மகனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு ஜெனுசன் வீழ்ந்து கிடந்த இடத்துக்கு வந்து "மூச்சிருக்கிறதா?" என்று பரிசீலித்துவிட்டு , அவன் இறந்துவிட்டான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அங்கிருந்து நழுவிச் சென்றிருக்கிறான்.

- இப்படித்தான் நடந்திருக்கும் எனச் சந்தேகிக்கின்றனர் ஜெனுசனின் உறவினர்கள்.

அதை உறுதிப்படுத்துவது போன்றுதான் சி.சி.ரி.வி காட்சிகளும் இருக்கின்றன. அதைவிட உடற்கூற்றியல் பரிசோதனை அறிக்கையில் " இறந்தவரின் தலையிலும் முள்ளந்தண்டுப் பகுதியிலும் பலமான ஆயுதத்தால் கடுமையாக தாக்கப்பட்டதில் தலைப் பகுதியில் ஏற்பட்ட இரத்த உறைவாலும் முள்ளந்தண்டு எலும்புகள் உடைந்ததாலும் மரணம் சம்பவித்திருக்கலாம்" என்று சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் பொலிஸார் போதிய அக்கறை காட்டாத தால், நடந்த கொலையை மறைக்க பொலிஸார் முற்படுகிறார்களோ என்று கருதிய அந்தப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையம் முன்பாக ஒன்றுகூடி " உரிய விசாரணை வேண்டும், நீதி கிடைக்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

(மறுபக்கம் பார்க்க)

"

ஜெனுசனும், அழகுவும் அந்தச் சம்பவம் நடந்தபோது பிறக்கவேயில்லை. தாங்கள் பிறப்பதற்கு முன்னர் நடந்த சம்பவத்தை வைத்து, இப்போது ஜெனுசனும், அழகுவும் தமக்குள் முரண்பாட்டை உண்டாக்கினர்.






## குற்றக்குறிப்பு - 1

சந்தேகநபரான அழகு என்கிற லவன் தொடர்பில் பல்வேறு அடிதடிக் குற்றச்சாட்டுகள் உள்ளன. கிராமத்தவர்களைக் கேட்டால் அழகை 'ரவுடி' என்றே எல்லோரும் சொல்கிறார்கள். அதனைவிட ஜெனுசனுக்கும், அழகுக்கும் இடையே குறைந்தது 15 தரம் சண்டை ஏற்பட்டுள்ளது. அடிக்கடி சண்டை பிடிப்பதும், பின்னர் சமாதானமாகிக் கசிப்புக் குடிப்பதுமாகவே இவர்களுக்கு இடையிலான உறவுநிலை இருந்திருக்கிறது.

இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதியில் ஒருநாள் அழகு இரும்பு சேகரிக்கச் சென்றிருக்கிறார். ஆனால் அதனை அங்கிருந்த இராணுவத்தினர் தடுத்தபோது, அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அழகு தப்பிச் சென்று, பின்னர் கைதுசெய்யப்பட்டார். ஆயினும் அதற்கு முதல் அவர் மன நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாக இருந்த மருத்துவச் சான்றிதழைக் காட்டி, அந்த வழக்கில் இருந்து அழகு விடுதலையாகியுள்ளார். அதன் பின்னர் அடிக்கடி குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொலிஸாரிடம் பிடிபடும் போதெல்லாம் அந்த மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற மருத்துவச் சான்றிதழைக் காட்டித் தப்பிப்பது அழகுவின் தந்திரமாக இருந்துள்ளது.

## குற்றக்குறிப்பு - 2

மாணவி ஒருவருடன் அங்கசேட்டை புரிந்த குற்றம் , களவு , அடிதடி எனப் பல்வேறு குற்றச்சாட்டுகள் அழகு மீது உள்ளன. ஊரின் அமைதியைக் கெடுப்பவர்களில் முதலிடம் அழகுவுக்கும் அவனது நான்கு சகோதரர்களுக்கும் தான் என்று கிராமத்தவர்கள் புலம்புகின்றனர். இதனால் குறித்த நான்கு குடும்பத்தி னரையும் (அழகு மற்றும் சகோதரர்களின் குடும்பங்கள்) தமது கிராமத்திலிருந்து வெளியேற்றுமாறு அதிகாரிகளிடம் கிராம மக்கள் அனைவரும் கையெழுத்திட்டு கோரிக்கை ஒன்றை முன்வைக்க உள்ளனர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## குற்றக்குறிப்பு - 3

சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் தேவராசா உதயகுமார் என்பவர் ,மல்லாகம் நலன்புரி நிலையத்தில் வசித்துவந்த சகோதரனது வீட்டுக்கு வந்திருந்தார். வந்த இடத்தில் அன்றிரவு மின்விளக்குகளை அணைத்துவிட்டு, இருட்டுக்குள் வைத்து அவர் சிலரால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த சம்பவத்துடன் அழகுக்கு தொடர்பு இருந்ததாகவும் , எனினும் சரியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாததால் அவர் தப்பிவிட்டார் எனவும் கூறப்படுகின்றது.

## குற்றக்குறிப்பு -

கடந்த 2017 02. 06 அன்று கஜேந்திரகுமார் கஜீபன் (வயது– 10) எனும் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த சிறுவன் தனது வீட்டில் இருந்து அம்மம்மாவின் வீட்டுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளான். தேடுதலின் பின்னர் பாழடைந்த நீர்த் தொட்டியில் இருந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த நீர்த்தொட்டி, ஆரம்ப காலத்தில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் வாகனங்களை சுத்திகரிப்பதற்கென அமைக்கப்பட்டு தற்போது, கைவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், மழை நீர் நிறைந்திருந்த அந்தப் பெரிய தொட்டிக்குள் சிறுவன் ஒருவன் தவறி வீழ்ந்திருக்க முடியாது. அது ஒரு கொலை எனவும், அந்தக் கொலையோடு அழகுவின் குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் எனவும் ஆனால் சரியான விசாரணைகள் முன்னெ டுக்கப்படாததால் அந்தக் கொலையாளிகள் தப்பிவிட்டனர் எனவும் ஊர் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். பொலிஸார் இப்போது கூட உரிய விசாரணைகளை முன்னெடுத்தால் அந்த 10 வயதுச் சிறுவனைக் கொன்ற வர்களைக் கண்டுபிடிக்கலாம் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 1 சந்தேகம்


வழக்கமாக கொலைச் சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் போது, சந்தேகநபரை விளக்கமறியலில் எடுப்பதற்கான கோரிக்கையை பொலிஸார் முன்வைத்து விளக்கமறியலில் வைத்து விசாரிப்பார்கள். ஆனால் இந்தச் சம்பவத்தின் சந்தேகநபரான அழகு என்னும் லவனை நீதிமன்றத்தில் பொலிஸார் பாரப்படுத்திய போது, விளக்கமறியலில் வைத்து விசாரிக்கும் கோரிக்கையை அவர்கள் முன்வைக்கவில்லை. இதனால் சந்தேகநபர் விசாரணைகள் ஏதுமின்றி சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவ்வாறு பொலிஸார் அவரை ஏன் விளக்கமறியலில் எடுத்து விசாரிக்கவில்லை?

## 2 சந்தேகம்

இவ்வாறான சம்பவங்களின் போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபரை அழைத்துச் சென்று ஆயுதங்கள் மீட்கப்படுவது வழமை. ஆனால் ஜெனுசனைக் கொலை செய்யப்பயன்படுத்தப்பட்ட ஆயுதம் ( ஆமர்) இதுவரை மீட்கப்படவில்லை. சந்தேகநபரான அழகு கையில் ஆமரோடு வருவது சி.சி.ரி.வி கமெராக்களில் பதிவாகியுள்ளது. அந்த் ஆயுதம் (ஆமர்) யாருடையது? யாராவது இடையில் கொண்டு சென்று அதனை வழங்கினார்களா? அல்லது அழகு எங்காவது வாங்கிக் கொண்டு வந்தாரா? அந்த ஆமரை அழகு எங்கே மறைத்து வைத்திருக்கிறார்? சம்பவ இடத்துக்கு அருகில் உள்ள சி.சி.ரி.வி கமெராக்கள் மட்டுமே பரிசீலிக்கப்பட்டது ஏன்? மரணச் சடங்கு நடந்த மல்லாகத்தில் இருந்து சம்பவம் நடந்த காங்கேசன் துறை பொலிஸ் நிலையம் வரையான சி.சி.ரி.வி கமெராக்களை பரிசீலித்தால் எல்லாக் கேள்விக்கும் விடை கிடைத்திருக்கும். அதனை ஏன் பொலிஸார் செய்யத் தயங்குகின்றனர்?

## அமைதி வருமா நல்லிணக்கபுரத்துக்கு?

நல்லிணக்கபுரத்தில் கஞ்சா, ஹெரோய்ன் என்பன தாராளமாகக் கிடைக்கின்றன. குறிப்பாக ஊசி மூலம் ஹெரோய்னை தமது உடலில் செலுத்தி போதைக்கு அடிமையாகும் இளைஞர்களின் எண்ணிக்கை நல்லிணக்கபுரத்தில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதைவிட நல்லிணக்கபுரம் என்றாலே அங்கு செல்லப் பொலிஸார் பயந்து நடுங்குவதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தப் பயத்தை சாதகமாக்கி, அந்தப் பகுதியைச் சேர்ந்த பலரும் சமூகவிரோதச் செயல்களில் பகிரங்கமாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே பொலிஸார் துணிச்சலோடு செயற்பட்டு, நல்லிணக்கபுரத்தில் உண்மையாகவே நல்லிணக்கமும், அமைதியும் உண்டாக வழி சமைக்க வேண்டும் என்பதே அங்குள்ள பெரும்பாலான மக்களின் கோரிக்கை. இந்தக் கோரிக்கைக்கு உரியவர்கள் செவிசாய்ப்பார்களா?



காரையூர் கவி

## நாளை 'இருபத்தைந்து...'

அம்மா பால் என்று
பொழுது விடியும்போதே
படலையடியில் கேட்ட
பால்காரனின் குரலுக்கு ஓடிப்போய்
பால்வாங்கி திரும்பியபோது
புண்ணாக்கு தவிடு சரியான விலை
போனமாத பாக்கியும்
ஐநூறு இருக்கிறது
ஞாபகப்படுத்திப் போகிறான்
பால்காரன்

மளிகைக்கடையில்
மாதத்தில் நாலு
மாப்பெட்டி வாங்குவதற்கு
முப்பத்திரண்டு யோக்கட்டுக்கும்
சேர்த்து அழுததற்காக
வரலாறு காணாத அளவு
வளர்ந்துபோய்க் கிடக்கிறது
இம்மாத கடைக்கணக்கு.

நாளை மறுதினத்துக்குள்
கட்டணம் செலுத்தப்படாவிட்டால்
'சூம்' கிளாஸிலிருந்து
தள்ளிவைக்கப்போவதாக
வாத்தியாரொருவர்
வாட்சப் குழுவில்
'வொய்ஸ் மெசேஜ்' போட்டிருப்பதாக
வாடியபடியே-சொல்கிறாள்
மகள்.

மாதாந்தம்
கொஞ்சங்கொஞ்சமாவது கட்டுங்கோ
இல்லாவிட்டால்
'கட்' பண்ணிவிடுவார்கள்
திகிலூட்டும் கதையை
சிரித்தமுகத்தோடு சொன்னபடியே
மின்பட்டியலை நீட்டுகிறான்
மின்மானி வாசிக்கும் பையன்.

'காஸ்' தீர்ந்து கனநாளாகியதால்
கங்குமட்டை வச்செரிச்சு
கண்முகமெல்லாம்
கறுத்துப்போய்விட்டதாய்
கண்ணாடிக்கு முன்நின்று
'கொறி கிறீம்' பூசியபடியே
கடுகடுக்கிறாள் மனைவி.

கவலை கவலையாய் வர
கறுத்துப்போய் இருக்கிறேன்.
'டொங்' என்ற சத்தத்துடன்
போனுக்கு ஒரு 'எஸ்.எம்.எஸ்'

அன்பான வாடிக்கையாளரே!
கடந்தமாத பில்தொகையுடன் சேர்த்து
இந்தமாதம்
இவ்வளவு தொகை காட்டுகிறது
சேவைத்துண்டிப்பைத் தவிர்க்க
முதலாம் திகதிக்குமுன்னர்
முழுப்பணத்தையும் செலுத்தி
வாழ்க்கையை அனுபவியுங்கள்.
ஏற்கனவே செலுத்தியிருந்தால்
இதை அழித்துவிடுங்கள்
–கறாராக காசு கறப்பதில்தான்
எவ்வளவு கச்சிதம்?

முருகா.... என்றபடியே
முன்விறாந்தையின்
மேற்சுவரில் கொழுவியிருந்த
முருகன் படத்தை பார்க்கிறேன்

அதன் அடியில் நாட்காட்டி.
என்முகத்தில் 'பிரகாசம்'
நாளை 'இருபத்தைந்து'



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?


எதுவானாலும் அனுப்பி வையுங்கள். பிரசுரிக்க காத்திருக்கிறோம். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0773165555



# பட்டதை மறந்தார் பட்டே தெளிவார்

86 மானுடற்கு மானுடன் செய்கொடுமை; வீட்டு
வளவிலென்ன வடதுருவப் பனிக்கு ளென்ன
தானறிந்தால் சினந்தெழுந்து சீறில் வீரம்
தன்பாட்டில் இருத்தலது சுய நலமாம்
ஏனெனக்கு வீண்சிக்கல் என்றே எண்ணில்
எடுத்தயிப் பிறவிக்கே அர்த்த மில்லை
மானமிக்க மானுடத்தை உருவாக்கற் காய்
மனம் வைத்து ஒழுகுபவன் தானே மனிதன்

87 கண்மூடித் தலைமுறைகள் கண்ணின் முன்னே
தறிகெட்டுக் குதிக்கின்ற அக்கிரமம் கோடி
மண்ணழிக்கும் சீரழிவோ அத்து மீறி
மனங்குமுற வைக்கிறதே ‘சேட்டை’ கூடி
கண்ணாடி முன்நின்றே கல்லெறிந்தாற் போல
கண்முன்னே காவாலித் தனம்புரி கின்றார்
குண்டர்படை போலிச் சின்ன வயதில்
குதிக்கின்ற குதிப்பைத் தான் என்ன என்போம்?

88 திருமண விழாக்கள் களை கட்டவும்
திரும்பவும் மக்கள் அலை ஒக்கவும்
ஒரு கணம் கூடப் பட்டதை நினையார்
ஒருவரும் அற்று ஏனோ? தானோ?
மறுகணம் என்ன நடக்குமோ; ஐயோ
மறுபடி அடக்கமோ முடக்கமோ; அறுவார்
திரிகிறார் அலைகிறார் தத்தம் பாட்டில்
திருந்துவார் அன்றேல் வருந்துவார் கேட்டில்

89 அருகில் நிற்கவே ஆகாத நாளில்
அடுத்தவர் தோளில் தொங்கி நிற்கிறார்
வரிசையில் நின்று வாங்க வேண்டியதை
வட்டமாய்க் குழுமி நின்று வாங்கிறார்
நெரிசல் நிலையே மீண்டும் தொடங்குது
நிற்கும் இடங்கள் மூச்சு முட்டுது
உரசல் கூட்டம் உரசித் திரிவதால்
உயிர்க்கப் போகுதே ‘கொரோனா’ மீண்டும்

90 சட்டத்தை மதிக்கும் பண்பாடு அருகி
சட்டத்தைக் கையில் எடுக்கிறார்; இந்தக்
கட்டத்தை அடைய பட்டதை மறந்து
குதிக்கிறார்! தெறிக்கிறார் தொற்று நீக்கி
அட்டத்தை அயலைக் காக்கச் சுமந்த
அத்தனை வலியையும் மறந்தவ ராகிறார்!
கொட்டத்தை அடக்கக் ‘கொரோனா’ எந்தக்
கோணத்தில் வந்து தாக்குமோ? அறியோம்.

○ வேலணையூர் சுரேஷ்



(கொரோனாக் காலப் பதிவுகள்)

---

41

# கி.ரா: நினைவுகள்

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை ‘உதயன் – சஞ்சீவி’ வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.




**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

கி.ராஜநாராயணனைக் கடைசியாகப் பார்த்தது ஏப்ரல், 2019. இந்தக் கல்வி ஆண்டின் இறுதியில் - 30, ஜுன் 2019 இல் ஓய்வு பெறுகிறேன். அதன் பிறகு புதுச்சேரிக்கு வரும்போது குடும்பத்தோடு வர முயல்கிறேன். “அமெரிக்காவில் இருக்கும் மகனும் வருவதாகச் சொல்லியிருக்கிறான். அவனது மனைவி பானுரேகா உங்களின் கதைகளை வாசித்தவர். பேரன் பெயர் முகிலன். சென்னையில் இருக்கும் மகளும் வருவார். மருமகன் பிர்ஜித்துக்கும் பாண்டிச்சேரியோடு தொடர்புண்டு. புதுச்சேரி சந்நியாசி குப்பத்தில் இருக்கும் ரானே பிரேக் லைன் என்னும் மோட்டார் வாகன உதிரிப்பாகத் தொழிற்சாலையில் வேலைசெய்தவர். அவர்கள் வழிப்பேரன் ஹர்ஜித் நந்தா. பேரன்கள் இருவரையும் உங்கள் மடியில் உட்காரவைத்துக் கதை கேட்க வேண்டும் என நினைக்கிறார்கள் எனது பிள்ளைகள். புதுச்சேரிக்கு நீங்கள் வந்தபோது சிறுவர்களாக இருந்த பிள்ளைகள், தங்கள் மடியில் உட்கார்ந்து கதைகேட்ட பிள்ளைகள்” என்று சொன்னபோது ‘எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அழைத்துவந்துவிடுங்கள். நாமெ எவ்வளவு காலம் இருப்போம்’ னு யாருக்குத் தெரியும் என்று சொன்னார்.

அப்படிச் சொன்னாலும் நூறு ஆண்டுகள் கடக்க வேண்டுமென்று ஆசை இருந்தது என்பதையும் அந்த முகம் சொன்னது. அப்படிச் சொல்லிவிட்டு வந்தபிறகு பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு தேர்வு தொடர்பாகப் போனேன். அந்த முறை புதுச்சேரி ஊருக்குள் செல்லவேண்டிய குறிப்பான வேலை இல்லை. கி.ரா.வைப் பார்க்க மட்டுமே போக வேண்டும். காலையில் அந்த வேலைக்காகச் சென்னையிலிருந்துதான் கடற்கரைச் சாலை வழியாகப் பேருந்தில் வந்து இறங்கினேன். திரும்பவும் அதே பாதையில் பயணிக்க வேண்டும் என்பதால், பிற்பகல் பல்கலைக்கழகத்தின் முதன்மை வாசலுக்கு வந்த சென்னைக்குச் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்தில் நின்ற போது ஒரு கார் அங்கே நின்றது.

சென்னை மீனம்பாக்கத்தில் ‘ஏர்போர்ட் சவாரிக்காகப் போகிறது வண்டி; அடையார் அல்லது திருவான்மையூரில் இறங்கிக் கொள்ளலாம்; பேருந்து கட்டணத்தோடு 25 ரூபாய் அதிகம் என்றார். ஏறிவிட்டேன். ஊருக்குள் போகவில்லை. கி.ரா.வைப் பார்க்கவும் இல்லை. சில மாதங்கள் கழித்து கணவதி அம்மா மரணத்தின் போது எங்கும் போக முடியாத நிலை. கண்ணுக்காக மருத்துவமனையில் இருந்தேன். பின்னர் இலங்கைப் பயணம்; கொரோனா முதல் அலையில் வீட்டடங்கு. திருநெல்வேலியிலிருந்து திருமங்கலத்துக்கு 2019 ஓகஸ்டு அல்லது ஒக்டோபரில் பாண்டிச்சேரியில் போய் சில நாள்கள் தங்கிவிட்டுப் பழைய நினைவுகளை மீட்டுக்கொள்ள அவர்களும் தயாராகவே இருந்தனர். மீட்டப்படும் நினைவுகளில் ஒன்றாகக் கி.ரா. தாத்தாவைச் சந்திப்பதும் இருக்கவேண்டும் என்று திட்டமிட்டார்கள்.



> இப்போது அவரது இறப்புச் செய்தி வரும்போது கொரோனாவின் இரண்டாவது அலையின் பயமுறுத்தல். பாண்டிச்சேரி நினைவுகள் போலவே கி.ரா. வின் நினைவுகளும் காற்றிலேயே கரைந்து கொண்டிருக்கின்றன.

பெரிய தேடுதல்களோ, திட்டமிடுதல்களோ இல்லாமல் மகள் சிநேகலதாவையும் மகன் ராகுலனையும் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள முத்தியால் பேட்டை மடத்தா பள்ளியில் சேர்த்தேன். கத்தோலிக்க மடத்துச் சகோதரிகள் நடத்தும் அந்தப் பள்ளிக்குப் புனித ஜோசப் பள்ளி என்று பெயர் இருந்தாலும், அந்தப் பள்ளியை அந்தப் பெயரால் அழைப்பதில்லை. பெண்களால் நிர்வாகம் நடத்தப்பட்டதால் அனைவரும் மடத்தா பள்ளி என்றே அழைத்தனர். பெரிய பள்ளிகள் இருக்கும் இடங்களில் வீடுகள் வாடகைக்குக் கிடைக்கவில்லை. வீட்டு வாடகை குறைவாக இருந்த பகுதியில் பெரிய பள்ளிகள் இல்லை.

நான் பணியாற்ற இருந்த நாடகத்துறை பகுதி ஜமீந்தார் கார்டன் என்று அழைக்கப்பட்டது. பெரிய பெரிய வீடுகள் இருந்தன. ஆனால் வாடகை அதிகம். முத்தியால்பேட்டை அங்காளங்குப்பம் பகுதியில் தான் வாடகை குறைவாக இருந்தது. என்னோடு மதுரை காமராஜர் பல்கலையில் முதுகலை படித்துவிட்டு, தஞ்சை மாவட்ட அரசர் கல்லூரியில் பணியாற்றிய பின், புதுவைக்கு மாறிய நண்பர் ஆ.திருநாகலிங்கம் தமிழ்த் துறையில் விரிவுரையாளராக இருந்தார். அவரது வீடு அங்காளங்குப்பத்தைத் தாண்டிய சோலைநகரில் இருந்தது. அதுவும் கடலோரத்தில் இருந்த ஒரு குப்பம் தான். நாடகத்துறையில் பயிற்றுநராக இருந்த வ.ஆறுமுகமும் அங்குதான் இருந்தார். மீனவர்கள் வாழும் பகுதிகளைக் ‘குப்பம்’ என்ற பெயரில் அழைத்தாலும் நடுத்தரவர்க்கம் அங்கு அதிகமாகும் பகுதிக்கு நகரெனப் பெயர் சூட்டிக் கொள்வது வழக்கமாக இருந்தது.

மகள் மடத்தா பள்ளியில் ஐந்து வகுப்புகள் முடித்தவுடன் புதுவை ஏழாம் புனித நாள் மேல்நிலைப்பள்ளியில் சேர்த்த போது மகனையும் மூன்றாம் வகுப்பில் சேர்த்தோம். அவன் நான்காம் வகுப்பு வரும்போது அதன் கிளையொன்றை முதலியார் பேட்டைப் பகுதியில் ஆரம்பித்து அங்கே மாற்றிவிட்டார்கள். பள்ளியை மாற்றவில்லை. பள்ளிக்கூட வாகனத்தில் காலை 7 மணிக்கு ஏற்றி அனுப்புவோம். மகளோ அப்போதே மிதிவண்டிப் பயணம். இருவருக்கும் அந்தப் பள்ளிகளைப் பார்க்கவேண்டும். அத்தோடு புதுச்சேரியில் 30 ஆண்டுகளில் நடந்துள்ள மாற்றங்களைப் பார்த்துவிட நினைத்தார்கள். அவர்கள் பார்க்க நினைத்த பட்டியலில் கி.ரா. தாத்தாவும் இருந்தார். தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றும் மகனுக்கு அமெரிக்காவில் பணி. அங்கு அவனது வேலைக்கான ஒப்பந்த காலம் ஆறு ஆண்டுகள். அதற்குள் வந்து போவதில் சில சிக்கல்கள். அமெரிக்காவின் ட்ரம்ப் போட்ட விதிகளில் பலரும் கலங்கியிருந்தார்கள். ஓய்வுக்குப் பின் நான் டிசம்பரில் இலங்கைக்குப் போகும் பயணத்திட்டம் ஒன்றை வைத்திருந்தேன். அதனால் புதுவை போகும் திட்டத்தை நானும் தள்ளிப்போட்டேன்.

இலங்கை போய்வந்து ஒரு மாதத்துக்குள் கொரோனாவும் வந்து சேர்ந்துவிட்டது. 2020 பெப்ரவரி தொடக்கம் டிசெம்பர் வரை ஊரடங்கு; வீட்டங்கு எனப் பயணங்களே இல்லாத நாள்கள். அதற்குள் திருநெல்வேலியிலிருந்து திருமங்கலத்துக்கு இடப்பெயர்வு. 2020 பெப்ரவரியில் நடந்திருக்கவேண்டிய அந்தப் பெயர்வு டிசெம்பரில் நடந்தது. இடையில் மருமகனும் மகளும் புனேவுக்கு இடம்பெயர்ந்தார்கள். எல்லாம் சேர்ந்து புதுச்சேரிக்குப் போகவே இல்லை. கி.ரா.வைப் பார்க்கவும் இல்லை. இடையில் கணவதி அம்மாவின் மரணச் செய்தியைக் கூடப் போய்ப் பார்த்து விசாரிக்க முடியவில்லை. இப்போது அவரது இறப்புச் செய்தி வரும்போது கொரோனாவின் இரண்டாவது அலையின் பயமுறுத்தல். பாண்டிச்சேரி நினைவுகள் போலவே கி.ரா. வின் நினைவுகளும் காற்றிலேயே கரைந்து கொண்டிருக்கின்றன.

(நினைவுகள் முற்றும்)

# எத்தனை கோடி இன்பம் வைத்தாய்.....



ம. மயூரபாலன்

இரவு நேரத்திலே நகர்வலம் வந்து கொண்டிருந்த அரசன் ஒரு பிச்சைக்காரனைக் கண்டான். அவன் கிழிந்து போன அழுக்கான உடைகளை அணிந்திருந்ததுடன் மிகவும் பலவீனமாகவும் இருந்தான். அதனைக் கண்ட அரசன் அவன் மேல் மனம் இரங்கி அவனைத் தனது அரண்மனைத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தினான். அவனும் கடுமையாக உழைத்து அரசனின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி உயர்ந்த பதவிகளை அடைந்தான். அவனது முயற்சியையும் நேர்மையையும் கண்ட அரசன் அவனைத் தனது மந்திரி ஆக்கினான். அவன் தினமும் வேலை முடிந்த பின்னர் வீடு செல்லும் வழியிலே உள்ள பாழடைந்த வீட்டின் உள்ளே சென்று சில நிமிடங்கள் கழிப்பதுண்டு.

அவனது வளர்ச்சியில் பொறாமை கொண்ட சிலர் அதனை அவதானித்துவிட்டு அரசனிடம் சென்று "அந்த மந்திரி உங்களது செல்வங்களை களவாடி எடுத்துச் சென்று அந்தப் பாழடைந்த வீட்டின் உள்ளே மறைத்து வைக்கிறான்" எனப் புகார் அளித்தார்கள்.

அரசனோ அதனை நம்ப மறுத்துவிட்டான். இருப்பினும் மீண்டும் மீண்டும் அவர்கள் கூறியபோது அரசனுக்கும் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் இரவு அரசன் அந்த மந்திரி வேலை முடிந்து போகும் பொழுது அவனைப் பின்தொடர்ந்து சென்றான். மற்றவர்கள் கூறுவது போல அவன் வீடு செல்லும் வழியிலே ஒரு பாழடைந்த வீட்டின் உள்ளே சென்றான். அவன் உள்ளே சென்ற சில நிமிடங்களில் அரசன் அந்த வீட்டின் கதவை தட்டினான. "உடனே கதவைத் திற" என அரசன் அதட்டினான்.

அதற்கு அந்த மந்திரி "தயவு செய்து உள்ளே வராதீர்கள் இது நீங்கள் வருவதற்கு உகந்த இடமல்ல" என மீண்டும் மீண்டும் கூறினான். ஆனால் அரசன் பலவந்தமாக உள்ளே நுழைந்து பார்த்த பொழுது அங்கு ஒரு துருப்பிடித்த பழைய பெட்டி இருப்பதைக் கண்டான். "அந்தப் பெட்டியை திற" என அரசன் உத்தரவிட்டான். அவனும் மிகவும் தயக்கத்துடன் அந்தப் பெட்டியைத் திறந்தான். உள்ளே பார்த்த பொழுது அங்கே கிழிந்துபோன அழுக்கான ஆடைகள் இருந்தன. "இவைகளெல்லாம் என்ன?" என அரசன் கேட்டான். அகற்கு அந்த மந்திரி "அரசனே நான் உங்களை முதல்முறை சந்தித்தபோது இந்த உடைகளைத்தான் அணிந்திருந்தேன். ஆனால் உங்களது தயவினால் நான் இன்று இந்த உயர்ந்த இடத்தை அடைந்துள்ளேன். இருப்பினும் நான் எங்கிருந்து வந்தேன் என்பதையும் இந்தப்பதவியில் நான் இருப்பதற்கு யார் காரணம் என்பதையும் நான் ஒரு போதும் மறக்க விரும்பவில்லை. எனவேதான் அதனை மீண்டும் மீண்டும் எனக்கு நினைவூட்டுவதற்காக தினமும் இரவு இவற்றை நான் பார்க்க வருகிறேன்" என கூறினான். மந்திரியின் நன்றி உணர்வைப் பார்த்ததும் அரசன் மிகவும் நெகிழ்ந்து போனான். இது அந்த மனிதனின் கதை. இப்பொழுது நமது கதையைப் பார்ப்போம். இந்த உலகம் தோன்றி நான்கு அல்லது ஐந்து பில்லியன் வருடங்கள் ஆகின்றன எனவும் மனிதன் தோன்றி இரண்டு மில்லியன் ஆண்டுகள் ஆகின்றன எனவும் சில விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன. காலம் காலமாக இருந்து வந்த மண்ணில் இருந்து ஏதோ ஒரு சக்தி ஒரு பொம்மையை உருவாக்கியது. அந்த பொம்மைக்கு காது மூக்கு என அவயவங்களை கொடுத்து உயிரையும் கொடுத்தது. அந்தப் பொம்மை இன்று நடக்கின்றது, சிரிக்கின்றது, அழுகின்றது, உயிருடன் உலவுகின்றது.

நாங்கள் தான் அந்த மண் பொம்மைகள். உலகம் தோன்றிய காலத்தோடு ஒப்பிடும் பொழுது நாம் இங்கே இருக்கும் காலம் கண்ணிமைக்கும் பொழுதிலும் மிகவும் குறைந்ததாகும். அவ்வாறான மிகவும் குறுகிய காலத்தில் நாம் தேவையற்ற விஷயங்களில் ஈடுபட்டு துன்பக் கடலில் மூழ்கி வாழ்க்கையை வாழலாம் அல்லது எந்த சக்தி நமக்கு இந்த அற்புதமான வாழ்க்கையைத் தந்ததோ அந்த சக்தியை உணர்ந்து நன்றியுடன் வாழலாம். இந்தத் தெரிவு நமக்கு இப்பொழுது உள்ளது. நம்முள்ளே ஒரு சக்தி நம்மை இயக்கிக் கொண்டு இருக்கின்றது என்பதனை கேட்கும் பொழுது அது உண்மை போல தெரிகின்றது. ஆனால் அந்த சக்தியை உணரவேண்டும் என ஒருவர் கூறினால் அதனை புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. ஏனெனில் நாம் அதற்கு ஒரு பொழுதும் பழக்கப்படவில்லை. அத்துடன் யாரும் நமக்கு அதனது அவசியம் பற்றி கற்றுக் கொடுக்கவும் இல்லை.

இப்பொழுது நமக்கு உள்ள ஆயிரத்தெட்டு வேலைகளின் மத்தியிலே இவைகளெல்லாம் தேவையற்ற விடயங்கள் போல் தோன்றுவது இயல்புதான். ஆனால் உண்மையிலே பார்த்தோம் என்றால் யார் ஒருவன் வாழ்வில் உண்மையான அமைதியை உணருகிறானோ அவனது வாழ்க்கை மிகப்பெரிய ஏற்றத் தாழ்வுகள் இல்லாது சீராக ஓடுவதைக் காணமுடியும்.


> ஒரு பட்டம் எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும் அதனது நூல் தரையில் உள்ள ஒருவரது உறுதியான கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகும். கயிறு அறுந்த பட்டத்தின் கதி என்ன என்பதனை நாம் பல தடவைகள் பார்த்திருக்கின்றோம்.

ஒரு பட்டம் எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும் அதனது நூல் தரையில் உள்ள ஒருவரது உறுதியான கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகும். கயிறு அறுந்த பட்டத்தின் கதி என்ன என்பதனை நாம் பல தடவைகள் பார்த்திருக்கின்றோம். அது எங்காவது ஒரு மின்சாரக் கம்பியிலோ அல்லது மரங்களிலோ சிக்குண்டு மழையிலும் வெயிலிலும் அதனது காகிதங்கள் எல்லாம் நனைந்து பழுதடைந்து குச்சிகள் மட்டுமே எஞ்சியிருக்கும். பறந்து கொண்டு இருக்கும் பட்டத்தில் உள்ள அழகை அது இப்பொழுது இழந்துவிட்டது.

நாமும் சில வேளைகளிலே அந்தப் பட்டம் போல நமது வாழ்க்கையில் எங்கோ சிக்குப்பட்டு இருப்பதாக உணர்கிறோம்.

அடுத்த வேளை உணவுக்கே வழிதெரியாது இருந்த பாரதியார் "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா" என பாடினார். அதே பாடலில் "முக்தியென்றொரு நிலை சமைத்தாய். அங்கு முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்" எனக் கூறினார். இந்தப் பாடல்கள் எல்லாம் நமக்கு ஏதோ ஒரு செய்தியைத் தருகின்றன.


இவை வெறுமனே மனப்பாடம் செய்வதற்கான பாடல்கள் அல்ல. இவை நமக்கு ஒரு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுக்கவேண்டும். நாம் நம் உள்ளே உள்ள அந்த உயிர்சக்தியை அறிந்து அதனை உணர்வதற்கு அவை வழிவகுக்க வேண்டும். அதற்கான தேடல் நம் உள்ளே ஏற்பட வேண்டும். ■





# ஊர்ப்புதினம் 12

இராகவன்



ஐயாப்பா வீட்டுக்கடுக்க இருக்கிறது சிவத்தனமக்கை வீடு. சிவத்தனமக்கை கொஞ்சம் வளத்தி. நரைச்ச தலை. ஒடுங்கின முகம். அவவுக்கு தொய்வு வருத்தமுமிருக்கு. அதால கதைக்கேக்குள்ள கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் கதைப்பா. ஒவ்வொருக்காலும் கதைக்கேக்குள்ள இழுத்து இழுத்துத்தான் மூச்சு விடுவா.

அவவுக்கு இரண்டு பொம்பிளைப் பிள்ளையள். இரண்டு பேரும் ரீச்சர்மார். மூத்தவ மங்களம் ரீச்சர். கண்ணாடி போட்டிருப்பா. அவ கொஞ்சம் கண்டிப்பானவா என்பது அவவின்ர முகத்திலேயே தெரியும். அவ சிரிக்கிறதைப் பாக்கிறதே அபூர்வம். கொஞ்சம் பொதுநிறம். மங்களம் ரீச்சரின்ர மனிசனும் வாத்தியார்தான். அவரின்ர பெயர் சோமஸ்கந்தசிவம். ஊருக்குள்ள ஒருத்தருக்கும் இந்தப் பேரில்லை. அவர் நல்ல தொக்கையான உரயமான செக்கச்சிவந்தமனிசன். அப்ப அவர்தான் யாக்கரு விநாயகர் வித்தியா லயத்தில அதிபராயிருந்தவர்.

அவரின்ரை பேரை முழுமையாகச் சொல்லுறதில சிரமத்தை எதிர்நோக்கிறாக்கள் அவரை மூண்டு விதமாக அழைப்பினம். சிலர் 'அதிபர்' எண்டு இன்னும் சிலர் சோமு வாத்தியார் எண்டும் வேறுசிலர் பிரிஞ்சிப்பல் எண்டும் அழைச்சினம். அவர் அப்ப பாகிஸ்தான் பிரதமராயிருந்த 'ஜியாவுல்ஹக்' மாதிரியே இருந்ததால ஊருக்குள்ள உலக அரசியல் கதைக்கிறாக்கள் அவரை 'ஜியாவுல்ஹக்' எண்டு சொல்லுவினம். அவருக்கு நல்ல தடிச்ச குரல். எப்பவும் பெலத்துத்தான் கதைப்பார்.

ஆனால் தங்கமான மனிசன். மங்களம் ரீச்சரும் அப்ப யாக்கரு விநாயகர் வித்தியாலத்திலதான் படிப்பிச்சசவ. அவையளுக்கு ஒரேயொரு பொம்பிள்ளைப் பிள்ளை. 'ஆதி' எண்டு பேர். என்னைவிட அஞ்சாறு வயது மூப்பு. அவவும் தகப்பனைப் போல நல்ல தொக்கை நல்ல உயரம். நல்ல சிவப்பி. தடிச்ச குரல். படிப்பில நல்ல கெட்டிக்காரி. சிவத்தனமக்கையின்ர இரண்டாவது மகள் நல்லம்மா ரீச்சர். அவ நல்ல முகவெட்டான சிவப்பி. எப்பவும் கலகல வெண்டு கதைச்சுக் கொண்டிருப்பா. தாயைப் போலதான் மங்களம் ரீச்சர், நல்லம்மா ரீச்சர் இரண்டு பேருக்கும் தொய்வு வருத்தமிருந்தது. அதால அவையளும் கதைக்கேக்குள்ள கொஞ்சம் சிரமப்படுவினம். ஊருக்கு மாற்றலாகி வாறதுக்கு முன்னம் அவையள் மூண்டுபேரும் மலையகத்திலதான் படிப்பிச்சவை. ஊரோடை வரேக்குள்ள தொட்டாட்டு வேலை செய்யிறதுக்கெண்டு ஒரு பொடியனை அங்கையிருந்து கூட்டிக் கொண்டு வந்தினம். அந்தப் பொடியன்ர பெயர் அருணாசலம். நல்ல உடம்புக் கட்டான சிவலப் பொடியன். வட்டமுகம், பென்சில் மீசை, அளவான தலைமயிர். செல்ல வண்டியுமிருக்கு. கீச்சுக்குரலிலதான் ஆள் கதைப்பார். சீத்தைத் துணியில தைச்ச சாறத்தைச் சண்டிக்கட்டாய்க் கட்டிக் கொண்டு திரிவார். எப்பிடியும் என்னை விடப் பத்து வயது மூப்பாயிருக்கும். ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில ஆடுகளுக்கு குழை வெட்டக் கொக்கத் தடியோட திரிவார். என்னோட்ட பொடியளுக்கு அருணாசலத்தைக் கண்டால் காணும் முசுப்பாத்தி பண்ணத் தொடங்கிவிடுவாங்கள். ஒழிச்சிருந்து "டேய் அருணாசலம்" எண்டு கூப்பிடுவாங்கள். ஆள் அதையெல்லாம் காதில விழுத்தாமல் தன்ரபாட்டில கொக்கத் தடியோட போய்க் கொண்டிருக்கும். அதோட விடமாட்டாங்கள். அஞ்சாறு பேராச் சேந்து ஆளுக்குப் பின்னால 'ஆட்டுச்சலம், மாட்டுச்சலம், மனிசச்சலம், அருணாச்சலம் எண்டு கோரஸாப் பாடிக் கொண்டு போவாங்கள். முதல்ல ஆள் தன்ர பாட்டில போய்க் கொண்டிருக்கும். அவங்களும் விடமாட்டாங்கள்.

இன்னும் பெலத்த சத்தத்தில பாடிக் கொண்டு பின்னால போவாங்கள். எல்லாத்துக்கும் ஒரு லிமிற் இருக்குத் தானே? அந்த லிமிற்றைத்தாண்டினாப் போல அருணாசலம் கொக்கத்தடியோட ஒரு திரும்பல் திரும்பும்.

(தொடரும்)

© 2000 Agfa-Gevaert N.V.

# பிணங்களின் ரயில்

14

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை




(முற்றும்)